TAMIL NADU LEGISLATIVE LIBRARY
7 - DEC 1983
MADRAS-600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1983 மார்ச் 4.

மாசி, 20, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு—2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

'' சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி''.

முன்னே தான் சமமாக இருந்து, பின்பு தன்னிடம் வைக்கப் பட்ட பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல் போல் அமைந்து ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவு நிலைமையைப் போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறியிடப் பெற் றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்.

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

திரு. என். வரதராஜன் : துணைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க் கிறேன். 1976 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை சுமார் 7, 8 ஆண்டுக் காலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லா மல் ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள், நகராட்சிகள் செயலாற்றி வருவது தமிழகத்தில் ஜனநாயக வளர்ச்சிக்கு மிகப் பெரிய அபகேடு என்று சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் வறட்சியை சந்திக்கிறபோது இப்படிப்பட்ட தேர்ந்தெடுக் கப்பட்ட அமைப்புகள் இல்லாததால் எவ்வளவு சிரமங்களை நாம் தாங்கவேண்டியிருக்கிறது என்பதை நாம் பார்க்க முடிகிறது. நான் ஆள்கிற அரசை கேட்க விரும்புவதெல்லாம் தேர்தலில் அரசியல் வெட்ப, தட்ப நிலையை பார்க்கிறீர்களா ? இந்த ஏழு ஆண்டுக்காலத்தில் ஆளும் கட்சிக்கு இருக்கக்கூடிய..

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்கின்ற போது அதை நான் ஆதரிக்கிறேன் அல்லது நிராகரிக்கிறேன் என்று தான் சொல்லலாம். சட்ட முன்வடிவிலே இருக்கிற ஷரத்துக் கள் பூராவும், அல்லது அதிலே இருக்கின்ற சாதக, பாதகங்கள் பூராவும் பேசுவதற்கு அறிமுக நிலையில் வழிவகை இல்லை என்று கருதுகிறேன். துணைத் தலைவர் அவர்கள் தான் இதற்கு முடிவு கூறவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஜெனரல் டிஸ்கஷனில் அதை பேசிக்கொள்ளலாம். இந்த நிலையில் மெரிட்ஸ் ஆப் தி பில்லை பற்றி பேச முடியாது. ஆதரிக்கிறீர் களா அல்லது எதிர்க்கிறீர்களா என்பதை மட்டும் சொல்லி முடித்துக் கொள்ளுங்கள். விரிவாகப் பேசினால் இந்த ஏழு பில்களுக்கே இன்றைக்கு நேரம் இருக்காது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : ஏன் எதிர்க்கிறோம் என்பதைக் கூறுவதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை சுருக்க மாகச் சொல்ல வேண்டும்.

1983 மார்ச் 4]

திரு. என். வரதராஜன் : துணைத் தலைவர் அவர்களே, இது தமிழ் நாட்டினுடைய மிக முக்கியமான ஜனநாயக பிரச்சினையாக இருப்பதால் நாம் கடுமையாக ஆட்சேபணை தெரிவிக்க வேண்டியிருக்கிறது. பலமுறை இந்த சட்டமன்றத்திலே தேர்தல்கள் நடத்தப்படும், இனிமேல் இப்படிப்பட்ட திருத்தச் சட்டம் வராது என்று வாக்குறுதி அளிக்கப்பட்டு, அவை நம்முடைய சட்டமன்ற ரெக்கார்டுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவேதான் இதை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன். சட்ட திருத்தம் வருகிற இப்போதாவது, அடுத்து வருகிற குறைந்த காலத்திற்குள் தேர்தல் நடத்துவதற்கான தேதியை அறிவிப்பதும் விவாதத்தில் வரவேண்டுமென்று வற்புறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை அறிமுகம் செய்வதை நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எதிர்க்கின்றேன். பொதுவாக, இன்றைக்கு இருக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகளுக்கு ஒரு காரணம் சொல்லப்படுகிறது. உச்ச நீதி மன்றத்தில் வழக்கு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த மாதிரி தாவாக்கள் வராமல் இருப்பதற்கு அனைத்துக் கட்சிகளையும் கூட்டி ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே பேசப்பட்டது. ஆனால், இன்றைக்கு விசாரணையை விரைவுபடுத்துவதற்காக மனுவை தாக்கல் செய்திருக்கிறோம். ஆகவே, உச்ச நீதி

மன்றத்தில் இது விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்ட பிறகு தேர்தலை நடத்தலாம் என்று இங்கே சொன்னாலும்கூட, 6 மாதம் இந்தத் தேர்தலைத் தள்ளிப் போடக்கூடிய முறையிலே ஒரு ஏற்பாடாக இந்தத் திருத்தம் வருகிறது. அந்த அளவுக்குக் காலம் தேவை இல்லை. குறுகிய காலத்திற்குள்ளாக தேர்தல் நடத்த வேண்டியது மிக அவசியம். ஏற்கெனவே, வறட்சியின் கொடுமையால் வாடிக் கொண்டிருக்கின்ற தமிழக மக்களுக்குக் குறைந்த பட்சம் ஜனநாயக ரீதியாக............

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே தெரிவித்ததை இதிலேயும் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டமுன்வடிவிலே இருப்பவை பூராவையும், ஆய்வு நிலையிலேதான் ஆராய வேண்டும். இதிலே 3 மாதம் என்று சொல்லப்பட்டிருந்தாலும், விரைவிலே தேர்தலை நடத்துவதற்கு அரசு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : ஒவ்வொரு திருத்தச் சட்டத்தின் போதும் இப்படித்தான் சொல்லப்படுகிறது. இப்படி சொல்லிச் சொல்லியே, பஞ்சாயத்து தேர்தல்களை நடத்தாமல் தள்ளிப் போடுவது இந்த அரசின் ஒரு பெரிய சாதனையாக இருக்கிறது. இந்தச் சாதனையை விட்டுவிட்டு ஜனநாயகபூர்வமாக தேர்தலை நடத்துவது அவசியம். 6 மாதம் தள்ளிப் போடுவது சரியல்ல. ஆகவே, அந்த அடிப்படையில் இதை நான் எதிர்க்கிறேன்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா வாடிக்கையாகக்கொண்டு வரக்கூடிய ஒரு நிலையில் இருக்கிறது. இது ஜனநாயக அமைப்புக்கு புறம்பாக இருக்கிறது. ஏதோ உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது என்ற காரணத்தைத் தொடர்ந்து காட்டுவது ஒரு அரசுக்கு நியாயமான கொள்கையாக இருக்க முடியாது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். இன்றைக்கு ஜனநாயக அமைப்பே சீர்குலைக்கப்பட்டிருக்கின்ற நிலையில் தனி அதிகாரிகளுடைய நிலை என்ன என்பதை கிராமப் புறங்களில் பார்ப்போமானால், மிகப் பின்தங்கிய நிலையில், ஜனநாயக அமைப்பையே தகர்க்கின்றதாக இருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்களே அறிவார்கள். மக்கள் குழுக்களாக இருந்தாலும், அவைகளும் நல்ல முறையில் இயங்காத ஒரு நிலைமையிருக்கிறது. நாங்களெல்லாம் அபிப்பிராயம் கூறும்போது, பழைய சட்டத்தின் அடிப்படையில் தேர்தலை வைத்து புதிய சட்டத்தை அமுல் நடத்திய பின்னால், அதன்படி தேர்தலை நடத்துவதற்கு அரசுக்கு அதிகாரம் இருந்தும் அதைத் தள்ளி போடுவது என்பது ஜனநாயக அமைப்பைச் சீர்குலைப்பதாக இருக்கும் என்பதை........

1983 மார்ச் 4]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, இவைகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்கின்ற நேரத்தில் விரிவாக, விளக்கமாக அவர்கள் பேசினால் நன்றாக இருக்கும். மேலும் ஜனநாயகத்தினுடைய தொட்டிலாக விளங்கக்கூடிய பஞ்சாயத்துத் தேர்தல்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு யார் தடை பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், இந்திரா காங்கிரஸ் நண்பர்கள்தான் சுப்ரீம் கோர்ட்டிலே தடை பெற்றிருக்கிறார்கள். ஆகவே, சுப்ரீம் கோர்ட்டிலே தடை பெற்றுவிட்டு, இந்தத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்பது எப்படி நியாயமாக இருக்கும்? அப்படிச் சீக்கிரமாக நடத்த வேண்டுமென்று சொன்னால், உடனடியாக நீங்கள் மேல் முறையீடு செய்திருக்கிறீர்களே, அந்த மேல் முறையீட்டை வாபஸ் பெற்றுக்கொள்ளுங்கள்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு கட்சியைக் குறிப்பிட்டுக் கூறினார்கள். இந்திரா காங்கிரஸ்தான் தடையைக் கோரியிருக்கிறது, தடையைப் பெற்றிருக்கின்றது என்று கூறினார்கள். அதை வாபஸ் பெற வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். எங்கள் கட்சியின் சார்பாக........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் கோர்ட்டில் இருப்பதை வாபஸ் வாங்க வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அமைச்சர் சொன்னதையே வாபஸ் வாங்கவேண்டுமென்று சொல்கிறார். எப்படி சரி அது?

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நான் தவறான தகவலை இந்த அவைக்கு கொடுக்கவில்லை. காரணம், அங்கே மேல் முறையீடு செய்திருக்கின்றவரின் பெயர் வெங்கடாசலம் பிள்ளை. அவர் நெமிலி பஞ்சாயத்தினுடைய முன்னாள் தலைவர்; காங்கிரஸ்காரர் ; இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்; அவர்தான் மேல் முறையீடு செய்திருக்கிறாரே தவிர வேறு எந்தக் கட்சியிலேயும் அல்ல. ஆகவே, அதை மறுக்கிறாரா என்று நான் கேட்கிறேன்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திற்குச் செல்வது என்பது ஒரு கட்சிதான் செல்ல வேண்டுமென்பது அல்ல; ஒவ்வொரு தனிப்பட்ட நிலைக்கும், தனிப்பட்ட நபருக்கும்கூட உரிமையிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் விளக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.

[1983 மார்ச் 4

திரு. என். எஸ். வி. சித்தன் : ஒரு கட்சியினுடைய பெயரை அமைச்சரவர்கள் சொல்லியிருக்கும்பொழுது பதில் சொல்ல வேண்டாமா ? அதற்கு வாய்ப்பு கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பலராமன் அவர்களும் சட்டமன்ற உறுப்பினர்தான். அவர் பேசலாம். திரு. சித்தன் அவர்கள் உட்கார வேண்டும். விளக்கத்தை நான் சொல்லிவிடுகிறேன். திரு. பலராமன் அவர்கள் பேசும்பொழுது, தனிப்பட்ட முறையில் யாரும் போகலாம் என்று சொன்னார்கள். கட்சியில் இருப்பவர்கள், கட்சியை எதிர்த்து தனிப்பட்ட முறையில் போக முடியாது.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தனி நபருக்கும் ஜனநாயக அமைப்பிலே சட்ட ரீதியாக நியாயத்தின் அடிப்படையில் உரிமை இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் நேரத்தில் இந்த விவரங்களைச் சொல்லலாம். இந்த இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜிலேயே இதுபோன்ற விளக்கங்களைக் கொடுத்துக் கொண்டிருப்பது சரியாக இருக்க முடியாது என்பதைத்தான் சொல்லுகின்றேன். காரணம், இது ஏன் நிறுத்தப்பட்டிருக்கின்றது, ஏன் தனி அதிகாரிகளை நியமிக்க வேண்டிய ஒரு பொறுப்பிலே நாம் இருக்கிறோம் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். வேண்டுமென்றே, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவோ அல்லது இந்த அரசாங்கத்தின் மீது களங்கத்தைக் கற்பிக்க வேண்டுமென்ற காரணத்திற்காகவோ தயவு செய்து கருத்துக்களைச் சொல்ல வேண்டாமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கூறுவதெல்லாம், இத்தனை சிக்கல்களுக்கு மத்தியிலே இருக்கும்பொழுது பழைய முறைப்படி தேர்தலை நடத்தி, இந்தச் சட்டத்தை அமல் நடத்திய பின்னால் ஏன் புதிய முறையில் தேர்தலை நடத்தக் கூடாது என்பதுதான் என்னுடைய கோரிக்கையும், வேண்டுகோளும் ஆகும். இந்த நிலையில் மாண்புமிகு அமைச்சரவர்களும், அரசும், பழைய நிலையிலேயாகிலும் தேர்தலை விரைவாக நடத்தி, ஜனநாயகத்தைக் காக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசையும், அமைச்சரவர்களையும் நான் கோருகிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டங்களை அறிமுகப்படுத்தும் நேரத்தில், இந்த அவையிலேயே பல தடவைகள் ஆறு மாதங்கள் நீட்டித்துக்

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1983 மார்ச் 4] [திரு. சோ. அழகர்சாமி]

கொடுத்தால் போதும், அதற்குள்ளே தேர்தலை நடத்தி விடுவோம் என்று அமைச்சரவர்கள் வாக்குறுதி அளித்தும்கூட, தொடர்ந்து நீடித்துக் கொண்டே போகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுது திரு. திருவேங்கடம் அவர்களைத்தான் பேசுவதற்கு அழைப்பதாக இருந்தேன். தாங்கள் கையை உயர்த்தியதும் ஏதோ பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பத்தான் போகிறீர்கள் என்று நினைத்தேன். இப்பொழுது பேச ஆரம்பித்து விட்டீர்கள். திரு. திருவேங்கடம் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

திரு. சோ. அழகர்சாமி: நான் ஆரம்பித்து விட்டேன். சுருக்கமாக முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி முடித்து விடுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: இப்பொழுது நகராட்சிகளிலோ அல்லது ஊராட்சிகளுக்கோ அல்லது ஊராட்சி மன்றங்களுக்கோ தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாததால் எவ்வளவு பணிகள் மோசமாக நடக்கின்றன அல்லது சீராக நடைபெறவில்லை என்பதைப் பற்றியெல்லாம் அதிகமாகச் சொல்வதற்கு இப்பொழுது நேரமில்லை. தொடர்ந்து ஒவ்வொரு முறையும் வாக்குறுதி கொடுக்கிறார்கள். சென்ற தடவை சொல்லும்பொழுது கூட அமைச்சரவர்கள் கட்டாயம் டிசம்பருக்குள் தேர்தல் நடத்தி விடுவோம் என்று சொன்னார்கள். இப்பொழுது அரசியல் காரணம் என்று கூறுகிறார்கள். இப்பொழுது மாநகராட்சித் தேர்தலை நடத்துவதற்கு எந்தவிதமான தடையோ, கோர்ட் தடைவிதிக்கவோ இல்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே நடந்த அனைத்துக் கட்சி தலைவர்களுடைய கூட்டத்திலேயே முடிவெடுக்கப்பட்டது. இருக்கின்ற நிலைமைகளெல்லாம் அனைத்துக் கட்சித் தலைவர்களிடத்திலேயும் சொல்லப்பட்டு, அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். மேல் முறையீடு செய்து, சுப்ரீம் கோர்ட்டிலே, உச்ச நீதிமன்றத்திலே அங்கே தடை பெறும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால் இவைகளையெல்லாம் சீக்கிரமாக, வெகு வேகமாக முடித்துக் கொண்டு இந்தத் தேர்தலை நடத்தலாம் என்ற முடிவைத்தான் அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி ஏற்றுக்கொண்டுவிட்டு இங்கே வந்து இப்போழுது மாமன்றத்திலே மாற்றுக் கருத்துக்களைச் சொல்வது என்பது சரியாக இருக்க முடியாது. ஆகவே, நாம் உடனடியாக என்னென்ன நடவடிக்கைகளை உச்ச நீதிமன்றத்திலே எடுக்க வேண்

டுமோ, அந்த நடவடிக்கைகளையெல்லாம் உரிய நேரத்தில் எடுத்துக் கொண்டிருக்கின்றோம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தை இங்கே நாம் கண்டிப்பாக கொண்டு வந்துதான் ஆக வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தான் நாம் இருக்கிறோம். அதைத்தான் நான் விளக்கிக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, இப்பொழுது இதை அனுமதித்துவிட்டு, அதற்குப் பிறகு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்பொழுது நீங்கள் உங்கள் மேலான கருத்துக்களைத் தெரிவிக்குமாறு பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிகள், நகராட்சிகளின் தேர்தல்கள் இந்த கோர்ட் தடையின் காரணமாக நின்றுவிட்டது என்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு தேர்தல் நடத்தவேண்டுமென்பது தான் இந்த அரசின் கொள்கை. அதையும்கூட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் எந்த நேரத்திலே இந்தத் தேர்தலை வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு எடுக்கிறார்களோ, அந்த நேரத்திலே நாங்கள் வைத்துக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே கோர்ட்டிலே தடை இருக்கிறது. அந்தத் தடையை நீக்க நடவடிக்கையை நீங்கள் எடுத்துவிட்டால், கண்டிப்பாக இந்த அரசு தேர்தலை நடத்த தயாராக இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: துணைத் தலைவர் அவர்களே, இதிலே அரசியல் காரணம் இருக்கிறது என்று சொன்னார்கள். இன்றைக்குக் கோர்ட்டிலே தடையிருக்கிறது என்று சொன்னால், அதை வெக்கேட் செய்து துரிதமாக நடவடிக்கை எடுத்து தேர்தலை நடத்தியிருக்கலாம். அதற்காக எந்த ஒரு நடவடிக்கையையும் துரிதமாக எடுப்பதாகத் தெரியவில்லை. எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில் ரிசர்வேசன், நம்முடைய ஆதி திராவிடர்களுக்கும், பெண்களுக்கும், ஒதுக்கப் படவேண்டும் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். ஆகவே இதிலே எந்தவித ஆட்சேபணையும் கிடையாது. எனவே இதில் காலதாமதம் செய்வது என்பது ஜனநாயக அமைப்பை, கிராமப் புறத்திலே உள்ள ஊராட்சி, மாநகராட்சி, நகராட்சிகளுக்கு தேர்தல் நடத்தாமல் காலதாமதம் செய்துவருவது முறையாகாது. ஆகவே திரும்பவும் நகராட்சிகளுக்கு தேர்தல் நடத்துவதற்கு காலநீடிப்பு கொடுப்பது என்பதை நான் எங்களுடைய கட்சியின் சார்பிலே எதிர்க்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

1983 மார்ச் 4]

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்திலே 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராம பஞ்சாயத்துக்கள், 376 ஊராட்சி ஒன்றியங்கள் நூற்றுக்கணக்கான நகராட்சிகள், மற்றும் மாநகராட்சிகள், இவைகளில் எல்லாம் மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாமல் இன்றைக்கு நடந்துகொண்டு வருகின்றன. கிராமப்புறத்திலே உள்ள ஏழை எளியவர்களுக்கு கிடைக்கவேண்டிய நியாயமான குடிநீர் வசதிகள், சுகாதார வசதிகள், பாதை வசதிகள், மற்றும் விளக்கு வசதிகள் கூட இன்றையதினம் இல்லாமல் இருக்கின்றன. காரணம் மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், கிராமங்கள் எல்லாம் இன்றைக்கு இருண்டு கிடக்கின்றன. நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வழக்கமாக பேரவை கூடுகிறது என்று சொன்னால் அவருடைய தனி அதிகாரிகள் நீடிப்பு மசோதா வரும். இது எல்லோரும் எதிர்பார்த்த ஒன்றுதான். கேட்டால் உச்சநீதிமன்றம், உயர் நீதிமன்றம் என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். தேர்தலை நடத்துவதிலே அவர்களுக்கு அக்கறை இல்லை என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு, இன்றையதினம்கூட வழக்கமாக வருகிற மசோதாதானே, அதற்கு நாம் காலத்திலே சபைக்குச் செல்ல வேண்டுமா என்று நினைத்து சாதாரணமாக வந்ததை நாம் பார்த்தோம். இவைகள் எல்லாம் இந்த கிராம மக்களுடைய..(குறுக்கீடு)—

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தேர்தலை நடத்துவதிலே எங்களுக்கு அக்கறை இல்லை என்று சொன்னார்கள். உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்று எத்தனையோ தடவை தேர்தலுக்கு தேதிகளை இந்த அரசு குறிப்பிட்ட நேரத்திலே எல்லாம் முட்டுக்கட்டைகள் போட்டு, இவைகளை முடக்கி வைக்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்தினார்கள் என்பது இந்த மன்றத்திற்குத் தெரியும். ஆகவே எங்களைத் பொறுத்தவரையில் தேர்தலை சீக்கிரமாக நடத்தவேண்டுமென்பதுதான். ஆனால் சமீபத்திலே நடந்த தேர்தல்கள் எல்லாம் இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சிகளுக்கு எதிராகப் போய்க்கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இது மசோதாவை அறிமுகப்படுத்து கின்ற நிகழ்ச்சிதான். இந்த மசோதாவை இந்த மன்றத்திற் குள்ளே நுழைய விடலாமா என்பதுதான் பிரச்னையே தவிர, நுழையவிட்டதற்குப் பிறகு அதனுடைய குணநலன்களைப் பற்றியெல்லாம் பேசலாம். ஆகவே இப்போதே ஆய்வுகளை யெல்லாம் முடித்துவிட்டால், பின்னால் ஆய்வுகள் செய்வதற்கு சரியாக இருக்காது. ஆகவே இப்போது அறிமுகப்படுத்தலாமா வேண்டாமா என்பதுதான் பிரச்னை. ஆய்வுக்கு எடுத்துக்

கொள்ளும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகிற சீரிய கருத்துக்கள் எல்லாம் ஆராய்ந்த பிறகு தக்க முடிவுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் தருவார்கள். எனவே இப்போது விவாதத்தைத் தொடங்கிக்கொண்டு போனால் நாம் முறைகளை மீறுகிற ஒரு தன்மையாகத்தான் இருக்கும். அதோடு காலமும் பாழாகிறது. ஆகவே அறிமுகப்படுத்தவேண்டுமென்ற இந்த நிகழ்ச்சிக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் காரணத்தால்தான் உடனடியாக தேர்தலை நடத்த வேண்டுமென்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். சமீபத்திலே நடந்த தேர்தலின் முடிவு எதிர்க்கட்சிகளுக்குத் தெரியும் என்றார்கள். அதிலே வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதேபோல் தமிழகத்திலே உள்ள நகராட்சிகளில், ஊராட்சிகளில் நீங்கள் நிற்பீர்களானால், தமிழகத்து மக்களுடைய பெரும்பான்மையான தீர்ப்பைக்கூட நீங்கள் பெறமுடியும். உண்மையிலே உங்களுக்கு இதிலே நம்பிக்கை இருக்குமானால் நீங்கள் தேர்தலை வைத்து, அதைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்று நீங்கள் சொல்லலாம். எனவே நான் இந்த மசோதாவை ஆரம்பக் கட்டத்திலே திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பாக எதிர்க்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9–20)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பிலே வாழ்த்துக்களையும், ஆசிகளையும் கூறிய திரு. திருவேங்கடம் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். வருகின்ற தேர்தல்களில்—அது ஊராட்சி மன்றத் தேர்தலாக இருந்தாலும், அல்லது எந்தத் தேர்தலாக இருந்தாலும்—அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் தான் வெற்றிபெறும் என்பதை அவர் முன்கூட்டியே தெரிவித்து இருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெறவேண்டுமென்று வாழ்த்தியதாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டதற்கு நன்றி. ஆனால், தமிழ் நாட்டு மக்கள் நல்ல தீர்ப்பை அளிப்பார்கள் என்பதால் நாங்கள் தேர்தலைச் சந்திக்கத் தயார் என்று குறிப்பிட்டேன். நீங்கள் வெற்றி பெற்ற தேர்தல்களில் எந்த அளவிற்குச் சிரமப்பட்டீர்கள்

என்பதை எண்ணிப்பார்த்துத்தான் தேர்தல் நடத்த பயப்படு கிறீர்கள். ஆனால் நாங்கள் தேர்தலைச் சந்திக்கத் தயார் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக் கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஈ) ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

(சில உறுப்பினர்கள் பேச எழுந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கெனவே உள்ளாட்சிகள் சம்பந்தப்பட்ட இரண்டு சட்ட முன்வடிவுகள் அறிமுகம் செய்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துவிட்டனர். இனி அறிமுகம் செய்ய இருக்கின்ற சட்ட முன்வடிவுகளும் உள்ளாட்சிகள் சம்பந்தப்பட்டவை யாகும். ஒவ்வொரு சட்டமுன்வடிவு அறிமுகம்செய்கின்ற நேரத்தில் ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்களும் வெவ்வேறு உறுப்பினர்கள் மூலம் அதே கருத்தைத் தான் திரும்பத் திரும்ப சொல்ல நேரிடும். அவையின் நேரம் கருதியும், எல்லா சட்ட முன்வடிவுகளும் ஒரே மாதிரியான நோக்கத்தைக் கொண்டவை யாக இருப்பதாலும், அதிலே தெரிவிக்கப்படுகின்ற கருத்துக் களில் வேறுபாடு இருக்காது என்பதாலும், இந்த அவையில் அவற்றின் மீது 7ஆம் தேதி விவாதம் வர இருக்கின்ற காரணத் தாலும், அப்போது மற்ற எல்லா உறுப்பினர்களும் பேசலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனம்: அறிமுகம் செய்கின்ற நேரத்தில் எதிர்ப்பு தெரிவிக்க வாய்ப்பு கொடுக்கவேண்டும். காரணம், ஒவ்வொரு பில்லும் தனித்தனியாக அறிமுகம் செய்யப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது ஊராட்சி மன்றங்கள் அமைக்கப்படும் போது, புதிதாக தேர்தல் நடத்தப்படும் போது, தாழ்த்தப் பட்டவர்களுக்கும் பெண்களுக்கும் என தனி இடங்கள் ஒதுக்கப்பட்டு நடத்தப்படும் என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கிறது என்றாலும், நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன், ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு முன்னாலே இதே அவையில் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், அதேபோல் பெண்கள் ஆகியோருக்கு இடங்கள் ஒதுக்கப்படுவது போல், சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற சவரத் தொழி லாளர்கள், சலவைத் தொழிலாளர்கள் ஆகியோருக்கும், மேற் கண்ட அமைப்புகளில் இடங்களைப் பிடிப்பது கஷ்டமாக இருப் பதால், அவர்களுக்கும் தனி இட ஒதுக்கீடுசெய்து தர இத்தகைய சட்டங்களிலே வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும் புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டமுன்வடிவு அறிமுகம் செய்கிற நேரத்தில் உறுப்பினர் கேள்வி கேட்கக் கூடாது.

* திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்வதை நான் எதிர்க்கிறேன். ஏனென் றால், இன்று ஊராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு கள் இல்லாததன் காரணமாக டெவலப்மென்ட் ஆக்டிவிட்டீஸ் கடுமையாக பாதிக்கப்படக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. தேசீய வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் சாலை கள் பராமரிப்பது அல்லது சாலைகள் அமைப்பது இவைகள் கூட இன்று நடைமுறையில் ஒத்திவைக்கப்பட்டிருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்டதொரு குழு அங்கு இருக்குமானால் அதை எதிர்த்து அவர்கள் நிச்சயமாக சில நட வடிக்கைகள் எடுத்திருக்க முடியும். ஆனால் இன்று அங்கு தனி அதிகாரிகள் இருப்பதன் காரணமாக அரசு நடவடிக்கைகளை அவர்களால் எதிர்க்க முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. இன்று தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்கள் சென்ற சில தேர்தல் களின் அனுபவத்தை வைத்து ஒரு தேர்தல் வந்தாலாவது சில குழாய்க் கிணறுகள் வராதா அல்லது சாலைகள் வராதா என்று எண்ணக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருப்பதால் ஊராட்சிகளுக் கான தேர்தல்களை நடத்த வேண்டுமென்ற மிக முக்கியமான தேவை இன்று தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது.

1983 மார்ச் 4] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

சர்வகட்சிக் கூட்டத்தை கூட்டிப் பேசும்போது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; இந்தத் தேர்தல்களை நடத்துவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை அரசு விரைவில் எடுக்க வேண்டுமோ அந்த முறையில் விரைவில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று. ஆனால் அரசாங்கம் அந்த முறையில் விரைவில் தேர்தல்களை நடத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இங்கே முதல் அமைச்சர் அவர்கள் கூட இது சம்பந்தமாக ஒரு சர்வகட்சிக் கூட்டம் நடத்தப்படும் என்று சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் சொன்னார்கள். இன்னும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆகவே உடனடியாக சர்வகட்சிக் கூட்டத்தைக் கூட்டி தேர்தல்களை நடத்துவதற்குள்ள நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பதிலாக இப்படிப்பட்டதொரு சட்ட முன்வடிவை கொண்டு வந்திருப்பது சரியல்ல. இதை அமைச்சர் அவர்கள் வாபஸ் வாங்கி தேர்தல்களை நடத்த நடவடிக்கைள் எடுக்கவேண்டும் என்று கேட்டு இதை அறிமுகம் செய்வதை நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 19 ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்ட ஒன்றியங்களாக அறிவிக்கப்பட்டன. ஆகவே அதற்குரிய திருத்த சட்டமுன்வடிவைத்தான் நாம் கொண்டு வந்திருக்கிறோம். ஏற்கெனவே நான் இரண்டு சட்ட முன்வடிவுகளை அறிமுகம் செய்து வைத்திருக்கிறேன். ஆகவே இதை மூன்றாவது சட்ட முன்வடிவாக அறிமுகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது என்பது நியாயமாக இருக்க முடியாது. ஆகவே இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS

[1983 மார்ச் 4

(உ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவை அறிமுகம் செய்கிற நேரத்தில் நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சற்று முன்னால் பேசுகிற நேரத்தில் ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் டெல்லியில் இருக்கிற சுப்ரீம் கோர்ட்டில் தடை வாங்கியிருக்கிற கருத்தைச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த பில்லில் பேசியது அந்த பில்லோடு முடிந்து விட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த நகராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில், எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் விரைவில் தேர்தல்களை நடத்த வேண்டும் என்பதுதான் எங்கள் கொள்கை, கருத்தே தவிர இந்தத் தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டும் என்றோ அல்லது அதற்காக வழக்குமன்றத்தில் தடை வாங்கவேண்டும் என்பதோ எங்கள் கட்சியின் கொள்கையும் இல்லை, கருத்தும் இல்லை, நாங்கள் அப்படி யாருக்கும் அனுமதி வழங்கவும் இல்லை என்பதை தெளிவாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று நகராட்சி மன்றங்களில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாததால் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவிடுவது, பல்வேறு ஆக்கப்பணிகள் முடங்கிக் கிடப்பதை பல்வேறு சமயங்களில் பார்க்கிறோம். இன்று அங்கே தனி அதிகாரிகள் இருப்பதால், மக்கள் பிரதிநிதிகள் இல்லாதிருப்பதால் லட்சக்கணக்கான மக்களின் நிலை இன்று பாதிக்கப்பட்டிருக்கிறது. மக்கள் பிரதிநிதிகள் இருந்து அவர்கள் கடமையை சரிவர செய்ய முடியாத நிலை இருக்கிறது. நகராட்சிமன்றங்களில் இருக்கிற ஆலோசனைக் குழுக்கள் கூட வெறும் ஆலோசனைக் குழுக்களாக இருக்கின்றனவே தவிர தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருப்பார்களானால் நல்ல முறையில் செயல்பட ஏதுவாகும். எனவே விரைவில் நக

1983 மார்ச் 4] [திரு. என். எஸ். வி. சித்தன்]

ராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்திட வேண்டும். அதற்கான தேதியை இந்தக் கூட்டத்தொடரிலேயே இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டு இந்த சட்ட முன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

(முற்பகல் 9-30.)

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் எதிர்க்கிறேன். காரணம், நகராட்சிகள் இன்றையதினம் கேட்பாரற்ற நிலையிலே இருக்கின்றன. தெரு விளக்குகள், மற்ற சுகாதார வசதிகள் போன்றவைகள் சரியான நிலைமையில் இல்லை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு வந்த போது, திருவண்ணாமலைக்கு வந்தபோது, ஜெனரேட்டர் கொடுக்கிறோம் என்று சொல்லி, 15 நாட்களுக்குள் அனுப்புவதாகச் சொன்னார்கள். அனுப்ப வேண்டுமென்ற நல்லெண்ணம் அவருக்கு இருக்கலாம். அங்கே நகராட்சி உறுப்பினர்களோ, தலைவரோ இல்லை. அவர்கள் அங்கே இருந்திருந்தால், இந்த விஷயத்தில் அக்கறை எடுத்துக்கொண்டு, அவர்களை அணுகியிருப்பார்கள். அவர் தான் சொன்னதை மறந்து விட்டார். இப்படி எத்தனையோ நகராட்சிகள் குடிதண்ணீர் வசதியில்லாமல், குறிப்பாக திருவத்திபுரம் நகராட்சியில் குடிதண்ணீர் வசதியில்லாமல் இருக்கிறது. மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், அங்குள்ள அதிகாரிகளுக்கு அக்கறையில்லை. உங்களுக்கு தேர்தலை நடத்த வேண்டுமென்ற அக்கறையில்லை என்பதை மக்கள் உணர ஆரம்பித்துவிட்டார்கள். இனிமேலாவது தேர்தலை நடத்துவார்களா என்று சந்தேகப்படக்கூடிய நிலைமை மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. மக்கள் பிரதிநிதிகள் அங்கே இல்லாத காரணத்தினால், எல்லாப் பொறுப்புக்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களே பதில் சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது. சட்டசபை ஆரம்பிக்கிற நேரத்தில், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இவ்வாறு செய்வது ஒரு மாமூலான பணியாக அமைந்திருக்கிறது. இது அவர்களின் திறமையான நிர்வாகத்தைக் காட்டவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, நான் இந்த மசோதாவை எதிர்க்கிறேன்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளுடைய தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கூடிய இந்த முறை, இந்த ஆட்சி ஏற்பட்ட காலத்திலிருந்து தொடர்ந்து 6 மாதங்களுக்கு ஒரு முறை வந்து கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய நிலையை அரசு எடுக்குமா என்று நான் சந்தேகப் படுகிறேன். ஏனென்று சொன்னால், இன்றைக்கு நகராட்சிகளுக்கு தேர்தல் நடந்து 13 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஊராட்சித் தேர்தலுக்கு முன்னால், இந்த நகராட்சித் தேர்தல் நடந்திருக்கு

வேண்டும். நகராட்சித் தேர்தலைதான் முதலில் நடத்த வேண்டும். அந்தத் தேர்தலை நடத்தக்கூடாது என்று யாரும் கோர்ட்டுக்குப் போகவில்லை. பெண்கள், அரிசனங்கள் அங்கம் வகிக்கக் கூடிய நிலைமை கிடையாது. ஆகவே, இதிலே காலதாமதப் படுத்துவது எங்களுக்கு வியப்பாக இருக்கிறது. 100 நகராட்சிகள் தான் இருக்கின்றன. இந்த தேர்தலை நடத்தாததினால், இன்றைக்கு குடிதண்ணீர் பிரச்சனையானாலும் சரி, கக்கூஸ் பிரச்சனையானாலும் சரி, மின்சாரப் பிரச்சனையானாலும் சரி, அங்கே மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினால், ஒன்றுமே செய்ய முடியவில்லை. அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு அவ்வளவு அதிகாரங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, உடனடியாக தேர்தலை நடத்தவேண்டும். ஒவ்வொரு அசெம்பிளி கூட்டத்திலும், இப்படி கால நீட்டிப்பு மசோதா கொண்டு வருவதற்குப்பதிலாக ஒன்றைச் செய்யுங்கள். மொத்தமாக இந்த ஆட்சி எல்லா வேலைகளையும் கவனித்துக் கொள்ளும். எல்லா ஸ்தல ஸ்தாபனங்களுக்கும், நாங்கள் ஆட்சியில் இருக்கிறோம், அதற்கு பொறுப்பேற்றுக் கொள்கிறோம் என்று ஒரு ஒட்டுமொத்தமான மசோதாவைக் கொண்டுவந்தால், மக்கள் புரிந்து கொள்ளுவார்கள். அதை விட்டுவிட்டு, 6 மாதங்களுக்கு ஒரு முறை இப்படி ஒரு நீட்டிப்பு மசோதாவைக் கொண்டு வருவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் வன்மையாக எதிர்க்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நகராட்சிகள் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கும் இந்த திருத்த மசோதாவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் ஆரம்பத்திலேயே ஆட்சேபிக்கிறேன்; வன்மையாக எதிர்க்கிறேன். இதற்கு அடிப்படைக் காரணம், நம்முடைய அமைச்சர் அவர்கள் 2, 3 முறை இதற்கு முன்னால், இந்த பிரச்சனை வருகின்ற போதெல்லாம், இந்தப் பிரச்சனையை எழுப்புகின்றபோதெல்லாம், இறுதியாக, உறுதியாக, அடுத்த முறை தேர்தல் வரும், மீண்டும் ஒத்தி வைக்கப்படமாட்டாது என்ற வாக்குறுதியைத் தந்தார்கள். ஆனால், இது மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருக்கிறது. நகராட்சிகளில் இன்றையதினம் குடிதண்ணீர் வசதி, சுகாதார வசதி இப்படி பல்வேறு பிரச்சினைகள், குறைந்தபட்சம் வரி கட்டுகின்ற பிரச்னை, தெரு விளக்குகள் போடுவது, குப்பையை வாறுவது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், கக்கூஸ் பிரச்னைகூட தீர்க்கப்படாமல், கேட்பாரற்ற நிலையில் இருக்கிறது. இந்த மசோதாவை அறிமுகப்படுத்தும் நிலையிலேயே, இதைப் பின்வாங்கி, உடனடியாகத் தேர்தலை நடத்த அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும். இந்த மசோதாவை அறிமுகப்படுத்துவதை, நான் எதிர்க்கிறேன் என்று சொல்லி என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

1983 மார்ச் 4]

*திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கின்ற நேரத்திலேயே என்னுடைய எதிர்ப்பை தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரிசர்வேஷன் இருக்கிறது. அதிலே தகராறு ஏற்பட்டு, அந்தப் பிரச்சனை நீதிமன்றத்திலே இருக்கிறது. ஆனால், நகராட்சி மன்றங்களுக்கு அத்தகையப் பிரச்சனை எதுவும் இல்லை. குறைந்தபட்சம் நகராட்சி மன்றங்களுக்காவது தேர்தலை நடத்த இந்த அரசு முன்வர வேண்டுமென்ற காரணத்தினாலே இந்த சட்ட முன்வடிவிற்கு என்னுடைய கட்சியின் சார்பிலே எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று அமைச்சரவர்கள் நகராட்சிகளுக்கு தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்காக கொண்டு வந்திருக்கிற மசோதாவை அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் எதிர்க்கிறேன். காரணம், தனி அதிகாரிகள் பதவிக்காலம் நீட்டிப்பு, நீட்டிப்பு என்று ஒவ்வொரு ஆறு மாதமும் ஒரு மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றுகிறார்கள். அப்படி நிறைவேற்றுகின்றபோது அடுத்தமுறை நீட்டிப்பு கேட்கமாட்டோம், கட்டாயம் தேர்தலை நடத்துவோம் என்று சொல்கிறார்கள். ஆனால் ஆறு மாதத்திற்கு ஒருமுறை இப்படி தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிப்பதனால் நகராட்சிகளிலே இன்றைக்கு அதிகாரிகள் ஆட்சிதான் நடந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் இப்போது ஏற்பட்டிருக்கிற கடுமையான குடிநீர் பிரச்சனைகள் போன்றவைகளை இன்றைக்கு சமாளிக்க முடியாமல் இருக்கிறது. இருக்கின்ற நிலைமைகளை எடுத்துச் சொல்ல மக்கள் பிரதிநிதிகள் இல்லை. மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் எந்தப் பகுதியிலே என்ன நடக்கிறது, எந்தப் பகுதியிலே என்ன செய்ய வேண்டும் என்று எடுத்துச் சொல்வார்கள், காரியங்கள் நடக்கின்றனவா என்று பார்ப்பார்கள். அந்த அளவுக்கு தனி அதிகாரிகள் அக்கறை காட்டுவதில்லை.

TRUTH ALONE TRIUMPHS

பல்வேறு நகராட்சிகளில் 10, 15 ஆண்டுகளாக மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் பொதுமக்கள் பிரச்சனைகளை எடுத்துச் சொல்ல யாரும் இல்லை என்பதையும், தனி அதிகாரிகளால் மக்கள் பிரச்சனைகளை தீர்க்க முடியவில்லை என்ற நிலையையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அப்படி அறிந்திருந்தும் ஏன் இன்னும் காலம் கடத்துகிறார்கள் என்று தெரியவில்லை. மேலும், இந்த தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்கக்கூடாது. தேர்தலை நடத்த சட்டச் சிக்கல் ஒன்றும் இல்லை. ஆகவே, உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும். தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்கக் கூடாது என்பதால் இந்த மசோதா அறிமுகம் செய்யப்படுவதை நான் எதிர்க்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த தனி அதிகாரிகள் பதவிக்கால நீட்டிப்பு மசோதாவை காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் வன்மையாக எதிர்க்கிறேன். இன்றைக்கு தனி அதிகாரிகள் அங்கே சர்வாதிகாரிகளாக நடந்து கொண்டிருக்கிறார்கள். மக்கள் பிரச்சனைகளை அவர்கள் கவனிப்பதாக இல்லை. பாலங்கள் கட்டினோம், ரோடுகள் போட்டோம் என்று கணக்கிலே எழுதிவிடுகிறார்கள். ஆனால் பாலங்கள் கட்டவில்லை; ரோடுகள் போடவில்லை. அவர்கள் தன்னிச்சையாக பணத்தைச் செலவிடும் சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் இத்தகைய நிலைமைகள் ஏற்படாது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இன்றைக்கு நகராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு எந்த விதமான சிக்கலும் இல்லை. ஆகவே, இந்த தனி அதிகாரிகள் நீடிப்பதை ரத்து செய்து, உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும். அதனால் இந்த மசோதாவை அறிமுகம் செய்வதை நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நகராட்சி மன்றங்களிலே இருக்கக்கூடிய தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டிய ஒரு கட்டாயம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும் நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற அடிப்படையிலே ஏற்கனவே கடந்த சட்டமன்றக் கூட்டத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அனைத்துக் கட்சித் தலைவர்களும் எந்தத் தேதியிலே தேர்தலை நடத்தலாம் என்று சொல்கிறார்களோ அந்தத் தேதியில் தேர்தலை நடத்த வேண்டும் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம் என்று தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

வருகின்ற 7-ம் தேதி இந்த சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்போது அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை எப்போது கூட்டுவது என்ற முடிவை அறிவிக்க இருக்கிறோம். ஆகவே அப்போது விளக்கமாகப் பேசவும், விரிவாக கருத்துக்களை எடுத்துச் சொல்லவும் வாய்ப்பு இருக்கிறது. 7-ந்தேதி அன்று எப்போது சர்வகட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டலாம் என்றும் எப்போது தேர்தலை நடத்தலாம் என்றும் நாம் முடிவு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக திருவண்ணாமலை நகராட்சியைப் பொறுத்த வரையில் அவர்கள் ஜெனரேட்டர் வாங்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கனவே இந்தக் கருத்தை நான்தான்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1983 மார்ச் 4] [திரு. ப. குழந்தைவேலு]

அங்கே நடைபெற்ற ஒரு விழாவிலே எடுத்துச் சொன்னேன். காரணம் திருவண்ணாமலை நகராட்சிக்கு ஜெனரேட்டர் வாங்க பண வசதி இல்லை. அதனால் அவர்களால் ஜெனரேட்டர் வாங்க முடியவில்லை. அதனால் அரசாங்கத்தின் உதவியைப் பெற்று ஜெனரேட்டர் வாங்கித்தரும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்ற ஒரு உத்தரவாதத்தை அந்த விழாவிலே தெரிவித்தேன்.

கொடுக்கப்பட்ட உத்தரவாதம் செயலாக்கப்பட கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். அதிலே காலதாமதம் இல்லை. குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பிலே இருந்தபோதுகூட இதைப்போன்ற தட்டுப்பாடு திருவண்ணாமலை நகரில் வந்திருக்கிறது. அப்போது ஜெனரேட்டர் வாங்கிக் கொடுக்கப்படவில்லை. ஆனால் இந்த நல்ல காரியத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்யப்போகிறது என்பதை நான் தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 9-40)

குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒன்று கூடி ஏற்கனவே முடிவெடுத்தோம். அந்த முடிவின் அடிப்படையில் பஞ்சாயத்து தேர்தலை முதலிலே நடத்துவது என்றும் நகராட்சித் தேர்தலை அதற்கடுத்து நடத்துவது என்றும் அதன் பின்னர் மாநகராட்சித் தேர்தலை நடத்தலாம் என்றும் முடிவினை எடுத்து.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது சட்ட முன்வடிவு அறிமுக நிலைதான். எனவே விரிவாகப் பேசிக் கொண்டே போகக்கூடாது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் கேட்டதற்கு விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கிறேனே தவிர வேறல்ல......... (குறுக்கீடுகள்)......தேர்தலை சீக்கிரமாக நடத்துவதற்காகத் தான் இந்தத் தனி அதிகாரிகளின் பதவிக்காலத்தை நீட்டிக்க வேண்டும் என்ற சூழ்நிலையில் இருக்கிறோம். அதுமட்டுமல்ல (குறுக்கீடுகள்)......தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை 6 மாதத்திற்கு நீட்டித்தாலும் அதற்குள்ளாக தேர்தலை நடத்த வேண்டும் என்றால் தேர்தலை நடத்தலாம். அதிலே தடை ஒன்றும் இல்லை. ஆகவே இந்த சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்துவதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஊ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1983 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்வதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் எதிர்க்கிறேன். கடந்த 8 ஆண்டுக் காலமாக சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்ட நிலையில் 9-வது ஆண்டும் வந்து கொண்டிருக்கின்றது. சென்னை மாநகராட்சியினை உருவாக்கிய மேட்லி துரை அவர்கள் சென்னை மாநகராட்சிக்கு குடிநீர் வடிகால் திட்டத்தினை ஏற்படுத்துகின்ற போது 50, 60 ஆண்டுகளுக்குப் பின்னால் சென்னை மாநகராட்சியின் ஜனத்தொகை 20 இலட்சம் இருக்கும் என்று கணக்கிட்டு அதற்கேற்றார்போல் திட்டத்தைத் தீட்டினார்கள். ஆனால் இன்றைய தினம் சென்னை மாநகராட்சியின் மக்கள் தொகை 40 இலட்சத்தினை எட்டி இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்தக் காலத்தில் 60 வட்டங்களாக இருந்தது, இன்றைக்கு சென்னை மாநகராட்சி 150 வட்டங்களைக் கொண்டதாக ஆக்கப்பட்டு மக்கள் தொகையும் அதிகமாகி இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமையில் மக்களின் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் மாநகராட்சியின் பணிகள் இன்று மிகவும் தேங்கி இருக்கின்றது என்பதை எல்லா கட்சியினரும் ஏற்றுக் கொள்வார்கள்.

இன்றைக்கு சாக்கடைகளைப் பொறுத்தவரையில் ஆங்காங்கே அதனுடைய மூடிகள் திறக்கப்பட்ட நிலையில் மக்கள் நடந்து சென்று கொண்டிருக்கும்போது அவர்கள் அந்தப்

படுகுழியில் விழக்கூடிய நிலைமை இருக்கின்றது. பல இடங்களில் அதனால் உயிர் போய் இருக்கின்றது. ஆனால் சென்னை மாநகராட்சியின் தனி அதிகாரிகளை இன்னும் ஓர் ஆண்டுகாலத்திற்கு நீட்டிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அவ்வாறு இருக்கின்ற தனி அதிகாரிகளின் பதவிக் காலமும் மிகக் குறுகியதாக இருக்கின்றது. எனவே திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்ற நேரங்களில் அவ்வப்போது தனி அதிகாரிகள் மாற்றப்படுவதன் காரணத்தால் அவை சரியாக நிறைவேற்றப்படாமல் போய்விடுகின்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே தேர்தல் நடத்துகின்ற வரையில் தனி அதிகாரிகளை நியமித்திருக்கிறோம் என்ற நிலையில் ஒரே அதிகாரியாக இருந்தால் சென்னை மாநகராட்சியின் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வழிவகையாக இருக்கும். தேர்தலைப் பொறுத்த வரையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும், தனி இடம் ஒதுக்குவதன் காரணமாக ஏற்பட்ட பிரச்சினையினால் தேர்தல் தள்ளிப் போடப்படுகின்றது என்று சொல்கிறார்கள். அதிலே எவ்வளவு சீக்கிரமாக இந்த அரசு நடவடிக்கை எடுத்து மேல் கோர்ட்டுக்குச் சென்று வழக்கினை எவ்வளவு சீக்கிரமாக முடித்துக்கொண்டு தேர்தலை நடத்த முடியுமோ அந்த வகையில் நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் வெற்றி பெறும் என்று சொன்னார்கள். ஆனால், சென்னையைப் பொறுத்தவரையில் யார் வெற்றி பெறுவார்கள் என்று மக்கள் தீர்ப்பளிக்கட்டும். அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். எனவே உடனடியாக சென்னை மாநகராட்சியின் தேர்தலை நடத்தி மக்களின் பிரதிநிதிகள் வருவதற்குரிய வழிவகையினைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மசோதா அறிமுகப்படுத்துவதை எதிர்க்கிறேன்.

திரு. வே. இராஜசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியினுடைய (திருத்த) சட்டமுன்வடிவை, இந்திய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராகிய நான், என் கட்சியின் சார்பாக எதிர்க்கிறேன். நடைபெறுகின்ற தேர்தல்களில் எல்லாம், பாராளுமன்ற தேர்தலாக இருந்தாலும் சரி, சட்டமன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி, வெற்றி ஆளும் கட்சிக்குஎன்கிற நிலைமை இருக்கிறபோது, சென்னை மாநகராட்சியினுடைய தேர்தலை மட்டும், நீங்கள் நடத்தாமல் தொடர்ந்து நீட்டித்து வருவது, சென்னை நகரத்தினுடைய மக்கள் மத்தியில் உங்களுக்கு இருக்கும் ஐயப்பாட்டை எடுத்துக் காட்டுவதாகத்தான் இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அந்த அடிப்படையில் நீங்கள் தேர்தலை தள்ளி வைத்த போதெல்லாம் பல சந்தர்ப்பங்களில் பல காரணங்களைக் கூறி வந்தீர்கள். முதலிலே வாக்காளர்களுடைய வயது வரம்பை மாற்றுவதற்கு என்று—பொதுத் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை 21 வயது என்று இருப்பதை 18 வயதாக ஆக்க வேண்டும் என்று—காரணம் காட்டி தேர்தலை தள்ளி வைத்தீர்கள். அதற்கு அடுத்தாற்போல மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுத்துக் கொண்டிருக்கிறோம், அதன் அடிப்படையில்தான், தேர்தல் வாக்கு ஜாபிதா தயார் பண்ணப்போகிறோம் என்று சொல்லி தள்ளி வைத்தீர்கள். அதற்குப் பின்னாலே, தமிழகத்தில் உள்ள எல்லா மக்களுக்கும், குறிப்பாக பெண்களுக்கும், அரிசனங்களுக்கும் பிரதிநிதித்துவம் தரும் வகையில் சட்டத்திலே திருத்தப்போகிறோம் என்று சொல்லி, அதன்மீது தடை உத்தரவு கேட்டு உச்ச நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள், உச்ச நீதி மன்றத்திலே வழக்கு இருக்கிறபோது, தேர்தலை நடத்துவது இயலாது என்ற காரணத்தைக் காட்டி தள்ளி வைத்தீர்கள். அதிலே கூட காங்கிரஸ்காரர்களில் வழக்கறிஞர்களாக இருக்கிறவர்களும், இது சம்பந்தமாக வழக்கு மன்றத்தில் வழக்காடிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறினீர்கள். இதில் இப்போது கூறப்பட்டிருக்கும் காரணம் என்னவென்றால் சர்வகட்சியினையும் அழைத்து, தலைவர்கள் மத்தியிலே இந்தப் பிரச்சினையை வைத்து, முடிவெடுத்து பிறகு தேர்தலை நடத்தப் போகிறோம் என்று கூறுகிறீர்கள்.

இவைகள் எல்லாம் ஏன் என்று தெரியவில்லை. அஸ்ஸாம் மாநிலத்திலே இருப்பது போல் தேர்தல் நடத்த வேண்டாம் என்று போராட்டம் நடத்தக்கூடிய சூழ்நிலை தமிழகத்திலே, அதிலும் குறிப்பாக சென்னையிலே இல்லையே. அப்படி இருந்தால் எல்லாக் கட்சிகலையும் அழைத்து, தலைவர்களோடு பேசி என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி முடிவு எடுக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட கலவர சூழ்நிலை சென்னையிலே இல்லை. சீக்கிரமாக தேர்தலை நடத்த வேண்டும், நடத்துங்கள் என்பதற்காக வேண்டுமானால் கலவரம் செய்யலாமே தவிர நடத்த வேண்டாம் என்று இங்கு யாரும் சொல்லவில்லை. ஆகையினால் இந்த மாநகராட்சி தேர்தலை நடத்துவதில் எந்தவித பயமும் உங்களுக்கு இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகையினால் சர்வகட்சிகளைக் கூட்டாமலே இந்த சென்னை மாநகராட்சித் தேர்தலை நடத்தலாம்.

சென்னை மாநகராட்சித் தேர்தல் சம்பந்தப்பட்ட மட்டில் எந்த வழக்கும் வழக்கு மன்றத்தில் இல்லை; உச்ச நீதி மன்றத்திலும் இல்லை. ஆகையினால் இந்த சென்னை மாநகராட்சி சம்பந்தப்பட்ட தேர்தலை நடத்துவதில் எந்தவிதமான பயமும் தயக்கமும் அரசுக்கு ஏற்படவேண்டிய அவசியமும் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1983 மார்ச் 4] [திரு. வே. இராஜசேகரன்]

மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், அங்கு ஏற்பட்டிருக்கக் கூடிய நிலைமைகள் என்னென்ன என்பதை நான் தனியாக எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் எங்களைப் போலவே ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்கும் ஆங்காங்கே மக்களுடைய குறைகளை தீர்ப்பதற்காக கொடுக்கப் பெற்ற மனுக்களை வைத்துக் கொண்டு அவைகளில் எப்படி பிரச்சினையை தீர்ப்பது என்று தெரியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் நிலைமை இருக்கிறது. அவைகளில் சிலவற்றிற்குக் கூட தீர்வு காண முடியாமல், மக்களுடைய பிரதிநிதிகளாகிய நாம் கவலைக்குள்ளாகியிருக்கிறோம். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில் எந்தவித வழக்கும் எந்த வழக்கு மன்றத்திலும் இல்லாத காரணத்தால், அதற்கு அவசியம் நீங்கள் தேர்தலை நடத்தியாகவேண்டும். சர்வகட்சிக் கூட்டத்தைக் கூட்டாமலேயே அதற்காக அறிவிப்பைச் செய்யுங்கள். அப்படி செய்தால் நீங்கள் விருந்தினருக்கு வழங்குகிறீர்களே, தஞ்சாவூர் தாம்பாளத் தட்டுக்கள், அவைகளில் ஒன்று அல்ல இரண்டை பரிசாகக் கொடுத்தாலும் போதாது என்று கூறி, இந்தச் சட்டமுன்வடிவை எதிர்த்து, அமர்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவினை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆரம்பத்திலேயே நான் எதிர்க்கிறேன். காரணம் பல லட்சக்கணக்கான மக்கள் வசிக்கின்ற நகரத்தில், நாள்தோறும் பல ஆயிரக்கணக்கான மக்கள் வந்து போகின்ற நகரத்தில், அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தரக்கூடிய நிலைமை, அவர்களுக்குத் தேவையான சேவைகளைச் செய்யக்கூடிய நிலைமை தற்போது இருக்கின்ற தனி அதிகாரிகளுக்கு இல்லை. அவர்களால் அது முடியவில்லை. இதை அமைச்சர் அவர்களும் அறிவார்கள். நம்முடைய அமைச்சர் அவர்களே, சென்னை நகரத்தின் பல பகுதிகளுக்கும் செல்கிற போது, நிர்வாகம் எப்படி சீர்கெட்டு இருக்கிறது என்பதை பார்த்திருக்கிறார்கள். அவர்களே இதை நன்கு அறிவார்கள். ஆகவே உடனடியாக தேர்தலை நடத்துவதே சரியாக இருக்கும்.

ஏற்கனவே பல உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல இதைக் குறித்து எந்த வழக்கும் உச்ச நீதிமன்றத்திலே இல்லை. ஆகவே அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும் எந்தவித தடையும் இல்லை. சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் போது கூட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது குறித்து சர்வ கட்சிகள் கூட்டம் கூட்டி, தலைவர்களை அழைத்துப் பேசி முடிவு எடுக்க இருக்கிறோம் என்று. ஒரு ஆண்டுக்காலம் ஆகியும், இதற்கென சர்வகட்சிக் கூட்டம் கூட்டப் பெறவில்லை இன்று வரையில். 7 ஆம் தேதியன்று விவாதம் இருக்கிறது. அதற்குப் பிறகு பேசி இதில் முடிவெடுக்கலாம் என்று இப்போது சொல்

கிறார்கள். இந்த 1 ஆண்டுக் காலத்திற்குள்ளாகவே இதைச் செய்திருக்க முடியும், போதிய கவனம் மட்டும் செலுத்தியிருந்தால் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

விரைவில் தேர்தலை நடத்த இந்த அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனி அதிகாரிகளின் பதவிக்காலம் நீட்டிப்பு என்ற இந்த திட்டத்தை வாபஸ் பெற்று, வருகிற காலத்தில் உடனடியாக தேர்தலை நடத்த ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்காக இங்கே கொண்டு வந்துள்ள திருத்த சட்ட முன்வடிவை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக கடுமையாக எதிர்க்கிறோம். ஏன் என்றால் 40 லட்சம் மக்கள் வாழ்கின்ற இந்த மாநகராட்சியினுடைய குரலாக உள்ள மாநகராட்சியின் மன்றத்தில் நூற்றுக் கணக்கான அங்கத்தினர்கள் இருந்து மக்களுடைய பிரச்சனைகளை எடுத்துச்சொல்வதற்கு வாய்ப்பு இல்லை. தண்ணீர் இல்லை, ஒளி விளக்கு இல்லை, சாலைகள் எல்லாம் ஒரே குப்பையும் கூளமுமாக இருக்கிறது, இதனால் காலரா வரக்கூடிய நிலைமை இருக்கிறது என்று எடுத்துச்சொல்வதற்கு உண்டான வாய்ப்பை நீங்கள் தடுத்து இருக்கிறீர்கள். மாநகராட்சிக்கு தேர்தல் நடத்துவதற்கு யாரும் தடை வாங்கவில்லை. ஹைக்கோர்ட்டில் வழக்கும் இல்லை. ஏன் உங்களுக்கு இந்த இரட்டை நிலை, தேர்தல் நடத்துவதில். உங்கள் சின்னம் தான் இரட்டை இலை. தேர்தலில் ஏன் இரட்டை நிலை இருக்கிறது. மாநகராட்சியின் தனி அதிகாரிகளானாலும் சரி, ஊராட்சியின் தனி அதிகாரிகளானாலும் சரி எல்லாம்—சில அதிகாரிகள் நல்லவர்களாக இருக்கிறார்கள்—பெரும்பாலும் சர்வாதிகாரிகளாக இருக்கிறார்கள். தனி அதிகாரி என்று போடுவதை சர்வாதிகாரி என்று போடுங்கள். மாநகராட்சிக்குப் பதிலாக மாநரகாட்சி என்று போடுங்கள். அப்படி மாற்றினால் நன்றாக இருக்கும். தேர்தலைக் கண்டு நீங்கள் அஞ்சுகிறீர்கள். உங்கள் கட்சியில்தான் தேர்தல் இல்லை. மாநகராட்சிக்கு தேர்தலை நடத்த நீங்கள் ஏன் அஞ்சுகிறீர்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா தி. மு. க. வைப் பொறுத்தவரைக்கும் ஏற்கனவே தேர்தல் நடந்திருக்கிறது. ஆகவே தேர்தல் இல்லை என்று சொல்வது உங்கள் கட்சியில் வேண்டுமானால் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அனைத்திந்திய அண்ணா தி. மு. க. வில் தேர்தல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பில் இண்ட்ரொடக்ஷன் ஸ்டேஜில் சுருக்கமாகப் பேச வேண்டும். பொது விவாதம் போல பேச வேண்டியதில்லை.

1983 மார்ச் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 124வது-விதி ஒரு சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்த அனுமதி கோரும் தீர்மானம் எதிர்க்கப்பெற்றால் பேரவைத் தலைவர் தாம் தேவை என்று கருதினால் திருத்தத்தை முன்மொழியும் உறுப்பினரையும், எதிர்க்கும் உறுப்பினரையும் அவர்கள் கருத்தை சுருக்கமாகக் கூற அனுமதித்த பிறகு மேற்கொண்டு எவ்வித விவாதமும் இன்றி பேரவையின் முடிவுக்கு விடவேண்டும் என்று இருக்கிறது. ஆகவே, பில் அறிமுகத்தை எதிர்க்கிறேன் அல்லது ஆதரிக்கிறேன், அதற்கான காரணம் இவை அதைத்தான் சொல்லி முடிக்கவேண்டும். விரிவாகச் சொல்வதற்கு அலுவல் ஆய்வு குழுவின் முடிவை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இங்கே அறிவிக்க இருக்கிறார்கள். ஆக நாளை நிதி நிலை அறிக்கை வைத்த பிறகு 7-ஆம் தேதி அன்று இவைகள் எல்லாம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. 8-ஆம் தேதியிலிருந்து பொது விவாதம் துவங்கயிருக்கிறது. ஆக 7-ஆம் தேதியே இதற்கு விவாதம் நடத்துவதற்கு முழு வாய்ப்பும் தரப்பட்டிருக்கிறது மாநகராட்சிக்கு. மாண்புமிகு உறுப்பினர்கள் அப்போது சொல்லலாம். இப்போது இதை எதிர்க்கிறேன், வேண்டாம் என்று சொல்லிவிட்டால் போதும். அதற்குள்ள தன்மையை நீங்கள் உணரவேண்டும். ஆக இந்த அதிகாரிகள் நீடிக்கப்படமாட்டார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் இருக்கமாட்டார்கள் என்றால் நிலையாக அங்கே இருக்கிற ஹெட் கிளார்க் மற்றவர்கள் தான் இந்த நிறுவனங்களை எல்லாம் நடத்திக்கொண்டு வரவேண்டும். ஆக இந்த யோசனைகளை எல்லாம் சொல்லலாம். எப்போது என்றால் இந்த திருத்தத்தை ஆதரித்துவிட்டு பிறகு யோசனைகளை சொல்லலாம். இதை எல்லாம் சேர்த்து 7-ஆம் தேதி நடைபெறுகிற விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் வைத்துக் கொள்ளலாம். அவையினுடைய நேரத்தையும் நாம் பாதுகாக்க வேண்டும். ஆக கருத்துக்களை மட்டும் சிறந்த முறையில் சொல்லி முடிக்கவேண்டும். விவாதம் வேண்டாம்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நாவலர் அவர்கள் கருத்தை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். எங்கள் கட்சியில் ஆண்டுதோறும் தேர்தல் நடக்கிறது. அதேபோல் நீங்களும் தேர்தலை நடத்துங்கள் என்று கூறி இந்த பில்லை நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

பிரிவு 34-ல் உட்பிரிவு (7) பிரிவிற்குப் பதிலாக கீழ்க்காணும் பகுதியைச் சேர்க்கவும்:—

''(7) இச்சட்டம் செயலுக்கு வரத் தொடங்கிய பின்னர் பதிவு பெற்ற ஒரு சங்கத்தின் தலைவராகத் தொடர்ந்து இருமுறை அல்லது ஆறாண்டுக்காலம் தொடர்ச்சியாகத் தலைவராகப் பதவி வகிக்கும் ஒருவர் அடுத்து அல்லது மூன்றாவது முறை தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படவோ நியமிக்கப்படவோ தகுதியுடையவராகார்.''

1983 மார்ச் 4] [திரு. இரா. கருப்பையா]

பிரிவு 34-ல் தற்போதைய உட்பிரிவு (5)-க்குப் பதிலாக கீழ்க் கண்டதைச் சேர்க்கவும்—

''(5) 88-ம் பிரிவின்கீழ் கலைக்கப்பட்ட குழுவின் தலைவர் அந்த உத்தரவுக்குப்பின் மூன்றாண்டுக் கால அளவு வரையில் அக்குழுவிற்கு தேர்ந்தெடுக்கப் படுவதற்கு அல்லது நிய மிக்கப்படுவதற்கு தகுதியற்றவராவார்.''

திருத்தம் முறையே வழிமொழியப் பெற்றது.

*திரு. இரா. கருப்பையா ; துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தன்னுடைய திருத்தத்திலே 34(1)(6)-ல் தண்டிக்கப்பட்டவர் 3 ஆண்டு காலத்திற்கு பதவி ஏற்பதற்கு தடை விதிக்கப்படுகிறது என்ற முறையிலே தெரிவித்திருக் கிறார்கள். ஏற்கெனவே பொறுக்குக் குழுவிலே சிபாரிசு செய்யப் பட்டு, இந்த சட்டமன்றத்தின் முன்பு சமர்பிக்கப்பட்டிருக்கிற நகல் மசோதாவில் அது கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கான ஒரு திருத்தம் என்ற முறையிலே அரசு, தரப்பிலே அதை 5 ஆண்டுக் காலம் என்று உயர்த்தும் வகையிலே திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். பொறுக்குக் குழு முழுமையாக பரிசிலனை செய்து, முடிவு செய்ததை ஒரு மசோதா வடிவில் சட்டமன்றத்திலே சமர்ப்பித்த பிறகு ஒரு திருத்தத்தைக் கொடுப்பது எந்த வகையிலே சரியான நடைமுறை என்பதை நான் அமைச்சரிடமிருந்து அறிந்து கொள்ள விரும்புகிறேன். காரணம், இந்த மசோதாவிலே ஏற்கெனவே 3 ஆண்டுக் காலம் என்று கூறப்பட்டிருக்கிறது. அதை 5 ஆண்டுக்காலம் என்று தற்போது உயர்த்தியிருக்கி றார்கள்.

(முற்பகல் 10–30.)

அதாவது தண்டனை பெற்றவர்கள் குறிப்பிட்ட காரணங் களுக்காக அல்லது கிரிமினல் போன்ற மற்ற குற்ற நடவடிக் கைகளில் ஈடுபட்டதன் காரணங்களுக்காக தண்டிக்கப்பட்ட வர்கள், அந்த தண்டனைக் காலம் முடிவடைந்தபிறகும், 5 ஆண்டுக்காலத்திற்கு இத்தகைய பொறுப்புகளுக்கு வருவது தடுக்கப்பட வேண்டும் என்று அரசு தரப்பிலே கொடுத்திருக் கக்கூடிய திருத்தம் சரியானதல்ல. இப்படி தண்டிக்கப்பட்ட வர்கள், இதுபோன்ற பொறுப்புகளுக்கு வருவது ஒரு குறிப் பிட்ட காலத்திற்காவது தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளும் வகையில், ஏற்கெனவே அரசு குறிப்பிட்டிருந்தவாறு 3 ஆண்டுக்காலம் என்று இருப்பதை சரியானதாக இருக்கும் என்று கூறி, இந்த திருத்தத்தை அரசு வாபஸ் பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கி றேன். அடுத்து....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; இந்த ஒரு பிரிவிலே மட்டும் ஏதாவது இருந்தால் பேசுங்கள், அடுத்த கிளாஸ் என்றால் அதை எடுத்துக் கொள்ளும்போது பேச லாம்.

திரு. இரா. கருப்பையா : இந்த கிளாசிலேதான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன். அரசு தரப்பிலே கொடுத்திருக்கக் கூடிய திருத்தங்களிலே 2-வது (பி) பிரிவிலே வரையறுக்கப்பட்ட முறையில், 'குழுவின் அனுமதி பெறாமல் வராது இருப்பவர்கள்' என்று குறிப்பிடக் கூடிய நேரத்தில், ஏற்கெனவே அரசு கொடுத்திருக்கக் கூடிய நகல் மசோதாவிலே, அனுமதி பெற்றுக் கூட்டங்களுக்கு வராமல் இருப்பது என்பது இருக்கிறது. ஆனால் தற்போது அரசு கொடுத்திருக்கக் கூடிய திருத்தத்திலே, அந்தப் பகுதியை நீக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி அனுமதி பெற்று போர்டு கூட்டங்களுக்கு அல்லது இயக்குநர் குழுக் கூட்டங்களுக்கு வராமல் இருப்பது என்பது, சில சமயங்களில் அனுசரிக்கப் படவேண்டிய நியதி என்ற முறையில் ஏற்கெனவே அரசு தரப்பில் கொடுக்கப்பட்டிருப்பதை நீக்குவதற்காக தற்போது கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தத்தை அரசு வாபஸ் பெறவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய சார்பிலே சில திருத்தங்களை இந்த 34-வது பிரிவிற்கு கொடுத்திருக்கிறேன். 34(1)(பி)(ii)-வது பிரிவிலே நிதியுதவி வங்கிக்கோ அல்லது பதிவு பெற்ற வேறு ஒரு சங்கத்திற்கோ கொடுக்கவேண்டிய தொகையை ஒரு ஆண்டுக்கு மேற்பட்ட கால அளவிற்குச் செலுத்தத் தவறியுள்ள பதிவு பெற்ற சங்கத்தின் பிரதிநிதியாக ஒருவர் இருந்தால் அவர்கள் அதிலே தகவின்மையாளர்கள் என்ற நிலைமைக்கு ஆளாக்கப்படுவார்கள். குழு உறுப்பினராவதற்கு அவர் தகுதியில்லை என்ற முறையிலே இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது சரியானது ஆக இருக்க முடியாது.

ஒரு உறுப்பினர் தாம் அங்கம் வகிக்கின்ற சங்கத்திலே, தம்முடைய கடந்த ஆண்டு பாக்கியை செலுத்தத் தவறியிருந்தாலும் அல்லது வேறு ஒரு கூட்டுறவுச் சங்கத்திலே அது மாதிரி பழைய பாக்கியை செலுத்தத் தவறியிருந்தாலும், அப்படிப்பட்டவர்கள் இந்த தகுதியை இழக்கின்றார்கள் என்று இருப்பது தான் சரியாக இருக்க முடியும். வேறு ஏதாவது ஒரு சங்கம், அது குறிப்பிட்ட நிதி உதவி வங்கிக்கு கொடுக்கக்கூடிய மற்ற சங்கமோ அல்லது அந்தச் சங்கத்திற்குள் இணைக்கப்பட்ட சங்கமாக இருந்தாலோ, இத்தகைய ஓவர் டியூ இருந்தால், அவர் அச்சங்கத்தின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியானவர் அல்ல என்று இம்மாதிரி, தகுதியின்மையைக் குறிப்பிடுவது சரியல்ல. ஒரு குறிப்பிட்ட அங்கத்தினர் அவர் தன்னுடைய கூட்டுறவுச் சங்கதத்தினுடைய பாக்கியை குறிப்பிட்ட செலுத்தத் தவறிய காரணத்திற்காக மட்டுமே அவர் தகுதியை இழந்தவராக இருப்பார் என்ற முறையிலே திருத்தம் இருப்பதுதான் சரியாக இருக்கும். ஆகவே அந்த முறையிலே 34(1)(பி)(ii)-வது பிரிவு மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று நான் என்னுடைய திருத்தத்தை கொடுத்திருக்கிறேன். அதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 34(2)(டி) பிரிவிலே குழுவின் 4 அல்லது தொடர்ந்து 3 திங்களுக்கு இயக்குநர் குழு கூட்டத்திலே கலந்து கொள்ளவில்லையானால், அவரை, அவர் மனு செய்துக் கொள்வதன் மூலமாக, மீண்டும் குழு உறுப்பினராக சேர்த்துக் கொள்வதற்கான அனுமதி வழங்கக் கூடிய பிரிவு இருக்கிறது. இது போல் விண்ணப்பம் செய்வதன் மூலமாக அனுமதி தரலாம் என்ற முறையிருப்பதால், 3 ஆண்டு காலத்திற்குள் தொடர்ச்சியாக கூட்டங்களுக்கு வராமல் எத்தனை முறை வேண்டுமானாலும் அந்த தகுதியை இழந்து, மீண்டும் அந்த போர்டினுடைய அனுமதியைப் பெற்று, உறுப்பினராக இருக்கலாம் என்று இப்போது இருக்கக்கூடிய ஷரத்து இருக்கிறது.

ஆகவே அந்த மூன்று ஆண்டு காலத்திற்குள் அவரைக் குழுவில் சேர்த்துக் கொள்ளக்கூடிய இந்தச் சலுகை இரண்டு தடவைக்கு மேல் கொடுக்கக்கூடாது என்று திருத்தம் கொடுத்து இருக்கிறேன். அந்த அடிப்படையிலே அந்தத் திருத்தத்தை நான் வலியுறுத்துகிறேன்.

அடுத்து 34(5)-வது பிரிவிலே தலைக்கப்பட்ட சங்கத்தின் நிர்வாகஸ்தர்கள், தலைவர், இயக்குநர் ஆகிய அனைவருமே மீண்டும் அந்தத் தேர்தலிலே நிற்பதற்குரிய தகுதி உடையவர்கள் அல்ல என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் நிர்வாகஸ்தர்கள் அனைவருமே குறை செய்யக்கூடியவர்களாகவோ வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுகிறவர்களாகவோ இருக்க முடியாது. எனவே சங்கத்தின் பொறுப்பிலே இருக்கக்கூடிய தலைவர், உப தலைவர் ஆகியவர்கள் செய்யக்கூடிய தவறுகளுக்காக சாதாரண குழு உறுப்பினர்களுக்கும் மீண்டும் தேர்தலில் நிற்கத் தகுதி இல்லை என்று அறிவிப்பது சரியாக இருக்காது. ஆகவே 34(5)-வது பிரிவில் கலைக்கப்பட்ட சங்கத்தின் தலைவர், உப தலைவர் ஆகியோர் மட்டுமே தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய தகுதி உடையவர்களாக இருக்கமாட்டார்கள் என்று திருத்தம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 34 (7) ஆவது பிரிவு. இந்த சட்ட முன்வடிவினைப் பொறுத்தவரையில் நாம் நன்கு பரிசீலனை செய்து விவாதித்து இனிமேல்தான் இதற்கு அங்கீகாரம் கொடுக்கப் போகிறோம், அதற்குப் பின்தான் இது சட்டமாக ஆக்கப்பட இருக்கின்றது. ஆனால் இந்தச் சட்டம் அமலாக்கப்படுவதற்கு 6 ஆண்டு காலத்திற்கு முன்பே 6 ஆண்டுகள் தொடர்ச்சியாக இயக்குநர் குழுவிலே அங்கம் வகிப்பவர்கள் மற்றும் தலைவராக இருக்கக்கூடியவர்கள் இந்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு நடைபெறக்கூடிய தேர்தலிலே போட்டியிடுவதற்கு தகுதி உடையவர்களாக இருக்க மாட்டார்கள் என்ற முறையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் அது சரியல்ல. சட்டம் அமலாக்கப்பட்டதற்குப் பிறகு கணக்கிடுவதுதான் சரியாக இருக்கும் என்ற அடிப்படையிலே இந்தப் பிரிவிலே சட்டம் அமலாக்கியதற்குப் பிறகு பொறுப்பு வகித்து அதிலே 6 ஆண்டுகள் ஆனதற்குப் பிறகு அவர்கள் தேர்தலிலே போட்டியிடுவதற்குரிய தகுதி உடையவர்களாக ஆக மாட்டார்கள் என்ற முறையில் இந்த ஷரத்தினைத்

திருத்தியமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதுபற்றி பொறுக்குக் குழுவிலே கூட விவாதிக்கப்பட்டிருக்கின்றது. பொறுக்குக் குழு அங்கத்தினர்களும் தங்களது கருத்துக்களை முழுமையாகத் தெரிவித்திருக்கிறார்கள். சட்ட மன்றத்திலும் அங்கத்தினர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே இந்த 34(7) பிரிவு என்பது சட்டம் அமலாகியதற்குப் பிறகு என்ற முறையிலே திருத்தம் செய்ய வேண்டும் என்ற எனது திருத்தத்தை நான் வலியுறுத்துகிறேன். 34 (1) (6) ஆவது பிரிவினைச் சேர்க்க வேண்டும் என்றும் 2 (டீ) பிரிவைச் சேர்க்க வேண்டும் என்றும் நான் கொடுத்துள்ள திருத்தங்களை ஏற்றுக் கொண்டு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய திருத்தங்களை வாபஸ் பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 34 ஆவது ஷரத்திலே 1 (எஃப்) உப பிரிவிலே ஒருவர் மாரல் டர்ப்பிட்யூட்டுக்காக தண்டிக்கப்பட்டு அதாவது ஒரு வருட காலத்திற்குத் தண்டிக்கப்பட்டு அதன் பின்னர் அப்பீல் செய்து அந்தத் தீர்ப்பு மாற்றப்படவில்லை என்றால் அந்த நபர் 5 வருட காலத்திற்கு போர்டிலே வருவதற்குத் தகுதியற்றவர் என்று போட்டிருப்பது நியாயம் அல்ல. அது ஜனநாயகமாக இருக்காது. ஒரு தவறு செய்தவரை நீதிமன்றம் தண்டிக்கின்றது. அதன் பின்னர் அவர் வெளியே வந்ததற்குப் பிறகும் 5 வருடத்திற்கு போர்டிலே வரக் கூடாது என்பது சரியல்ல. இதுபற்றி ஏற்கனவே செலக்ட் கமிட்டியிலே கொடுக்கப்பட்ட அறிக்கையில் கூட 3 வருட காலம் என்றுதான் போடப்பட்டிருக்கின்றது. எனவே 3 வருட காலம் என்றிருப்பது தான் சரி. 5 வருட காலம் என்று போட்டிருப்பது சரியல்ல.

[முற்பகல் 10-40.]

ஆகவே 2 வருடமோ அல்லது 3 வருடமோ என்று குறைப்பதைத் தவிர 5 வருட காலம் என்று அமைச்சர் அவர்கள் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து கூட்டியிருப்பது ஜனநாயக பூர்வமான ஒரு நடவடிக்கை அல்ல. ஆகவே அந்த 5 வருட காலம் என்பதை 2 வருடம் அல்லது 3 வருட காலம் என்று மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செலக்ட் கமிட்டி சில முடிவுகளை எடுத்த பிறகு மீண்டும் அரசு திருத்தமாக, திருத்தங்களைத் தருவது உகந்தது அல்ல என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் சொன்னார்கள். நான் ஆரம்பத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசுகிற போது, குறிக்கிட்டும், என்னுடைய முன்னுரையிலும் நான் தெளிவாக சொல்லியிருக்கிறேன். இந்த கூட்டுறவு புதியச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும் நலிந்த பிரிவினர்களுக்கு முழுமையான பலனைக் கொடுக்கின்ற சட்டமாக இது அமைய வேண்டும் என்பதிலும் குறிப்பாக 80 சதவீத மக்கள் வாழ்கின்ற கிராமப்புற பொருளாதார செம்மைக்காகவும் நலிந்த பிரிவினர்களுடைய மேம்

1983 மார்ச் 4] [திரு. சி. பொன்னையன்]

பாட்டுக்கும் உகந்ததாக இந்தச் சட்டம் அமைய வேண்டும் என்பதிலும் இடைத் தரகர்கள் பிடியில் சிக்கி உற்பத்தியாளர்களும், நுகர்வோர்களும் தடுமாறுகின்ற நிலை மாற்றப்பட வேண்டும் என்பதிலும் மிக அக்கறையாக இருக்கின்ற காரணத்தால் அரசியல் உணர்வுகளுக்கு அப்பால் நின்று அனைத்து உறுப்பினர்களும், அனைத்து இயக்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்களும் தருகின்ற நல்ல ஆலோசனைகளை எந்த நேரத்தில் தந்தாலும் அரசு அதை ஏற்கும் என்று சொல்லி, அந்த அடிப்படையில்தான் பல்வேறு அரசு சார்பில் திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் கூட பல வித திருத்தங்கள் மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் கொடுத்ததையும், அவர்கள் கூறிய ஆலோசனைகளை கூட பலயிடங்களில் நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். உதாரணமாக பிரைமரி சங்கங்களுக்கு மினிமத்தைக் குறைக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஏற்கனவே இருந்த 15 என்பதை 11 ஆக குறைக்க மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையின் அடிப்படையில் நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

அது மட்டும் அல்லாமல் போர்டு மீட்டிங்கை பொறுத்த வரைக்கும் நிர்வாகக் குழுவினுடைய கூட்டம் குறைந்த பட்சம் மாதத்திற்கு ஒரு முறை நடத்தப்பட வேண்டும் என்ற ஆலோசனையைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் அவர்கள் கூட அந்த ஆலோசனையைச் சொன்னார்கள். அது நல்ல ஆலோசனை என்பதால் அதையும் ஏற்று அரசு திருத்தமாக நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் அவர்கள் ஒரு மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயி மறு மாவட்டத்தில் நிலம் வைத்து இருப்பாரானால் அவர் இரு சங்கங்களில் உறுப்பினராக இல்லாத நிலையில் எப்படி கடனைப் பெற முடியும் அதற்கு வழி வகை வேண்டும் என்று சொன்னார்கள். அந்தக் கருத்தை ஏற்று அரசு இதற்காக தக்க விதிகள் இயற்ற இருக்கிறது. இதை நான் சொல்வதற்குக் காரணம் அரசு சார்பில் திருத்தங்கள் பல இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் அவர்களிடமிருந்து வருகின்ற நல்ல ஆலோசனைகளை ஏற்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அந்தத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அது மட்டும் அல்ல, மாண்புமிகு உறுப்பினர்கள் சில திருத்தங்களை தந்திருக்கிறார்கள். இந்த 34 ஆவது பிரிவுக்கு கொண்டு வந்திருக்கின்ற புதிய பிரிவுகளின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள், அரசு பணியாளர்கள் யாராக இருந்தாலும் சரி, அல்லது கூட்டுறவு இயக்கத்தைச் சேர்ந்த பணியாளர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் பதவி ஓய்வு பெற்ற பிறகு அந்த கூட்டுறவு அமைப்பிலே தேர்தலில் நின்று அந்த அமைப்பை அவர்கள் பிடிப்பார்களானால் vested interest develop ஆகிவிடும் என்ற காரணத்தினால் அரசாங்கத்தில் பணியாற்றுகின்றவர்களாக இருந்தாலும் சரி, அல்லது கூட்டுறவு சங்கங்களில் பணி புரிகின்றவர்களாக

இருந்தாலும் சரி, அவர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு அல்லது விலகிய பிறகு 2 ஆண்டு காலத்திற்கு அவர்கள் கூட்டுறவு சங்க பதவிக்கு வரக்கூடாது என்ற ஒரு 34 (1) (சி) (ii) பிரிவை கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச் சந்திரன் அவர்கள் கூறும்போது, குற்றம் புரிந்த ஒருவர் 5 ஆண்டு காலத்திற்கு அந்த தண்டனை காலத்திற்கு பிறகு நிர்வாகக் குழுவுக்கு வரக்கூடாது என்று ஒரு விதியை 34 (1) (எப்) (2) (ii) கொண்டு வந்து இருப்பதை சரியில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினருக்கு சொல்லிக் கொள்ள விழைவது எல்லாம் அங்கு ஊழல், முறைகேடு நடக்காமல் இருக்கின்ற போதுதான் இந்த இயக்கம் உண்மையில் நலிந்த பிரிவினர் களுக்கு நன்மை அளிக்கும் முகாமாக அமையும். அந்த அடிப் படையில் தான் மாண்புமிகு உறுப்பினர்கள் கருப்பையா போன்ற வர்களும், திருவேங்கடம் போன்றவர்களும் சொன்ன கருத்தை நாங்கள் ஏற்று ஏற்கனவே அங்கத்தினராக இருக்கிற ஒரு உறுப் பினர் ஒரு குற்றத்திற்கு உட்படுத்தப்பட்டு அவர் அந்த சங்கத் திலே உறுப்பினர் பதவியிலிருந்து விலக்கப்பட்டு விடுகிறார். மீண் டும் அவர் உறுப்பினராக ஆவதற்கு 5 ஆண்டு காலம் என்று இருந்ததை எல்லாம் மாற்றி 1 ஆண்டு காலம் மட்டும் இருந்தால் போதும் என்றும் காரணம் ஒரு ஏழை விவசாயி ஏதேனும் ஒரு குற்றத்தில் சிக்கி தண்டனை அனுபவித்த பிறகு 1 ஆண்டு காலத்திற்கு மேல் அங்கத்தினராக இல்லாமல் இருப்பாரானால் அந்த விவசாயிக்கு அந்த நிலத்தை உழுவதற்குக் கூட கடன் வாங்கக்கூடிய தகுதி இல்லாமல் போய்விடுகிற காரணத்தால் அதை 1 ஆண்டு காலமாக, உறுப்பினர்கள் சொன்ன ஆலோ சனையை ஏற்று அரசு திருத்தமாக கொண்டு வந்திருக்கிறோம்.

ஆனால், அதே நேரத்திலே நிர்வாகக் குழுவைப் பொறுத்த வரைக்கும் அந்த சங்கத்தினுடைய நிர்வாகப் பொறுப்பிலே இருக் கிறவர்கள், பணம் போன்ற முக்கியமான விஷயங்களில் ஈடு படுகிறவர்கள் தூய்மையானவர்களாக இருக்க வேண்டும், நல்ல வர்களாக இருக்க வேண்டும், நேர்மையானவர்களாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் நிர்வாகக் குழுவிலே இடம் பெறு கிறவர்கள் குறைந்த பட்சம் குற்றம் புரிந்து தண்டனை பெற்ற தற்குப் பிறகு 5 ஆண்டுக்காலமேனும் அவர்கள் அந்த நிர்வாகக் குழுவிற்குள் போகக்கூடாது என்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகத் தான் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் இதனை ஏற்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே இன்னும் ஒரு புதிய ஷரத்தை தந்து இருக் கிறோம். நிர்வாகக் குழுவிலே ஒரு உறுப்பினர் சரியானவர் அல்ல என்று முடிவுக்கு வருவார்களானால் அந்த நிர்வாகக் குழுவே அவரை டிஸ்குவாலிபை பண்ணலாம் என்ற நல்ல ஷரத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். அது மட்டுமல்லாமல் ஒரு நிர்வாக இயக்குநர் குறைந்த பட்சம் 3 சங்கங்களுக்கு மேல் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக இருக்கக்கூடாது என்று கொண்டு வந் திருக்கிறோம். மாநில அளவிலே உள்ள உயர்மட்டக் குழுவாக இருக்குமானால் ஒன்றுக்கு மேல் இருக்கக்கூடாது. மைய சங்க

1983 மார்ச் 4] [திரு. சி. பொன்னையன்]

மாக இருந்தால் ஒன்று என்ற முறையிலேயும் ஒட்டு மொத்தமாக 3 சங்கங்களுக்கு மேலே அவர்கள் இயக்குநர்களாக இருக்கக் கூடாது என்றும் அதே நேரத்திலே ஒரு சங்கத்திலே தலைவராக இருக்கிறவர் மற்றொரு சங்கத்திலே தலைவராக இருப்பாரானால் செம்மையான பணியை அவர் செய்ய முடியாது, வெஸ்டட் இன்டரஸ்ட் டெவலப் ஆகிவிடும். சிலரின் கையில் கூட்டுறவு இயக்கம் சிக்கி பலருக்கு வாய்ப்பு இல்லாத ஒரு நிலை ஏற்பட வேண்டாம் என்ற காரணத்தினால்தான் இது போன்ற மாற்றங்கள் எல்லாம் கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கூடாது என்று சொன்னார்கள். குறிப்பாக ஆறாண்டுக் காலம் ஒருவர் பதவியிலிருந்து, இடைவெளி ஆறாண்டுக் காலம் இருக்க வேண்டும், அதற்குப் பிறகு அவர் புதிய பதவிக்கு வரவேண்டுமென்ற புதிய ஷரத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்களும் மற்றவர்களும் இது ஒரு சரியான பிரிவு அல்ல, பின்னோக்கி இருக்கக்கூடாது, ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுக்கக் கூடாது என்று சொன்னார்கள். ஆனால், இதை நாம் கொண்டு வருகின்ற உண்மையான நோக்கமே இந்தச் சட்டம் வருகின்ற நேரமாக இருந்தாலும் சரி, இந்தச் சட்டம் வருவதற்கு முன்னாலே இருந்தாலும் சரி, இந்தச் சட்டம் வந்ததற்குப் பின்னாலே இருந்தாலும் சரி, இந்தச் சட்டம் வருகிற நேரத்திலே 6 ஆண்டுக் காலம் ஒருவர் தொடர்ந்து பதவியில் இருப்பாரானால் அந்தப் பதவியிலே மீண்டும் ஆறு ஆண்டுக் காலம் இருக்கிற வாய்ப்பைத் தருகிறபோது எந்த ஒரு நோக்கத்திற்காக 6 ஆண்டுக் காலத்திற்கு மேல் அந்தப் பதவியில் இருக்கக்கூடாது, இடைவெளி 6 ஆண்டுக்காலம் இருக்க வேண்டும் என்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோமோ அந்த நோக்கமே ஈடேறாமல் போய்விடும். இது குறித்து சந்தானம் கமிட்டியும், அட்மினிஸ்டிரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷனும், மைய அரசும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். காரணம் ஆறு ஆண்டுக்காலத்திற்கு மேல் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் என்று ஒருவர் சங்கத் தலைவராக இருக்கிறபோது வெஸ்டட் இன்டரஸ்ட் டெவலப் ஆகிவிடுவதோடு மட்டுமல்லாமல் நடக்கிற குறைபாடுகளைத் தட்டிக் கேட்க முடியாத அளவுக்கு சாதுர்யமாக அவைகளை மறைத்துவிட்டு கூட்டுறவு இயக்கத்தையே நலிவுறச் செய்யக்கூடிய நிலைமைகள் ஏற்படுகின்றன என்பதை பல்வேறு ஆய்வுகளில் கண்டறிந்து சந்தானம் கமிட்டியும் சொல்லியிருக்கிறது, அட்மினிஸ்டிரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷனும் சொல்லியிருக்கிறது. கைட்லைன்ஸ் ஆப் கவர்ன்மெண்ட் ஆப் இண்டியாவிலேயும் சொல்லியிருக்கிறார்கள். பல மாநிலங்களிலே இருக்கின்ற கூட்டுறவு இயக்கங்களிலே கடந்த பன்னெடும் ஆண்டுகளாக எத்தகைய வளர்ச்சி அடைந்திருக்கிறது, வளர்ச்சிக்கு தடைக்கற்கள் என்ன என்ன என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து ஒருவர் ஆறு

ஆண்டுகளுக்கு மேலே தொடர்ந்து பதவியில் இருக்கிறபோது அந்தக் கூட்டுறவு இயக்கத்தின் செம்மைக்கு அவர்கள் இடையூறாக இருக்கிறார்கள் என்று ஆராய்ந்து அறிந்த காரணத்தினால் தான் இந்த இயக்கம் செம்மையாக வரவேண்டும், இந்த இயக்கம் நலிந்த பிரிவினருடைய நன்மைக்காக மலரவேண்டுமென்றால் ஒருவருடைய கையிலேயே அதிகாரங்கள் பல ஆண்டுகளாக இருந்து மற்றவர்களுக்கு வாய்ப்புத் தராமல் இருப்பதோடு மட்டுமல்லாமல் ஒரு குடும்பச் சொத்தைப் போல் ஒருவருக்கே ஆகிறபோது குறைபாடுகள் அதிகமாகும் என்ற காரணத்தினால் அது கூடாது என்ற அடிப்படையிலேதான் அன்ஹெல்தி பிராக்டிஸ் டெவலப் ஆகிவிடும் என்பதால் நல்ல ஆலோசனைகளை உறுப்பினர்கள் சொன்னபோது அதை ஏற்றுக்கொண்டு 6 ஆண்டுக் காலம் என்று கொண்டு வந்தோம். சந்தானம் கமிட்டி மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

In the nursing of a society for a long time, all dedicated individuals might be useful but it will be unhealthy. In the long run that the society should become dependent on them. The Com, mittee went on to say that in an economic institution such individual may get a strangle hold on the institution and even where there are no considerations of personal advantage, the power to patronage was highly tempting. Further it was necessary that the emergence of new leadership should be actively encouraged. அதுமட்டுமல்லாமல் நமது சட்டத்திலே சங்கத் தலைவர் தான் ஆறு ஆண்டு காலத்திற்கு மேல் பதவியில் இருக்கக்கூடாது; ஆறு ஆண்டு காலம் இடைவெளி வேண்டும்; அது சட்டம் வருகிற நாளில், முன்னோக்கி அல்லது பின்னோக்கி, ரெட்ராஸ் பெக்ட்டிவ் அல்லது பிராஸ்பெக்டிவ் என்ற முறையில் இருக்க வேண்டுமென்று கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், சந்தானம் குழுவைப் பொறுத்தவரையில் சங்கத் தலைவர் மட்டுமல்ல, சங்கத்தினுடைய இயக்குநர் கூட, ஆறு ஆண்டு காலத்திலேயிருந்து 10 ஆண்டுக் காலத்திற்கு மேல் பதவியில் இருக்கக்கூடாது என்று அவர்கள் அறிவுரை தந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் மிக ஆழமாக ஆய்ந்து இன்னொரு முக்கியமான ஆலோசனையைத் தந்திருக்கிறார்கள். ஒரு புதிய சட்டம் வருகிறது என்றால் பின்னோக்கி; ''ரெட்ராஸ்பெக்டிவ்'' முறையில் கூட, ஆறு ஆண்டுக் காலம் சட்டம் வருகிற நாளன்று, பின்னோக்கி ஆறு ஆண்டுக் காலம் ஒருவர் பதவியில் இருந்திருப்பாரானால், சட்டம் வருகிற நாள் வரையில், அப்படி இருக்கிறவர்களைக் கூட அதற்குள் கொண்டு வந்து, அவர்கள் மீண்டும் ஆறு ஆண்டுக் காலம் பதவியில் இருக்கிற வாய்ப்பைத் தருகிறபோது, வெஸ்டட் இன்டரஸ்ட்ஸ் டெவலப் ஆகிவிடும்; அன்-ஹெல்த்தி பிராக்டீஸ் ஆகிவிடும் கூட்டுறவு இயக்கத்திற்கு ஒரு நலிவினை ஏற்படுத்திவிடும்; அது கூடாது என்று அட்மினிஸ்ட்டிரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

1983 மார்ச் 4] [திரு. சி. பொன்னையன்]

[முற்பகல் 10-50]

அதுமட்டுமல்லாமல் அவர்கள் இயக்குநர், வைஸ்பிரசிடெண்ட், துணைத் தலைவர் கூட ஆறு ஆண்டுகளுக்கு மேலே இருக்கக்கூடாது என்று அறிவுரை சொல்லியிருக்கிறார்கள். இதைவிட அதிகமாக மத்திய அரசினுடைய ''கைட்-லைன்ஸ்'' கூறுகிறது. Gu dlines of Government of Ind a based on scientific study throughout the State in regard to the actual posit on of the Co-operative movement அவர்கள் சொல்லியிருக்கிற கூற்றைப் பொறுத்த வரையில் இந்த இயக்கத்தில் குறைந்தது ஒரு ஆறு ஆண்டு காலத்திலிருந்து, பத்து ஆண்டு காலத்திற்கு தான் ஒருவர் சங்கத் தலைவராக இருக்கலாம்; அல்லது இயக்குநராக இருக்கலாம்; ஆறு ஆண்டுகளுக்கு, பத்து ஆண்டுகளுக்கு பிறகு நிரந்தரமாக எப்போதுமே மீண்டும் அவர் இயக்குநராகக் கூட வரக்கூடாது; சங்கத் தலைவராகக்கூட வரக்கூடாது; பாரதத்தைப் பொறுத்த வரையிலும் கிட்டத்தட்ட 60, 70 ஆண்டுகளாக இந்த இயக்கத்திற்கு பலவிதமான ஆக்கப்பூர்வமான உதவிகளை, அனுசரணைகளை, அரவணைப்புகளை மத்திய அரசும், மாநில அரசுகளும் தந்தபோதிலும், இயக்கம் முழுமையாக வளர்ச்சி அடையாமல் இருப்பதற்கு காரணம், இந்த இயக்கம் பெரும்பான்மையான பாரத மக்களில் 80 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்களுக்கு, நலிந்த மக்களுக்கு நன்மை தராமல் இருப்பதற்கு காரணம், பிரசிடெண்ட், இயக்குநர் பொறுப்பிலே இருக்கிறவர்கள் எல்லாம் வசதி படைத்தவர்களாக இருக்கிற காரணத்தாலும், அவர்கள் வாய்ப்பு, வசதிகளை, ஆக்க சக்திகளை உள்ளடக்கியவர்களாக இருக்கிற காரணத்தாலும் தான் ஏழை மக்களுக்கு நன்மை கிட்டவில்லை. எனவே, இந்த நிலையை மாற்ற வேண்டுமென்று மத்திய அரசினுடைய கைட்-லைன்ஸ், பேஸ்ட் ஆன் எசைன்ட்டிபிக் ஸ்டடி, அனைத்து மாநிலங்களிலும் ஒரு ஆய்வு நடத்தி, அந்த ஆய்வின் அடிப்படையிலே நமக்கு சொல்லி இருக்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரைக்கும் எடுத்த எடுப்பிலேயே இயக்குநர்கள் கூட ஆறு ஆண்டு காலத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்று கொண்டு வரவில்லை. வைஸ்-பிரசிடெண்ட் ஆறு ஆண்டு காலத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்று கொண்டு வரவில்லை; நிரந்தரமாக மத்திய அரசு சொல்லியிருப்பதைப் போல ஆறு ஆண்டு காலத்திற்கு மேல், 10 ஆண்டு காலத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்று கொண்டு வரவில்லை. தலைவரை பொறுத்தவரையில் மட்டும் அவர்கள் 6 ஆண்டு காலம் பதவியில் இருந்து, அதற்குப் பிறகு ஆறு ஆண்டு காலம் இடைவெளிக்குப் பிறகு வேண்டுமானால், அவர் பதவிக்கு வரலாம் என்று அந்தப் பிரிவை நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, அட்மினிஸ்ட்டிரேடிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் இன்னொரு ஆலோசனையைச் சொல்லியிருக்கிறது. ஏனென்றால் சட்டப்பிரச்னையை மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் எழுப்பி இருக்கிற காரணத்தால் அதைப்பற்றி நான் தெளி

[திரு. சி. பொன்னையன்] [1983 மார்ச் 4

வாகச் சொல்ல விரும்புகிறேன். அந்த கமிஷன் என்ன சொல்லியிருக்கிறது என்றால், Elect on should not become a cloak for the same indiv dual to se ze power n every elect on and perp ctually to hold on the re gns. ஆதிக்க சக்திகள் கூட்டுறவு இயக்கத்திலே வளர்ந்து, நலிந்த பிரிவினரை நசுக்கிவிடுகிறார்கள் என்பதற்காகத் தான் இதைகூடாது என்ற முறையில் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் மற்ற சில மாநிலங்களிலும், உதாரணமாக, கர்நாடக மாநிலத்திலும் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். கர்நாடக மாநிலத்தைப் பொறுத்தவரைக்கும் தலைவர், வைஸ்-பிரசிடெண்ட், மானேஜிங் டைரக்டர், ட்ரெஷரர், செக்ரட்டரி என்ற முறையில் யாருமே ஆறு ஆண்டு காலத்திற்கு மேல் பதவியில் இருக்கக்கூடாது; மீண்டும் ஒரு ஆறு ஆண்டு காலத்திற்கு இடைவெளி இருக்க வேண்டும்; இடைவெளிக்கு பிறகு வரலாம் என்று அவர்கள் நான்கு பிரிவினரை உள்ளடக்கியிருக்கிறார்கள். நம்மைப்பொறுத்தவரைக்கும், தலைவருக்கு மட்டும்தான் அந்தத் தடையை நாம் விதித்து இருக்கிறோம். அதைப்போலவே, கர்நாடக மாநிலத்திலே அந்த சட்டம் நடைமுறைக்கு வருகிற நாளில் ஆறு ஆண்டு காலம் ஒருவர் ஏற்கெனவே பதவியில் இருப்பாரேயானால், அவர் அந்த பதவிக்கு அடுத்த ஆறு ஆண்டு காலத்திற்கு வரக்கூடாது என்று கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதைப் போலவே, பஞ்சாப் மாநிலத்திலே எடுத்துக்கொண்டாலும் கூட அங்கும் இதே முறையிலேயிருந்து 6 ஆண்டுக் காலத்திற்கு மேல் பதவியிலே இருக்கக் கூடாது. இடைவெளி 3 ஆண்டுக்காலத்திற்கு இருக்க வேண்டுமென்றும் அதன் தலைவருக்கு மட்டுமல்ல, அதனுடைய இயக்குநர்களுக்கும் அது பொருந்தும் என்றும் அதைப் போலவே இந்தச் சட்டம் நடைமுறைக்கு என்று வருகின்றதோ, வருகின்ற அந்த நாளில் ஒருவர் தொடர்ந்து 6 ஆண்டுக்காலம் பதவியிலே இருப்பாரானால் அடுத்த 3 ஆண்டு காலத்திற்கு அவர் பதவிக்கு வரக்கூடாது என ஆய்வின் அடிப்படையிலே இந்தப் பிரிவை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப் போலவே மராட்டியம் திரிபுரா, ஒரிசா போன்ற மாநிலங்களிலும் இந்த இடைவெளியை நடைமுறைக்குக் கொண்டு வந்து சில மாநிலங்களிலே நான் ஏற்கனவே சொன்னதைப் போல, ரிட்ராஸ்பெக்டில் எபெக்ட் பிரிவையும் கூட கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தப் பிரச்னைக் கூட உச்ச நீதிமன்றத்திற்கு எல்லாம் சென்று, உதாரணமாக, பஞ்சாப் மாநிலத்திலே கொண்டுவந்த சட்டத்தைப் பொறுத்தவரைக்கும், சட்டம் நடைமுறைக்கு வருகின்ற நாள் அன்று ஒருவர் பதவியில் 6 ஆண்டுக்காலம் இருப்பாரானால் அடுத்த 6 ஆண்டுக்காலம் அவருக்கு வாய்ப்பு வராமல் இருப்பது தவறு என்று நீதிமன்றத்திற்குச் சென்று, ஆனால், இந்த இயக்கத்தினுடைய நலனைக் கருதி அந்தச் சட்டம் செல்லும் என்ற தீர்ப்பை நீதிமன்றம் வழங்கிருக்கின்ற காரணத்தால், இது

1983 மார்ச் 4] *[திரு. சி. பொன்னையன்]*

செல்லக்கூடிய ஒரு சட்டம் என்பதற்காக, A. I. R. 1973 Punjab and Haryana p.31 Harbhaian singh *vs.* State of Punjab என்ற தீர்ப்பிலே தெளிவாகச் சொல்லியிருக்கிற காரணத்தால், இதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதவியிலே இருக்கிற ஒரு தலைவர் 6 ஆண்டுக்காலத்திற்கு மேலே இருக்கக்கூடாது என்று பொறுக்குக் குழுவிலே முடிவு செய்யப்பட்டு, அதற்குப் பின்னாலே இடைவெளியாக 3 ஆண்டுக்காலம் திரும்ப அவர் வருவதைத் தடை செய்யவேண்டும் ஏனென்றால் அந்தக் காலத்திலே ஏதாவது தவறுகள் நடந்திருந்தால் அந்தத் தவறுகளைக் கண்டுபிடிக்க முடியாமல், அவர் அப்படியே மறைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. அந்தக் காரணத்தை வைத்து அவர் திரும்ப வராமல் இருப்பதற்கு 3 ஆண்டுக்காலம் இடைவெளி ஏற்படுத்த வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதற்குப் பின்னால், சில இடங்களுக்குப் பொறுக்குக் குழு சென்ற காலத்திலே, பலயிடங்களிலேயிருந்து நல்ல அனுபவம் உள்ளவர்கள், நன்கு நடத்தக்கூடியவர்கள் வரமுடியாமல் போனால் அந்தச் சங்கம் இடைக்காலத்திலே மிகக் கீழான நிலைக்குப் போகக்கூடும் என்ற அச்சத்தையும் தெரிவித்தார்கள். ஆகவே, நம்முடைய நோக்கம் நிறைவேறக் கூடிய முறையிலே, இடைக்காலம் 3 ஆண்டுக் காலம் என்று வைத்துவிட்டால், தவறு நடந்திருந்தாலும்கூட, வரக்கூடியவர்கள் அதைக் கண்டு பிடிக்கவோ அல்லது மற்ற காரியங்களுக்கோ உபயோகமாக இருக்குமே ஆகவே, அதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையில் மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற கூற்றைச் சந்தானம் குழு கூறியது. ஆனால் Administrative Reforms Commission மிகமிக ஆழமாக இதைப் பற்றி ஆய்ந்து கூறியிருப்பது

The possibility of an unscrupulous individual putting up a nominee of his own during such interval might be reduced in case the interval is increased to six years.

என்பதாகும். அவர்கள் கூறியிருப்பதன் நோக்கமே, இதை நடைமுறையிலே பார்த்து வருகிறோம். இயக்குநர்கள்கூட 6 ஆண்டுக் காலத்திற்கு மேல் இருக்கக்கூடாது, இடைவெளி 6 ஆண்டுக் காலம் இருக்கவேண்டுமென்று (Adminstrative Reforms Commission சொல்லியிருக்கிறது. ஆனால் நம்மைப் பொறுத்தவரைக்கும் இயக்குநர்கள் 6 ஆண்டுக்காலம் அல்ல, வாழ்நாள் பூராவும்—தேர்ந்தெடுக்கப்பட்டால்—இருக்கலாம் என்று கொண்டு வந்திருக்கிறோம். அந்தத் தலைவர் 6 ஆண்டுக் காலம் பதவியிலே இருக்கிறார். இடையிலே 3 ஆண்டுக்காலம் என்றால் மிகச் சுலபமாக அந்தத் தலைவர் தன்னுடைய பினாமி ஒருவரை, தனக்கு

[திரு. சி. பொன்னையன்] [1983 மார்ச் 4

வேண்டிய ஒருவரை அடுத்த 3 ஆண்டுக்காலத்திற்கு வைத்து விடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்த 3 ஆண்டுக்காலத்தை 6 ஆண்டுக்காலமாக மாற்றுகிற பொழுது, கால நீட்டிப்பு அதிகமாக இருக்கிற காரணத்தால், காலப் போக்கிலே அவருடைய அதிகாரமும் ஆதிக்க சக்தியும் குறைந்து அந்த மக்களுக்கு முழு பிரதிநிதித்துவம் கிடைக்கும் என்ற முறையிலே அமையும் என்ற யோசனையில்தான் Administrative Refoms Commission ஆலோசனையை ஏற்று 6 ஆண்டுக்காலமாக மாற்றியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

In clause 34,—

(i) *for* the words "appointed", "re-appointed", "appointment" and "re-appointment" whereever they occur, *substitute* the words "nominated", "re-nominated", "nomination" and re-nomination" respectively;

(i-a) in sub-clause (1) re-number item (f) as sub-item (i) of that sub-clause and after sub-item (i) as so renumbered, *insert* the following namely :—

(ii) has been sentenced for any offence involving moral turpitude punishable under any law with imprisonment for one year and upwards such sentence not having been annulled and a period of five years has not elapsed from the date of the expiration of the sentence; or"".

(ii) in sub-clause (2),—

(*a*) in clause (*a*), first proviso (ii), -

(i) *omit* the words "or representative in";

(ii) in item (B), *for* the words "or certificate", *substitute* the words "certificate or application";

(*b*) in sub-clause (d), *omit* the words "without obtaining leave of absence from the board in the manner prescribed";

(iii) in sub-clause (4),—

(*a*) in the first proviso *for* the word "representative" *substitute* the words "nominee of the board";

(*b*) In the second proviso, *for* the words "a representative in more than one such board," *substitute* the words "a nominee of the board of that society in more than one such board";

(*c*) in the third proviso, *for* the word "member", *substitute* the word "nominee" and *omit* the words "Representing that society";

(iv) *for* sub-clause (8), *substitute* the following sub-clause namely:—

"(8) The provisions of this section shall apply also to—

(a) the members of the board who are not Government servants, whether *ex-officio* members or members nominated by the the Registrar, the prescribed authority or the Government; and

(b) the members of the board nominated by the fiinancing bank or the board of other registered society or other interest; but shall not apply to the members of the board who are Government servants, whether *ex-officio* members or members nominated by the Registrar, the prescribed authority or the Government".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றது.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய திருத்தத்திற்குப் பிறகு என்னுடைய திருத்தங்கள் இருக்கின்றன. அதிலே...

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கின்ற திருத்தத்திலே (34) (i) (b) (i) என்ற பிரிவினை முழுமையாக நீக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்.

(முற்பகல் 11–00)

ஒரு சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் முழுமையாகக் கடனைக் குறிப்பிட்ட அளவிற்குக் கட்டவில்லை என்று டிஸ்குவாலிஃபை செய்யக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரிவைக் கொண்டுவந்ததன் ஒரே நோக்கம், ஓவர் டியூஸ் இருக்கக் கூடாது.

'The defaulting attitude should not be there in the minds of the directors of the Society.

என்ற முறையிலே, ஒரு சங்கத்தைப் பொறுத்தவரைக்கும் சங்க இயக்குநர்கள் செம்மையாகச் செயல்பட்டால் கண்டிப்பாகப் பிரச்சினைகள் எதுவுமில்லாமல் இருக்கும். இதற்குக் கூட விதிவிலக்கு தர வேண்டும் என்று ஆலோசனை தந்தார்கள். அந்த விதிவிலக்கு, அட்வர்ஸ் சீசனல் கண்டிஷன்ஸ் டிரௌவுட் போன்ற நிலமை ஏற்பட்டால் அல்லது அதிக வெள்ளம் ஏற்பட்டாலோ அல்லது பூச்சிகளால் பாதிக்கப்பட்டாலோ, இதுபோன்ற தீமைகள் ஏற்பட்டு விவசாயிகள் தாங்கள் வாங்கிய கடன்களைக் கட்ட முடியவில்லை என்றால் அதற்குச் சங்கத்தைப் பொறுப்பாக்கக் கூடாது; இயக்குநர்களைப் பொறுப்பாக்கக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கூறிய ஆலோசனைகளை ஏற்று அதற்கு ஒரு தனிப் பிரிவையும் கொண்டு வந்திருப்பதால், இந்தப் பிரிவினால் சங்க அங்கத்தினர்களுக்கோ இயக்குநர்களுக்கோ பாதிப்பு ஏற்படாது என்பதால் இதைத் திரும்பப் பெறுமாறு வேண்டுகிறேன்.

[திரு. சி. பொன்னையன்] [1983 மார்ச் 4

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் ஒருவர், மூன்றாண்டுக்காலத்திற்குள் அவர்கள் ஆப்சென்ட் ஆகிவிடுவார்களேயானால், மூன்றாண்டுக் காலத்தில் அவர்கள் இருமுறை இந்த காண்டனேஷன் மூலம் வந்துவிடக்கூடிய வாய்ப்பு சரி அல்ல என்று மாண்புமிகு உறுப்பினர் கூறியிருக்கிறார்கள். இரண்டு முறை தான் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். நல்லெண்ணத்தோடு உறுப்பினர் சொல்லும் ஆலோசனையை விதியிலே கொண்டு வருவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது. நாம் அதற்காக ஏற்கனவே நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள், ஒரு நிர்வாகக் குழுவைக் கலைத்து விடுவோமேயானால், சங்கத்தைக் கலைக்கும்பொழுது நிர்வாகக் குழுவைச் சேர்ந்த அங்கத்தினர்களுக்கும் மூன்றாண்டு காலம் வரைக்கும் அவர்களைத் தேர்ந்தெடுக்கத் தடையிருக்கிறது. இதைப் பொறுத்தவரைக்கும், சங்கத்தினுடைய தலைவர்கள் தனிப்பட்ட முறையில் தவறு செய்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க 36 ஆவது பிரிவின் கீழ் இடமிருக்கிறது. தனிப்பட்ட நபர்கள் தவறு செய்யும்பொழுது அந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒட்டுமொத்தமாக சூப்பர்சீடிங் என்பதை not for mere technical formalities உண்மையிலே சூப்பர்சீட் என்பது கடுமையான குற்றங்களுக்கு, வந்திருக்கின்ற புதிய சட்டத்தின்படி, நல்லவர்கள் அந்தச் சங்கத்தினுடைய நடவடிக்கைகளுக்குள் வர முடியும்; தூய்மை அல்லாதவர்கள் அந்தச் சங்கத்தின் நடவடிக்கைக்கு யார் வந்தாலும் தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், கூட்டுறவு இயக்கத்தில் அவர்களுக்குக் கடுமையான தண்டனை சட்டரீதியாக கொடுப்பதற்குப் பல வழிவகைகள் செய்திருப்பதால், கடுமையான தவறுகள் செய்யும்பொழுது அவர்களுடைய சங்கம் கலைக்கப்படுகிறது. அப்படிக் கலைக்கப்படும்பொழுது குற்றவாளிகள் என்னும் அவர்களுக்கு மீண்டும் வாய்ப்பு தர வேண்டுமென்று கூறுவது உகந்ததாக இல்லை என்பதால் அதை மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்ப பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்டத்திலே குறிப்பிட வேண்டிய விஷயங்களை விதியில் குறிப்பிடுவதாக அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். ஆகவே, அது எவ்வளவு தூரம் சரியாகும்? சட்டத்திலேயே தகுதியின்மையைப்போட்டுவிட்டு விதியில் இரண்டுஇரண்டு முறை அதை அவருக்கு அந்த மாதிரியான முறையிலே முறை மட்டும் அனுமதிக்கலாம் என்று போடுவது எவ்வாறு சரியாக இருக்கும்? அது சரியாக இருக்க முடியாது. ஆகவே, நான் கொடுத்திருக்கின்ற திருத்தங்களை வற்புறுத்துகிறேன்.

திரு. இரா. கருப்பையா : அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 34, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 35.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி :—

" பிரிவு 35 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்."

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

In clause 35, in sub-clause (1), *for* the word 'appointment s bst tute the wo d 'nomination.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 35, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 36 முதல் 47 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 48

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:—

பிரிவு 48 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.

THE HON. THIRU C. PONNAIYAN : Sir, I move the following amendm nt:—

In clause 48,

(i) in sub-clause (6), *add* the following namely :—

"and in the case of a continuing offence, with further fine of fifty rupees for each day on which the offence is continued after conv ction there for";

(i.a.) *omit* the proviso under sub-clause (6)."

(ii) in sub-clause (8), after the words "may be recovered", *insert* the words "together with interest at such rate as may be prescribed

from the date of such deduction and the costs involved in such recovery."

THIRU R. KARUPPIAH : Mr. Speaker Sir, I move the following amendment:—In sub-clause (2) (b) of lause 48, after the expressions "to all the societies", *insert* the expressions "within fifteen days".

In sub-clause (6) of 48, *delete* the proviso.

The amendments was duly seconded.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெயரால் உள்ள திருத்தத்தை நான் முன்மொழிகிறேன். 48-வது பிரிவில் அரசு தரப்பிலே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய திருத்தத்தில் 48 ஷரத்து 6-வது பிரிவில் தொடர்ந்து

"Provided that nothing contained in this sub-section shall apply to the Government or any officer of the Government."

என்று அமைச்சர் அவர்களால் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏன் என்றால், இம்மாதிரியான குற்றங்கள் இழைக்கப்படுவது, பிடித்த பணத்தைத் தொடர்ந்து செலுத்தாமல் இருப்பது சரியாக இருக்காது என்ற காரணத்தாலே, அந்தக் குற்றம் தொடர்ந்து நீடிக்கப்படும். வரையிலே அதற்கான முறையிலே தண்டனை வழங்கவேண்டுமென்ற அடிப்படையிலே இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால், அதே நேரத்திலே, 48, 2 (பி) பிரிவிலே பிடித்தம் செய்யப்படக்கூடிய தொகை அது எத்தனை நாளைக்குள் என்று திட்டவட்டமாக இதிலே குறிப்பிடப்படவில்லை. இந்தப் பிரிவிலே பிடித்தம் செய்யக்கூடிய தொகையை 15 தினங்களுக்குள் அவர்கள் திருப்பிச் செலுத்த வேண்டுமென்ற அடிப்படையிலே, 15 தினங்கள் என்ற ஒரு வார்த்தையை சேர்க்கவேண்டுமென்று நான் ஒரு திருத்தத்தை 48, (2) (பி) பிரிவிலே கொடுத்து இருக்கிறேன். ஆகவே எந்த விதமான காலவரையறையும் நிர்ணயிக்காமல் இருப்பது நல்லதல்ல. அது ஒரு மாதம் இருக்கலாம். 2 மாதங்கள் இருக்கலாம் அல்லது 3 மாதங்கள் இருக்கலாம். ஆகவே அந்த அடிப்படையிலே இருக்கக்கூடாது. ஏன் என்றால் தொழிலாளர்களுடைய சம்பளத்திலே கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சேரவேண்டிய பணத்தை பிடித்தம் செய்கிறார்கள். பிடித்தம் செய்த பணத்தை 15 தினங்களுக்குள்ளாக அவர்கள் திருப்பிச் செலுத்த வேண்டுமென்று ஒரு கட்டாயமாக அந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளும்படி நான் வலியுறுத்துகிறேன்.

அடுத்து, அதேமாதிரி இந்த 48, 6-வது பிரிவிலே

"in the case of continuing offence, with further fine of fifty rupees for each day on which the offence is continued after conviction therefor."

என்று ஏற்கனவே, மசோதாவிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது அது இன்றைய தினம் ஒரு திருத்தத்தின் மூலமாக, அந்தப் பகுதியை நீக்கியிருக்கிறார்கள். அது வரவேற்கக்கூடிய ஒரு திருத்தம் என்ற அடிப்படையிலே அந்த திருத்தத்தை ஏற்றுக் கொள்ளலாம் என்று கூறி, அந்த 15 தினங்களுக்குள் அது திருப்பிச் செலுத்தவேண்டுமென்ற அந்த அடிப்படையிலே திருத் தத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 48, 1(பி) பிரிவிலே வேலை புரிகின்ற வர்களுடைய சம்பளத்தை பிடிப்பதோடு மட்டுமல்லாமல், கிராஜுட்டியைக் கூட பிடிக்கலாம் என்ற ஒரு பிரிவு ஏற்படுத்துப் பட்டிருக்கிறது. ஆனால் சிவில் புரசிஜர் கோட் 60-வது பிரிவு (ஜி) என்ற உட்பிரிவிலே சொல்லப்படுகிறது.

"Stipends and gratuities allowed to pensionsers by any employer is not liable for attachment."

என்று ஏற்கனவே இருக்கிறது. இது மத்திய அரசாங்கத்தி னுடைய சட்டம் சிவில் புரசிஜர் கோட். அதிலே அட்டாச் மென்ட் செய்வதற்கு தகுதி அல்லாதவைகள் எது என்று கூறப் படும்போது, இந்த கிராஜுட்டியும் அட்டாச் செய்யக்கூடாது என்று இருக்கிறது. ஆனால் இப்போது மறைமுகமாக கிராஜுட்டியையும் அட்டாச் செய்யலாம் என்று விதி ஏற் படுத்தியிருக்கிறோம். இது ஒருவேளை வழக்கு மன்றத்திற்குப் போய் வேண்டுமென்றே என்னுடைய கிராஜுட்டியை அவர்கள் அட்டாச் செய்கிறார்கள் என்பது போன்ற ஒரு பிரச்சினை எழக்கூடும் என்று நான் இப்போது நினைவுபடுத்த விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

This is a provision actually applicable to such categories of socities who are not governed by the payment of Graduaties Act.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது 48-வது ஷரத்திற்கு அமைச்சர் அவர்கள் அதாவது

In the case of continuing offence, a further fine of Rs. 50 for each day

என்று போடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இந்த ஷரத்திலே போடப்பட்டிருப்பது

'Punishable with fine which may extend to Rs. 500.

500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்ட ஒரு ஆளுக்கு மீண்டும்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1983 மார்ச் 20

50 ரூபாய் அபராதம் விதிப்பது என்பது சரியாக இருக்காது. அப்படிப்பட்ட அவர்களுக்கு சிறைத் தண்டனை கொடுக்கக்கூடிய முறையிலே, இம்பிரிசன்மென்ட் என்ற ஒரு புரவிஷன் இதிலே சேர்த்து இருக்கவேண்டுமே தவிர அந்த மாதிரி 50 ரூபாய் பைன் என்று இருப்பது அவர்களைப் பொறுத்தவரை இது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்காது. அவர்கள் 50 ரூபாயை கட்டிவிட்டு மீண்டும் அந்தத் தவறை செய்துகொண்டிருப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே இதற்கு மேலே கன்டினிவன்ஸ் அபன்ஸ் என்ற முறையிலே, தவறு செய்கிறவர்களுக்கு சிறைத் தண்டனை கொடுக்கக்கூடிய அளவிற்கு கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செலக்ட் கமிட்டி சில முடிவுகளை எடுத்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர்கள் சில திருத்தங்களைக் கொண்டுவருவது உகந்தது அல்ல என்று குறிப்பிட்டதற்கு மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் பதில் அளித்ததுபோல், பிரிவு 48(6) மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் சொன்ன ஆலோசனையை ஏற்று, ஏற்கனவே அரசு பணியாளர்களுக்கு தண்டனை இல்லாத நிலையில், மற்றவர்களுக்கு தண்டனை என்று இருந்த நிலையில், இருவரையும் சமமாக பாவிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சம்பளம் பிடிக்காமல் இருப்பவர்கள் மேல் தண்டனை என்று இருக்கிறபோது, சம்பளம் பிடிக்கவேண்டிய பகுதி காலத்திலேயே பிடிக்காத அரசு அதிகாரிக்கு தண்டனை இல்லை என்ற ஷரத்து நீக்கப்படவேண்டும் என்று சொன்னார்கள். அதையேற்று மாற்றியிருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், அந்த பிடித்தம் செய்த பணத்தை 15 தினங்களுக்குள் சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு அனுப்பவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த 15 தினங்கள் என்பதை 7 தினங்கள் என்று குறைத்து, 7 தினங்களுக்குள் அவர்கள் கட்ட வேண்டும். அதற்கு மேல் அவர்கள் அதிகப்படியாக நீடிக்கவேண்டுமானால், மேலும் 8 தினங்கள் கொடுத்து, 15 தினங்களுக்குள் ஒட்டுமொத்தமாக—அக்ரகேட்டாக கொடுக்கலாம் என்று இந்தச் சட்டத்திற்கு உட்பட்ட விதியின் கீழ் சம்பந்தப்பட்ட ஷரத்து கொண்டு வரப்படயிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :
பேரவை முன்னுள்ள கேள்வி :

In clause 48,—

(i) in sub-clause (6), *add* the following, namely :

"and in the case of a continuing offence, with further fine of fifty rupees for each day on which the offence is continued after Conviction therefor";

"(i-a) *Omit* the proviso under sub-clause (6)."

(ii) in sub-clause (8), *after* the words "may be recovered," *insert* the words "together with interest at such rate as may be prescribed from the date of such deduction and the costs involved in such recovery".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பற்று நிறைவேற்றப் பெற்றது.

[ரு. இரா. கருப்பையா அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றது.

பிரிவு 48, திருத்தப் பெற்றப்படி பேரவையின் முடிவிற்கு விடப் பற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 49 முதல் 51 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 52

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 52 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

THE HON. THIRU C. PONNAIYAN :— Mr. Deputy Speakers Sir, I move the following amendment .—

In Clause 52, in sub-clauses (1) and (2). *for* the words "Government or the Central Government" *substituted* the word "Government".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 52, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 52 முதல் 56 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 57

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 57 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

THE HON. THIRU C. PONNAIYAN : Mr. Deputy Speaker, sir, I move the following amendment .—

In clause 57, *for* sub-clause (a), *substitute* the following .—

" (*a*) the Government ; or "

[1983 மார்ச் 4

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 57, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 58 முதல் 65 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 66

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி : ''பிரிவு 66 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவரவர் களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In clause, 66, in sub-clause (2), in clauses (*b*) and (*c*) *for* the words "specified by the Registrar" *substitute* the word "prescribed".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 66 திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 67 மற்றும் 68 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 69

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி; ''பிரிவு 69 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவரவா களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

In clause, 69, in the first proviso, *for* the words "scale of", substitute the word "scale".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்றது.

1983 மார்ச் 4]

பிரிவு 69, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 70 மற்றும் 71 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 72

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி.—''பிரிவு 72 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

In Clause 72, in sub-clause (1),—

(i) in clause (*a*), *omit* the words "in the rules";

(ii) *for* clause (*b*), *substitute* the following clause, namely ,—

" (*b*) The Co-operative research and development fund and the co-operative education fund shall be maintained by the Tamil Nadu Co-operative Union Limited and administered by committees constituted in accordance with the rules. Such committees shall consist of nominees of the Government (who shall be specialists or technical experts in agriculture or animal husbandry or sugar technology or textile technology or in such other matters as may be prescribed, or officers of the Government) and also of nominees of the prescribed apex societies.";

(iii) in sub-clause (2), in clause fourthly,—

(a) *for* the words "twelve per cent", *substitute* the words "fourteen per cent" ;

(b) in the proviso, *for* the words "twelve per cent per annum for the purpose of issue of bonus shares in the manner prescribed", *substitute* the words "fourteen per cent per annum subject to the condition that the amount of dividend in excess of fourteen percent shall be credited to the share account of the members in such manner as may be prescribed".

திரு. இரா. கருப்பையா : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

'' பிரிவு 72–ல் உட்பிரிவு (1) (எ) (1)–ல் ' நிகர இலாபத்தின் மூன்று சதவீதத்தை ' என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக, ' நிகர இலாபத்தின் இரண்டு சதவீதம் அல்லது ரூ.10,000 இதில் எதில் குறைவானதோ' என்ற வார்த்தைகளைச் சேர்க்கவும்.

[திரு. இரா. கருப்பையா] [1983 மார்ச் 4

பிரிவு 72—ல் உட்பிரிவு (1) (எ) (2)—ல் ' நிகர இலாபத்தில் இரண்டு சதவீதத்தை ' என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக, 'இரண்டு சதவீதம் அல்லது ரூ. 10,000 இதில் எதில் குறைவானதோ' என்ற வார்த்தைகளைச் சேர்க்கவும்.

உட்பிரிவு (1) (பி)—ல் ' ஆனால் தலைமைச் சங்கங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை குழுவின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஏறத்தாழ பாதியாக இருக்க வேண்டும் ' என்பதற்குப் பதிலாக கீழ்க்கண்டதைச் சேர்க்கவும்—

' ஆனால், தலைமைச் சங்கங்களின் எண்ணிக்கை குழுவின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை $\frac{3}{4}$ பங்காக இருக்க வேண்டும் '.

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.—

In sub clause (1) (*a*) of clause 72, *add* the following words at the end : " after providing for additional Bonus as per rules to be framed as mentioned in Clause 78(1)."

In sub clause (2) of clause 72—

(i) Delete the words ' Sixthly, towards payment of bonus to paid employees of the registered society not governed by the Payment of Bonus Act, 1965 (Central Act 21 of 1965) at such rate and subject to such conditions as may be specified in the rules ;

(ii) In the said sub- clause, in the subsequent paragraphs Read the words seventhly, eighthly and ninthly as sixthly, seventhly and eighthly respectively.

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திரு. இரா. கருப்பையா : துணைத் தலைவரவர்களே, 72—வது பிரிவை முழுமையாக மாற்றியமைக்க வேண்டுமென்ற அடிப்படையிலே நான் என்னுடைய திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன். அதிலே இருக்கிற பிரதான அம்சம் என்ன என்பதை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தப் பிரிவிலே கூட்டுறவு கல்வி நிதிக்காக 3 சதவீதம் என்று இருப்பதை 2 சதவீதம் அல்லது ரூ. 10,000 இதிலே எது குறைவாக இருக்கிறதோ அந்தத் தொகையை கூட்டுறவு கல்வி நிதிக்கு ஒதுக்க வேண்டுமென்ற அடிப்படையிலே நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

அதேமாதிரி வளர்ச்சி நிதி என்ற அந்தத் தலைப்பிலே, 2 சத வீதம் அல்லது ரூ. 10,000 இதிலே எது குறைவாக இருக்கிறதோ அந்தத் தொகையை இந்த நிதிக்கு ஒதுக்க வேண்டுமென்று அடிப் படையிலே திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

அடுத்து, இந்த கூட்டுறவு இயக்கத்திலே பணியாற்றக்கூடிய பணியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு போனஸ் சட்டத் தின்படி போனஸ் வழங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. 10 ஊழி யர்களுக்குமேல் ஒரு சங்கத்தில் பணியாற்றினால் அவர்களுக்கு போனஸ் வழங்க ஏற்பாடு இருக்கிறது. இன்றைக்கும் இருக் கிறது. அமைச்சரவர்கள் போனஸ் சட்டம் பொருந்தாத சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் போனஸ் வழங்க வகை செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலே குறிப்பிட்டிருக் கிறார்கள். போனஸ் சட்டத்தில் அடங்காத சங்கங்களில் பணி யாற்றும் ஊழியர்களுக்கும் இலாபத்தில் அவர்களுக்கு போனஸ் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, முதல் 'சார்ஜ்' ஆக அதை வழங்க வேண்டுமென்ற அடிப்படையிலே நான் திருத் தம் கொடுத்திருக்கிறேன்.

அடுத்து டிவிடன்ட் வழங்குவது சம்பந்தமாக இருக்கிறது. ஏற்கெனவே மசோதாவில் 12 சதவீதம் என்று கூறப்பட்டிருந் தது. அதை 14 சதவீதம் என்று உயர்த்த அமைச்சரவர்கள் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். சாதாரணமாக 12 சத வீதம் டிவிடென்ட் கொடுக்க வேண்டுமென்பதுதான் சரியான ஒரு நடைமுறையாக இருக்கும். ஆகவேதான் 12 சதவீதம் என்ற அடிப்படையிலே இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேன்

முற்பகல் 11-20

அடுத்து ரிசர்வ் பண்டு—காப்பு நிதி 20 சதவீதம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும், அடுத்து மாநிலநிலவள வங்கி தொடக்க நிலவள வங்கிகள், பிற நிதியுதவி வங்கிகள் உள்ளிட்ட வேளாண்மை பணி கூட்டுறவுச் சங்கங்கள், இவைகளுக்கு நிகர லாபத்தில் 15 சதவீதம் 'Bad debts Rsiv' இருக்க வேண்டும். என்று கருதுகிறேன். அதற்கு 15 சதவீதம், அடுத்து இந்தச் சங்கங்களில் உறுப்பினர்கள், அவர்கள் செய்திருக்கக்கூடிய வியாபாரத்திற்கு தகுந்த முறையிலே போனசுக்கு வழி வகை செய்கிற முறையிலே 10 சதவீதத் திற்கும் ஒதுக்கீடு செய்யவேண்டும் என்ற அடிப்படையிலேதான் நான் திருத்தத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

அடுத்து காமன் குட் பண்ட் நிகர லாபத்தில் அதற்கு 10 சத வீதத்திற்கு மேற்படாமல் ஒதுக்கீடு செய்யவேண்டும். அடுத்து பணியாளர்கள் நலநிதி என்கிறபோது—எம்பிளாயீஸ் வெல்பேர் பண்ட் என்ற அடிப்படையில் அதற்கும் 10 சதவீதத்திற்கு மேல்

[திரு. இரா. கருப்பையா] [1983 மார்ச் 4

போகாமல் இருக்கும் வகையில் ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் என்றும், மற்றபடி தலைவர்கள், துணைத் தலைவர்கள் போன்று சங்கத்திலே பணி புரியக்கூடியவர்களுக்கு கொடுக்கக்கூடிய ஊதியம், லாபத்தில் 10 சதவீதத்திற்கு மேல் போகாத அளவிற்கு அதற்காக ஒதுக்கீடு செய்யலாம் என்றும், மீதி இருந்தால், அப்படி எஞ்சியிருக்கக்கூடிய தொகையை மீண்டும் காப்பு நிதியிலேயே ஒதுக்கீடு செய்யவேண்டும் என்கிற அடிப்படையிலேயே என்னுடைய திருத்தத்தை நான் கொடுத்திருக்கிறேன்.

ஆகவே, இதிலே இருக்கக்கூடிய பிரதானமான அம்சம் டிவிடெண்ட் 12 சதவீதம் கொடுக்கப்பட வேண்டும் என்பது. ஆகவே அங்கே பணி புரியக்கூடிய ஊழியர்களுக்கு, மற்றும் கூட்டுறவு வளர்ச்சி நிதி போன்றவைகளுக்கு 3 சதவீதம் என்று ஒதுக்கீடு இருப்பதை, 2 சதவீதம் அல்லது 10,000 ரூபாய் இதில் எது குறைவோ அதை ஒதுக்கீடு செய்யவேண்டும். என்றும் கல்வி நிதிக்காக 2 சதவீதம் அல்லது 10,000 ரூ. இதில் எது குறைவாக இருக்கிறதோ அதை ஒதுக்கீடு செய்யவேண்டும் என்கிற அந்த அடிப்படையிலே திருத்தங்களை நான் கொடுத்திருக்கிறேன்.

இதன் மூலமாக அங்கே பணிபுரியக்கூடிய ஊழியர்களின் நலன்களுக்கும் பாதுகாப்பு செய்ய முடியும். பங்குத் தொகை செலுத்தக்கூடிய சங்க உறுப்பினர்களுக்கும் பாதுகாப்புத் தரமுடியும். அந்தச் சங்கத்தில் உறுப்பினர்களுக்கு, அவர்கள் செய்யும் வியாபாரம் அல்லது தொழில் அடிப்படையில் ஒரு வழிவகை செய்யப்படும். சங்கத்தை நடத்திச் செல்கின்ற தலைவர் உபதலைவர் போன்றவர்களுக்கும், மதிப்பு ஊதியம் வழங்க முடியும். ஆகவே இந்த முறையிலே இந்த லாப பரிவர்த்தனை இருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. அதன் அடிப்படையில்தான் நான் திருத்தத்தை வைத்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் கொண்டு வருகின்ற சட்டத்திலே பல்வேறு பிரிவுகளில் பல்வேறு பெரும்பாலான விஷயங்கள் இருக்கின்றன என்றாலும், இந்த முறையிலே அந்த லாப பரிவர்த்தனையை வரிசைப்படுத்தி, அந்த அடிப்படையிலே இதைச் செய்ய வேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 72–வது ஷரத்து, நெட்–பிராஃபிட் எப்படி பிரிக்கப் படவேண்டும் என்பது. இதிலே நான் என்ன தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் என்றால், கூட்டுறவுச் சங்கங்களில் வேலை செய்யும் பணியாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு இன்று பல கூட்டுறவுச் சங்கங்களிலும், இந்த நாட்டிலே அவ்வப்போது ஏறக்கூடிய விலைவாசிக்கு ஏற்ற நியாயமான ஊதியம் கொடுக்கப்படுவதில்லை என்பதுதான். இது நாடு அறிந்த உண்மை. இந்ததொழிலாளர்களுக்கு போனஸ் கொடுப்பதற்

1983 மார்ச் 4] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

கான உரிமையை இந்த நெட்—பிராஃபிட் தொகையை பிரிக்கக்கூடிய நிலைமையில் பர்ஸ்ட் சார்ஜ்ஜாக கொடுக்கப்பட வேண்டும் என்று கருதுகிறேன். கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு ரெஜிஸ்டர்ட் சொசைட்டியினுடைய நெட் பிராஃபிட்டைப் பொறுத்தவரையில், அதை கான்டிரிபியூட் பண்ணுவதற்கு முன்னால் தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய போனஸை கொடுப்பதற்கு,

For additional bonus as per Rules prescribed and mentioned in Clause 78 (1).

78 (1) இல் போனஸ் சம்பந்தமாக நான் ஒரு திருத்தத்தை கொடுத்திருக்கிறேன்.

அந்தத் திருத்தத்தின்படி நெட் ப்ராஃபிட்டைப் பங்கு போடுவதற்கு முன்பு தொழிலாளர்களுக்குக் கொடுக்கவேண்டிய போனஸை ஒதுக்கியதற்குப் பிறகுதான் நெட் ப்ராஃபிட்டைப் பங்கு போட வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். போனஸ் என்பது பணியாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு வழங்க வேண்டிய டெஃபர்ட் வேஜஸ் என்ற முறையில் கருதப்படவேண்டும். இன்றைக்கு மைய, மாநில அரசுகள் கூட டெஃபர்ட் வேஜஸ் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய நேரம் இது. டெஃபர்ட் வேஜஸ் என்ற கொள்கையினை ஏற்றுக் கொள்கிற நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் நெட் ப்ராஃபிட்டைப் பங்கு போடுவதற்கு முன்பாக பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய போனசுக்கு ஃபர்ஸ்ட் சார்ஜ் கொடுக்கவேண்டும் என்ற திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த முறையில் இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சங்கத்தினுடைய லாபத்தை எந்தவிதத்தில் எந்த முறையில் பங்கீடு செய்யவேண்டும் என்பதைப் பற்றி பிரிவு 72 மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கின்றது. அதில் முக்கியமான ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் அவர்களுடைய திருத்தமாக கோவாப்பரேட்டிவ் ரிசர்ச் அன்ட் டெவலப்மென்ட் ஃபன்டுக்கு என்று தனியாக ஒரு கமிட்டி கான்ஸ்ட்டிடியூட் பண்ண வேண்டும் என்று சொல்லி இருக்கிறார். அதற்கு திருத்தத்திலே தற்போது வழிவகையினைச் செய்திருக்கிறோம்.

The Co-operative research and development fund and the co-operative education fund shall be maintained by the Tamil Nadu Co-operative Union Limited and administered by committees

constituted in accordance with the rules such committees shall consist of nominees of the Government (who shall be specialists or technical experts in agriculture or animal husbandry or sugar technology or textile technology or in such other matters as may be prescribed, or officers of the Government) and also of nominees of the prescribed apex societies.

என்று மிகத் தெளிவாக இதில் கூறப்பட்டிருப்பதால் சப்ஸ்டான்டிவ் ப்ரவிஷன் ஆஃப் லாவை மீறி யாரும் எதுவும் செய்து விட முடியாது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தினை கண்டிப்பாக ஈடேற்றுவதற்கு இது உதவியாக இருக்கும் என்ற காரணத்தால் அவர்களுடைய திருத்தத்தை திரும்பப் பெறுமாறு வேண்டுகிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்களும், திரு. கருப்பையா அவர்களும், இதுபோன்ற பல்வேறு திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். போனஸைப் பொறுத்தவரையில் வரிசைக் கிரமத்தில் முன்னுரிமை தர வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு கூட்டுறவு இயக்கம் நல்லமுறையில் செழுமையாக இருக்கின்றபோதுதான் அதனுடைய பணியாளர்களையும், அங்கத்தினர்களையும் நல்ல முறையில் பேண முடியும் என்பது நாமெல்லாம் அறிந்ததுதான். அந்த அடிப்படையில்தான் தற்போது புதிய கூட்டுறவுச் சட்டத்தினை நடைமுறைக்குக் கொண்டு வந்து அதிலே பல்வேறு பிரிவுகளை ஏற்படுத்தி கூட்டுறவுச் சங்கம் நல்ல வலிவான நிலைமையைப் பெறவேண்டும் என்றும் வையபிள் சங்கமாக இருக்கவேண்டும் என்றும் ஏற்பாடு செய்கிறோம். ஆக்டிவிட்டீஸ் ஹேவ்டுபி இன்க்ரீஸ்ட் என்ற முறையில் பல பிரிவுகளைச் சட்டத்தில் கொண்டுவந்திருப்பதால் இந்தப் புதிய சட்டம் நடைமுறைக்கு வருகின்றபோது பல சங்கங்கள் தன்னிறைவு பெற்ற சங்கங்களாக, வருவாய் பெறக்கூடிய சங்கங்களாக ஆகக்கூடிய வாய்ப்பு கண்டிப்பாக இருக்கின்றது. இதிலே முக்கியமான பிரிவு என்னவென்றால் ஹானரோரியம் தரவேண்டும் என்று கொண்டு வந்திருக்கிறோம் அதைக் கொண்டுவரத் தவறினால் கூட்டுறவுச் சங்கத்திலே உற்சாகம் இல்லாமல், ஊக்கம் இல்லாமல் தலைவரும், நிர்வாக இயக்குநரும் இருந்து சங்கத்தின் அங்கத்தினர் நலனையும், பணியாளர்களின் நலனையும் பேணாத நிலைமை தொடர்ந்து விடும். இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டதை நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். ஆய்விலே கூட நாம் அறிந்திருக்கிறோம். எனவே அவர்களுக்கு ஹானரோரியம் கொடுப்பது என்பதைக் கண்டிப்பாகக் கொண்டுவரவேண்டும் என்று நாம் தீர்மானித்திருக்கிறோம். தற்போது இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருக்கும், இயக்குநருக்கும் நஷ்டத்தில் இயங்கக்கூடிய சங்கம், நடைமுறை லாபம் (current Profit) ஈட்டும்போது ஹானரோரியம் என்பது கொடுப்பது இல்லை.

1983 மார்ச் 4] [திரு சி. பொன்னையன்]

ஆனால் நலிந்த பிரிவுக்குச் சொந்தமானவர்களும் கூட்டுறவு இயக்கம் என்பதற்கு வருவார்கள் என்ற நிலைமையில் அவர்கள் சங்கத்திற்கு வருவதை ஊற்சாகப்படுத்துவதற்காக ஹானரோரியம் கொடுக்கப்பட வேண்டும். அவ்வாறு ஹானரோரியம் இல்லை என்றால் கடந்த ஆண்டுகளில் இருந்தது போன்று ஆதிக்கவாதிகளும், பணபலம் படைத்தவர்களும் கூட்டுறவுச் சங்கத்திலே தலைவராகவும், இயக்குநராகவும் வரக்கூடிய வாய்ப்பே தொடரும் என்ற காரணத்தால் ஹானரோரியம் கொடுப்பது என்பதைக் கொண்டு வந்திருக்கிறோம்.

(முற்பகல் 11-30)

அப்படி ஆனரோரியம் கொண்டு வந்து இந்த இன்செண்டீவ் எல்லாம் இருக்கிற நேரம் கண்டிப்பாக அதனுடைய பணியாளர்களுடைய நலன் பேணப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லி அரசினுடைய திருத்தத்தை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தங்களிலே கொடுத்து இருக்கக்கூடிய முக்கியமான திருத்தத்தை ஆரம்பத்திலே குறிப்பிட்டேன். இதிலே அமைச்சர் அவர்கள் கூட என்னுடைய திருத்தத்திலே ஒரு பகுதியாக கமிட்டி நியமிக்கப்படும் என்றும் அதற்கான முறையில் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். அது நியமிக்கப்படக்கூடிய கமிட்டி இல்லை. என்னுடைய திருத்தம் அபேக்ஸ் சங்கம் இந்த மாதிரியான சங்கங்களில் பிரதிநிதிகளாக இன்றைய தினம் சட்டத்திலே குறிப்பிட்டு இருப்பது பாதி பேர் என்று அதை முக்கால்வாசி பேர் என்று மாற்றவேண்டும். எக்ஸ்பர்ட்ஸ் 25 சதவீதம் இருந்தால் போதும் என்ற அடிப்படையில் என்னுடைய திருத்தத்திலே குறிப்பிட்டு இருக்கிறேன். அதைத் தவிர என்னுடைய திருத்தத்திலே முக்கியமான மற்றொரு திருத்தம் பணியாளர்களுடைய வெல்பேர் பண்டு அதற்கு ஒதுக்கீடு செய்வது. பல்வேறு அமைப்புகளில் இன்றைய தினம் பணிபுரிகின்ற அந்தப் பணியாளர்களுடைய நலனைப் பாதுகாப்பது. காமன் குட் பண்டு என்று ஒரு பண்டை நாம் ஒதுக்கீடு செய்கிறோம். அது அங்கத்தினர்களுடைய பொது நிகழ்ச்சிகளுக்கும், பொது காரியங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. லாபத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையை பணியாளர்களுடைய நலனை பாதுகாத்து அதற்கு ஒரு வெல்பேர் பண்டு என்கிற அடிப்படையில் மகாராஷ்ட்டிரத்தில் இருக்கின்ற சட்டத்தில் உள்ளது. ஆகவே அதே மாதிரி இந்தச் சட்டத்தில ஒதுக்கீடு செய்யவேண்டும் என்றும், இந்த சட்டத்திலே திருத்தம் செய்வது சரியானதாக இருக்கும். ஆகவே அந்த அடிப்படையில் அமைச்சர் அவர்கள் இந்த திருத்தங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பணியாளர்களுக்கான போனஸை பாதுகாக்கக்கூடிய முறையில் நடவடிக்கை எடுப்போம் என்று இங்கே சொன்னார்கள். ஆனால் அவர்கள் கவனத்திற்கு ஒன்றை கொண்டுவர விரும்புகிறேன். 72-வது ஷரத்தில்

sixthly towards payment of bonus to the paid employees of the Registered society not goverened by the Payment of Bonus Act, 1965 at such rules to such conditions as may be specified in the rules.

என்று போடப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின் வரம்பிற்குள் கூட்டுறவு நூற்பாலைகள் வருகிறது. சர்க்கரை ஆலை வருகிறது. அப்படிப்பட்ட ஆலைகளில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு போனஸ் சட்டப்படியே இன்றைக்கு கொடுக்கப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் அப்படி சட்ட வரம்பிற்குள் வராத, போனஸ் ஆக்ட் வரம்பிற்குள் வராத தொழிலாளர்களைப் பொறுத்த அளவில் சிக்ஸ்த்திலி அதாவது 5 ஐடம்களுக்கு பணம் ஒதுக்கப்பட்ட பிறகு மீதி இருக்குமானால் மட்டும்தான் போனஸ் கிடைக்கப்படும் என்ற அபாயம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவேதான் போனஸ் டேபர்டு என்ற முறையில் அந்த சங்கங்களைப் பொறுத்த அளவில் அந்த சங்கங்களின் உறுப்பினர்களின் நலனை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதில் யாருக்கும் ஆட்சேபனை இல்லை. ஆனால் அந்த சங்கத்தின் நலனை பாதுகாத்துக்கொள்ளக்கூடிய அதே நேரத்தில் அதில் பணியாற்றக்கூடிய பணியாளர்களுடைய நலனை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு என்பதை வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன். அரசு இந்த டேபர்டு வேஜ் என்று போனஸ் பொறுத்த அளவில் ஏற்றுக் கொண்டிருக்கக் கூடிய நேரத்தில் சிக்ஸ்த்திலி என்று போட்டு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வலியுறுத்துகிறீர்களா என்று சொல்லுங்கள். முதலிலேயே பேசி முடிந்தாகிவிட்டது. இப்படியே பேசிக் கொண்டு போனால் 4 நாட்கள் ஆகும். மறுபடியும் விவாதம் வேண்டாம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : ஆகவே அமைச்சர் அவர்கள் சிக்ஸ்த்திலி என்பதை பஸ்ட்டிலி என்றாவது போடுவதற்கு முன் வர வேண்டும். அந்த முறையில் இந்த திருத்தங்களை ஏற்றுக் கொள்ளவேண்டும். அதாவது போனஸ் ஆக்ட் பர்வீயுவுக்கு வராத தொழிலாளர்களுக்கும் போனஸ் கிடைப்பதற்கு நடவடிக்கை,, என்ற முறையில் அமைச்சர் அவர்கள் உத்திரவாதம் கொடுக்கக் கூடிய முறையில் இந்த திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

1983 மார்ச் 4]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் பேரவை முன்னுள்ள கேள்வி—

In clause 72, in sub-clause (1),—

(i) in clause (a), *omit* the two words "in the rules";

(ii) for clause (b), *substitute* the following clause, namely—

"(b) The Co-operative research and development fund and the co-operative education fund shall be maintained by the Tamil Nadu Co-operative Union Limited and administered by commitees constituted in accordance with the rules. Such committees shall consist of nominees of the Government (who shall be specialists or technical experts in agriculture or animal husbandry or sugar echnology or textile technology or in such other metter as may be prescribed, or officers of the Government) and also of nominees of the prescribed apex societies.";

(iii) in sub-clause (2), in clause fourthly,—

(a) *for* the words "twelve per cent", *substitute* the words "fourteen per cent";

(b) in the proviso, *for* the words" twelve per cent per annum for the pupose of issue of bonus shares in the manner presecribed", *substitute* the words "fourteen per cent annum subject to the condition that the amount of dividend in excess of fourteen per cent shall be csedited to the share account of the members in such manner as may be prescribed".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

திருவாளர்கள் இரா. கருப்பையா, ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோரின் திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றன.

பிரிவு 72, திருத்தப் பெற்றப்படி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 73

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "பிரிவு 73 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

THE HON. THIRU C. PONNAIYAN : Sir, I move the follwing amendment :—

In clause 73, *renumber* the Explanation as Explanation I and after Explanati on I as so renumberd, *insert* the following Explanation, namely :—

Explanation II. For the purpose of this Chapter and other prov-sions of th s Act, "competent authority" means the competent authority constituted under sub-section (3) of sect on 75 and ncludes the single officer referred to in the proviso to the sa d sub-sect on (3) of sec'ion 75".

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்—

"பிரிவு 73-ல் உள்ள விளக்கத்தை கீழ்க்கண்டவாறு மாற்றி யமைக்கவும்—'

விளக்கம்—

(1) பணியாளர்களின் பணி நிலைமைகள் ஒழுங்குக் கட்டுப் பாடுகள் மற்றும் இதர வேலை நிலைமைகள், மாதிரி நிலை ஆணைகளின் அடிப்படையில் (Model standing orders) நிர்ணயிக்கப்படும்.

(2) மாநில அளவில் அலுவலர்கள். பணியாளர்களுக்கு பணிப் பாதுகாப்பு, வேலை நேரம், விடுப்பு சலுகைகள், குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம் ஒய்வு ஊதியம், ஒரே சீரான முறையில் இருக்கக்கூடிய வகையில் நிர்ணயிக்கப்படும்.

(3) மத்திய சங்கங்கள், தலைமைச் சங்கங்கள், இணைப்புச் சங்கங்கள் ஆகிய ஒவ்வொரு வகையான சங்கங்களின் பணியாளர்களுக்கு சம்பள விகிதங்கள் மாநில ரீதியாக நிர்ணயிக்கப்படும்.' ".

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

1983 மார்ச் 4]

திரு. இரா. கருப்பையா : சங்கத்தில் சம்பளம் பெறும் அலுவலர்களும் பணியாளர்களும் என்ற தலைப்பிலே 73வது பிரிவு அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே பணிகளைத் திறமையாகச் செய்வதற்காகத் தேவைப்படும் சம்பளம் பெறும் அலுவலர்களையும் பணியாளர்களையும் நியமிக்கலாம் என்று பிரதானமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து இந்தப் பணியாளர்களுடைய நிலைமைகள், ஒழுங்கு கட்டுப்பாடுகள், மற்றும் இதர வேலை நிலைமைகள் இவைகள் மாதிரி நிலை ஆணைகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் என்பதையும், மாநில அளவில் அலுவலர்கள், பணியாளர்களுக்குப் பணிப் பாதுகாப்பு, வேலை நேரம், விடுப்பு சலுகைகள், குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம், ஓய்வூதியம் இவை ஒரே சீரான வகையில் இருக்கக் கூடிய முறையில் அளிக்கப்படும் என்பதையும் மத்திய சங்கங்கள், தலைமை சங்கம், கிராம சங்கங்கள் ஆகிய ஒவ்வொரு சங்கத்தின் பணியாளர்களுக்கு சம்பள விகிதங்கள் மாநில ரீதியாக நிர்ணயிக்கப்படும் என்பதையும் அந்த கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களின் வேலை நிலைமைகள் ஒரே மாதிரியான முறையிலே அமைக்கப்படுவதற்கும் அவர்களுடைய ஊதியம் மற்ற எல்லா வசதிகள், அவர்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகள் வசதிகள் அனைத்தும் ஒரே மாதிரியான ஒரே சீரான முறையிலே அளிக்கப்படுகிற வகையிலே இருக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்தி இந்தச் சட்டத்தில் அந்த ஷரத்துக்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற முறையிலே என்னுடைய திருத்தத்தை நான் கொடுத்திருக்கிறேன். பணியாளர்களுக்கு பாதுகாப்பு இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலே கொடுக்கப்பட்டிருக்கிற இந்தத் திருத்தத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, 73வது பிரிவைப் பொருத்தவரைக்கும் பணியாளர்களுக்கு பணியைச் சீரமைக்கவேண்டிய நிலையைக் குறித்து கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தப் பிரிவிலே சட்டத்தையொட்டி rules are to be framed in accordance with this law என்ற முறையிலே பணிகள் எப்படி எப்படி இருக்க வேண்டுமென்பதற்காக அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது. அது மட்டுமல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த திருத்தத்திலே இரண்டாவது விளக்கத்திலேகூட சர்வீஸ் கமிஷனை சட்டத்திலேயே கொண்டுவர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பல்வேறுபட்ட சங்கங்கள், அமைப்புகள் மாநிலத்திலே இருக்கின்ற காரணத்தினாலே அவ்வளவையும் சட்டத்திலே கொண்டுவருவது என்பது இயலாத காரியம். எனவே சட்டத்தை ஒட்டிய விதிகளில் Uniform service condition for different categories and classes என்ற முறையிலே மிக ஆராய்ந்து செய்ய வேண்டியிருக்கின்ற காரணத்தினால் ஏற்கனவே ஆய்வுக் குழுவிலே முடிவு செய்தவாறு இதை விதிகளிலே கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

In clause 73 *runumber* the Explanation as Explanation I and after Explanation I as so renumbered, *insert* the following Explanation, namely :—

"*Explanation* II.— For the purposes of this Chapter and other provisions of this Act, "competent authority" means the competent authority constituted under sub-section (3) of section 75 and includes the single officer referred to in the proviso to the said sub-section (3) of section 75."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

திரு. இரா. கருப்பையா அவர்களின் இருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 73, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

(முற்பகல் 11-40).

பிரிவு 74

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 74 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.

THE HON. THIRU C. PONNAIYAN : Sir, I move the following amendment :—

"In Clause 74, to sub-clause (1) *add* the following :—

"Nothing contained in this Section shall apply to any of the posts in respect of which common cadre of service has been constituted under section 75".

THIRU J. HEMACHANDRAN : Sir, I move the following amendment for Clause 74 :—

"The State Government may constitute one or more cadres of services of managers, assistant managers and other employees for all co-operative societies or a group of co-operative societies on such terms and conditions and in such manner as may be prescribed"

The amendment was duly seconded.

1983 மார்ச் 4]

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

''பிரிவு 74-ல் உட்பிரிவு (1)-ல் 'அமைக்கலாம்' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'அமைக்கும்' என்ற வார்த்தையைச் சேர்க்கவும்.

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத்தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே பணியாளர்களை நியமனம் பண்ணுவது சம்பந்தமாக ஒரு ஷரத்தை வைத்திருக்கிறார்கள். இந்த ஷரத்தைப் பொருத்தவரையில் நான் என்ன தெரிவிக்க விரும்புகிறேன் என்றால், டெபுட்டி மேனேஜர் போன்ற சில போஸ்ட்களுக்கு மேலே உள்ள போஸ்ட்களுக்குத் தான் காமன் கேடர் என்ற அமைப்பை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் என்ன தெரிவிக்க விரும்புகிறேன் என்றால், எல்லா ஊழியர்களையும் இந்த காமன் கேடர்க்குள்ளே கொண்டு வருகிற முறையில் நிலைமைகளை ஏற்படுத்த வேண்டும். இன்றைக்கு புரோமோஷன் போஸ்ட்களுக்கு மட்டும் காமன் கேடர் என்று கொண்டு வந்திருப்பது, மற்ற ஊழியர்களை பொறுத்தவரையில் புரோமோஷன் கிடைப்பதற்கு பாதகமான நிலைமை ஏற்படும்; ஆகவே லேண்ட் மார்ட்கேஜ் சொசைட்டி என்றால், அந்த அமைப்பிற்கு மட்டும், அல்லது மார்க்கெட்டிங் சொசைட்டி என்றால், மாநிலத்தில் இருக்கக்கூடிய மார்க்கெட்டிங் சொசைட்டிகளுக்கு மட்டும் என்று ஒவ்வொரு பிரிவினருக்கும் மாநில அளவிலே ஒரு காமன் கேடர் அமைப்பு கொண்டு வருவது தான் மொத்தமாக ஊழியர்களுடைய நலனை பாதுகாப்பதற்கு உதவியாக இருக்கும். ஆகவே அனைத்து ஊழியர்களைப் பொருத்தவரைக்கும் புரோமோஷன் கிடைப்பதற்கும், ஒவ்வொரு குரூப் ஆப் எம்ப்ளாயிஸ்க்கும் தனித்தனியாக காமன் கேடர் என்ற முறையை கொண்டு வருவது தான் இன்றைக்கு தேவை; அது மட்டுமல்லாமல் இன்றைக்கு புரோமோஷன் போஸ்ட்களை கொண்டு வந்து காமன் கேடர் பொருத்தவரையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், காமன் கேடரை ஆப்ட் செய்யாத ஊழியர்களை வேலையிலிருந்து பிரித்துவிடுவதற்கான ஒரு நிலைமை அமைச்சர் அவர்களின் திருத்தத்தால் ஏற்பட்டிருக்கிறது. நான் என்ன பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் என்றால், ஒவ்வொரு குரூப் ஆப் எம்ப்ளாய்ஸ்க்கும் மாநில அளவிலே காமன் கேடர் சிஸ்ட்டத்தைக் கொண்டு வந்தால் இந்த நிலைமையை தவிர்க்க முடியும். அந்தந்த துறைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களைப் பொருத்தவரையில் அந்தந்த கேட்டகரியில் அவர்கள் ஆப்ட் செய்து அந்த மாவட்டத்திற்குள்ளே அல்லது அவர்களுக்கு மிகப்பெரிய சிரமத்தை கொடுக்காத முறையிலே, காமன் கேடர் என்ற சிஸ்ட்டத்தை பாதிக்காத முறையிலே, பணியாளர்களின் நலனையும் கணக்கில் எடுத்துக் கொண்டு செயலாற்றுகிற ஒரு முறையை ஏற்படுத்தக் கொள்ள முடியும்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1983 மார்ச் 4

"The State Government may constitute one or more cadres of services of managers, assistant managers and other employees for all Co-operative societies or a group of Co-operative societies on such terms and conditions and in such manner as may be prescribed" என்ற திருத்தத்தை கொடுத்திருக்கிறேன். எனக்குத் தெரிந்தவரையில் ஒரு சில மாநிலங்களில் இப்படிப்பட்ட காமன் கேடர் சிஸ்ட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே இன்று இது ஒரு புதிய அமைப்பு அல்ல. மற்ற மாநிலங்களில் இருக்கிற எக்ஸிஸ்ட்டிங் பிராக்டீஸ் என்ற முறையில் அமைச்சர் அவர்கள் இப்படி புரோமோஷன் போஸ்ட்களுக்கு மட்டும் காமன் கேடர் என்று இதை கொண்டு வராமல், அனைத்து ஊழியர்களின் நலனை பாதிக்காத வகையில் அவர்களுக்கு பொருந்துகிற முறையிலே ஒரு காமன் கேடர் சிஸ்ட்டத்தைக் கொண்டு வர வேண்டும். அதற்காக என்னுடைய இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, 74-வது பிரிவிலே அரசு தரப்பிலே அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற திருத்தம் ''பிரிவு 75-ன் கீழ் அமைக்கப்படும் பொதுப் பதவிப் பணியின்கீழ் வரும் எந்தப் பதவிக்கும் இந்தப் பிரிவின் விதித்துறைகள் பொருந்தாது'' என்கின்ற முறையிலே ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். 75-லே பொதுப் பதவி பணி என்பதில், தனியாக எந்த, எந்த வகை ஊழியர்களை அதிலே சேர்த்து, அவர்களுக்கு அந்தப் பொதுப் பதவிப் பணி ஏற்படுத்தலாம் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக நான் குறிப்பிட விரும்புவது அரசு எது, எதற்கு இந்த Recruitment bureau என்பது சம்பந்தமாகவும், Common cadre of service என்பது சம்பந்தமாகவும், திட்டவட்டமாக முடிவு செய்யாத நிலையிலே நாளைக்கு எதை வேண்டுமானாலும்—ஷரத்து 74-ஐ வேண்டுமானாலும் அமுல் செய்யலாம், அல்லது 75-ஐ வேண்டுமானாலும் அமுல் செய்யலாம் என்கின்ற சந்தேகமான நிலைமைக்கு இடம் கொடுக்கக்கூடிய முறையிலே இந்தத் திருத்தம் இடம் அளிக்கிறது. ஆகவேதான் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய திருத்தம் தேவையற்றது. 75-லே வரக்கூடிய பொதுப் பணி சேவை என்கின்ற அந்த வகையிலே வரக்கூடிய ஊழியர்கள் தனி ஊழியர்களாக ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். மேலும், யார், யாரைச் சேர்த்துக்கொள்ளலாம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அதையும், இதையும் இணைக்காத முறையிலே, ஏற்கனவே 74-வது பிரிவு அமைக்கப்பட்டிருக்கிற முறையிலேயே, இந்தப் பிரிவை அமைப்பது சரியாக இருக்கும் என்று கூறி அமைச்சர் அவர்கள் திருத்தத்தை வாபஸ் பெறவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து மிகத் தெளிவாக 74-வது பிரிவிலும், 75-வது பிரிவிலும் கூறப்பட்டிருக்கிறது.

1983 மார்ச் 4] [திரு. சி. பொன்னையன்]

Recrument Bureau என்பது வேறு. Common cadre of service என்பது வேறு என்பது மிகத் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. எந்த, எந்தப் பிரிவு Common cadre of service பிரிவில் கொண்டு வரப்படலாம், மேலும் எதையும் கொண்டு வர வேண்டுமென்றால், அதற்கு என்ன வழிவகைகளை விதியில் செய்யலாம் என்பதுகூட தெளிவாக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக,

The posts in respect of which such services may be constituted of Secretary, Assistant Secretary, Executive Officer, Assistant Executive Officers, General Managers, Assistant General Managers, Development Officers and the like எனக் கொடுத்து வேறு எந்தப் பிரிவினைக் கொண்டு வரவேண்டுமென்றாலும், விதியிலே அவர்களைக் கொண்டு வரலாம் என தெளிவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கிராமப்புறத்திலே இருக்கிற ஒரு கூட்டுறவுக் கடன் சங்கத்தை எடுத்துக் கொள்வோமானால் அந்தக் கடன் சங்கத்திலே பணியாற்றுகிற கடைநிலை ஊழியர்கூட Common cadre of service -ல் வரவேண்டுமென்றால் மாநிலம் முழுவதும் அவர் எங்கு வேண்டுமானாலும் மாற்றம் செய்யப்படலாம் அல்லது இருக்கலாம் என்ற நிலை வருமானால் அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பணியாளர்களுடைய ஒத்துழைப்புச் செம்மையாகக் கிடைக்காது என்ற காரணத்தால்தான் கீழ் மட்டத்திலேயிருக்கிற சாதாரணப் பணியாளர்களையெல்லாம் சங்கத்தினுடைய பொறுப்பில் விட்டு அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று விடுவதுதான் உகந்ததாக இருக்கும். அப்பொழுதுதான் அந்த நிர்வாகக் குழுவிற்குக் கூட கீழேயிருக்கிற ஊழியர்களிடமிருந்து ஒழுங்காக வேலை வாங்கக்கூடிய அளவுக்குச் சங்கத்தினுடைய தன்மையைக் கருதி அது அமையும் என்ற காரணத்தாலேதான் அந்த முடிவு எடுக்கப்பட்டது.

மாண்புமிகு உறுப்பினர் சில மாநிலங்களிலே இருப்பதாகச் சொன்னார்கள். நமது மாநிலத்திற்கு முதன் முறையாக இதைக் கொண்டு வந்திருக்கிறோம். Common cadre of service என்பது மிகமிக முக்கியமான பிரச்னை. இதுகாரும் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் நலிந்த நிலையில் இருக்கிற காரணத்தால் அங்கு நல்ல 'வயபிலிட்டி' ஏற்படுத்தாத நிலையிருக்கிற காரணத்தால், பல இடங்களில் ஊழியர்களுக்குச் சம்பளம்கூட கொடுக்க முடியாத நிலைமைகூட இருக்கிறது. நமது நோக்கம் எல்லாம், Common cadre of service என்ற ஒரு பிரிவைக் கொண்டு வரவேண்டுமென்பது. Common cadre of service வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுகிற பணியாளர்களுக்கெல்லாம் குறைந்தபட்ச நல்ல ஊதியம் கொடுக்க வேண்டும், அதையும் கொண்டு வர வேண்டுமென்பதும், சங்கத்தினுடைய நிர்வாகக் குழு நினைப்பதைப் போல், அந்தச் சங்கத்தினுடைய பணியாளர்களை என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம், தவறுகளுக்கு அவர்களையும் உடந்தையாக்கலாம் என்ற நிலை எல்லாம் இருக்கக் கூடாது

என்ற நோக்கத்தில்தான் அந்தப் பணியாளர்களுடைய ஒட்டு மொத்த நலன் கருதி பலவிதமான பிரிவுகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

[முற்பகல் 11-50]

ஒரு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால்,

Agricultural Credit Society,

Producers Agricultural Marketing Society,

L.D. Banks,

Fisheries Co-operatives, Weavers Co-operative, Dairy Co-operative,

என்று இப்படிப்பட்ட பல்வேறு பிரிவுகள் இருக்கும்பொழுது, திடீரென்று சட்டத்திலே எல்லாவற்றையும் கொண்டு வர வேண்டுமென்றால் அதற்குப் பல பக்கங்கள் ஆகிவிடும், அவ்வப்பொழுது அதற்குச் சில திருத்தங்கள் கொண்டு வர வேண்டுமென்றாலும் கூட சிரமங்கள் ஏற்படும். 'substantive provision of law'

மாற்ற வேண்டிய நிலை கூட ஏற்படும். ஆகவே, சிலவற்றை விதியிலே கொண்டு வரலாம்.

74-ஐப் பொறுத்தவரையில், Reference to recruitment Bureau. The recruitment Bureau will take care of such categories not covered by common categories falling under clause 75. என்ற முறையில் தெளிவாக்க வேண்டுமென்றுதான் இந்த ஷரத்து கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

MR. SPEAKER: The question is:—

In clause 74, to sub-clause (I), *add* the following:

'Nothing contained in this section shall apply to any of the posts in respect of which common cadre of service has been constituted under section 75.'

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

திரு. ஜெ. ஹேமச்சந்திரன் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

திரு. இரா. கருப்பையா அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 74, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

1983 மார்ச் 4]

பிரிவு 75

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—''பிரிவு 75 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

THE HON. THIRU C. PONNAIYAN :—Sir, I move the following amendment :—

'For clause 75, substitute the following clause, namely—

"75. Constitution of common cadre of service :—

(1) Notwithstanding anything contained in this Act or the by-laws made thereunder and subject to the rules made by the Government in this behalf, the Government may, in the interest of the co-operative movement, constitute from time to time, by order in respect of—

(i) scheduled co-operative societies ; or

(ii) primary societies affiliated to such scheduled co-operative societies ; or

(iii) co-operative sugar mills, co-operative spinning mills co-operative tea factories and such other registered societies prescribed for the purposes of sub-section (4) of section 33 ; or

(iv) such other class or category or registered societies in which the Government have taken shares or given financial or other assistance as may be notified by the Government ,one or more common cadre of service in respect of the posts of secretaries, assistant secretaries, executive officers, assistant executive officers, general managers, assistant general managers, managers, assistant managers, purchase managers, purchase officers, assistant purchase officers, develop ment officers, chief accountants, chief accounts officers, accounts officers and such other class or classes of posts as may be notified by the Government. The common cadre of service under this section may be constituted either separately in respect of the said posts in any group of registered societies mentioned in item (i) or item (ii) or item (iii) or item (iv), as the case may be, or jointly for the aforesaid posts in one or more of the groups of registered societies mentioned in the said items (i), (ii), (iii) and (iv) or of two or more of the registered societies in any one of the groups mentioned in the said items.

(2) When any such common cadre of service is constituted under sub-section (1) in respect of any post, all the employees, holding such posts on the date of constitution of such common cadre of service shall be deemed to have been absorbed in the common cadre of service with effect on and from the date of constitution of such common cadre of service :

Provided that the salary (including allowances) of any such umployee shall not be varied to his disadvantage :

Provided further that any such employee may, within such period as may be prescribed ,by notice in writing to the competent authority constituted under sub-section (3) intimate his option for not becoming a member of such common cadre of service, and in that event, his services in the registered society shall stand determined with effect on and from the date of such notice and he shall be entitled to either,—

(i) all the terminal benefits to which he would have been eligible under the by-laws or contract or award applicable to him immediately before the date of constitution of such common cadre of service as if such employee had retired from service ; or

(ii) compensation which shall be equivalent to fifteen days salary of such employee (including allowances) for every completed year of continuous service or any part thereof in excess of six months, whichever is higher.

Explanation :—For the purposes of this sub-section, "continuous service" shall mean an uninterrupted service including service which may be interrupted on account of sickness or authorised leave or an accident.

(3) The order under sub-section (1) shall provide for the constitution of the competent authority which shall be a committee cons sting of both the officers of the Government and non-officials and the total strength of such committee shall not be exceed five, from among whom one of the officers of the Government not below the rank of Joint Registrar in the Co-operative Department or not below such rank in other departments of the Government as may be prescribed shall be appointed by the Government as the chairman, to exercise the powers of recruitment, appointment, transfer and disciplinary control (including censure, stoppage of increment,withholding of promotion, suspension by way of punishment, reduction to a lower rank in the seniority list or to a lower post or time scale whether in the same service or in another service or to a lower stage in a time scale, compulsory retirement, removal or dis missal) and such other powers as may be prescribed in respect of holders of post in such common cadreof service. After the constitution of such competent auhtority, the registered society concerned shall not, in respect of holders of posts in such common cadre of service, exercise any of the powers which are conferred by or under this Act or the rules made thereunder on the competent authority in respect of such common cadre of service. There shall be a sepa ate competent authority in respect of each common cadre of service :

Provided that the Government may direct that for such period not exceeding three years from the date of constitution of a common cader

of service, such committe in relation to that common cadre of service shall consistof only a single officer of the Government not below the rank of Joint Registrar inthe Co-operative Department ornot below such rank inother departments of the Government as may be prescribed; and such officer shall be the "competent authority constituted under sub-section (3) of sectoin 75" for the purposes of this Act and any reference to the competent authority in this Act shall, for the period mentioned in this proviso, be construed as a referense to the single officer aforesaid.

Provided further that the registered society under which an employee borne on a commom cadre of service is for the time being employed shall also have the power to impose on such employee the penalty of censure or stoppage of increment upto two years without cumulative effect.

Explanation.—For the purposes of this sub-section,—

(i) "officers of the Government" means Government servants subordinate to the Registrar for the State not below the rank of Deputy Registrar in the Co-operative Department or not below the rank of Assistant Director in other Departments of the Government;

(ii) "non-officials" means president, vice president or any other member of the board of a registered society of the same class or category in respect of which common cadre of service is constituted.

4 (a) The registered society under which an employee borne on a common cadre of service is employed may request the competent authority to take disciplinary action on, or to transfer, such employee, and if the competent authority fails totake action within a period of thirty days from the date of such request, the registered society may report the matter to the Registrar for taking such action as he may deem necessary

(b) If in the opinion of the Registrar, whether upon a request under clause (a) or otherwise it is necessary or expedient in the interest of any registered society to take disciplinary action on, or to transfer from any registered society, an employee borne on common cadre of service, the Registrar may direct the competent authority to take disciplinary action on or to transfer, such employee and where the competent authority fails so to do, the Registrar may himself take disciplinary action on or order the transfer of such employee from the registered society concerned.

5(a) Any employee of a common cadre of service aggrieved by any order of the competent authority relating to censure stoppage of increment with holding of promotion, suspension by way of punishment

reduction to a lower rank in the seniority list or to a lower post or time scale whether in the same service or in another service or to a lower stage in a time scale compulsory retirement,removal or dismissal, may appeal to the Registrar against such order within sixtydays fromthe date of such order and the Registrar shall follow such procedure as may be prescribed for the disposal of the appeal.

(b) Where the order appealed against is that of the Registrar for the State, the appeal under sub-clause (a) shall lie to the Government

Provided that in disposing of an appeal under this sub-section, the Registrar or the Government, as the case may be, shall give a reasonable opportunity of being heard to the parties concerned;

Provided further that the Registrar or the Government as the case may be, may pass such interlocutory order pending the decision on the appeal as he or they deem fit :

Provided also that the Registrar or the Government, as the case may be, may award costs in any proceedings under this section to be paid either out of the funds of the competent authority or by such party to the appeal as the Registrar or the Government, as the case may be, may deem fit.

(6) (a) any employee borne on a common cadre of service, aggrieved by an order relating to censure or stoppage of increment. passed by a registered society, may appeal to the competent authority.

(b) an appeal under this sub-section shall be made within sixty days from the date of the order appealed against and the competent authority shall follow such procedure as may be prescribed for the disposal of the appeal.

Provided that, in disposing of an appeal under this sub-section, the competent authority shall give a reasonable opportunity of being heard to the parties concerned :

Provided further that the competent authority may pass such interlocutory order pending the decision on the appeal as the competent authority may deem fit:

Provided also that the competent authority may award costs in any proceedings under this sub-section, to be paid either out of the funds of the registered society or by such party to the appeal, as the competent authority may deem fit".

(7) The provisions of section 41 of the Tamil Nadu Shops anp Establishments, Act 1947 (Tamil Nadu Act XXXVI of 1947) shall not apply to the employees of common cadre of service constituted under sub-section (1).

(8) The Government may, by general or special order, require the registered society or class or category of registered societies concerned to make contribution of such sum as may be fixed by them towards the full or partial recoupment of the expenditure incurred or likely to be incurred by the competent authority.

(9) The Government may, by rules, specify the rate at which registered societies shall contribute towards the salary (including allowances), subsistance allowance, leave salary, provident fund and gratuity and such other sums or allowances as may be prescribed of the employees of the common cadre of service.

(10) Any sum to be contributed under sub-section (8) or sub-section (9) may be recovered as if it were an arrear of land revenue and for the purposes of such recovery the Registrar shall have the powers of a Collector under the Tamil Nadu Revenue Recovery Act, 1864 (Tamil Nadu Act II of 1864).

*திரு. இரா. கருப்பையா: நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

பிரிவு 75-ல் உட்பிரிவு (1)-ல் 'உருவாக்குவது அவசியமென்று கருதுமிடத்து அவர்,' என்ற சொற்களை நீக்கவேண்டும்.

மேற்படி உட்பிரிவு (1)-ல் இறுதியில் உள்ள 'ஏற்படுத்தலாம்' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'ஏற்படுத்தப்படும்' என்ற வார்த்தையைச் சேர்க்கவும்.

பிரிவு 75-ல் உட்பிரிவு (2), (1)-க்குப் பதிலாக கீழ்க்கண்டதைச் சேர்க்கவும்—

'உட்பிரிவு (1)-ன் கீழ் பிறப்பிக்கப்படும் ஆணை நியமனக் குழு ஒன்றை மாவட்ட மாநில அளவில் அமைக்கும். இக்குழு தலைமை அல்லது மத்திய அல்லது இணைப்புச் சங்கங்களுக்குத் தேவையான பணியாளர் குறித்து பதவி நியமனம் செய்யும். இக்குழுவில் தலைமை (அ) மத்திய (ஆ) இணைப்புச் சங்கங்களின் பணியாளர்களின் பிரதிநிதிகளும் இடம்பெற வழிவகை செய்யும்'.

பிரிவு 75-ல் உட்பிரிவு (3) மற்றும் (4) முழுமையாக நீக்க வேண்டும்.

(திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.)

THIRU J. HEMACHANDRAN : I move the following amendment—

Substitute the following for clause 75 :

"75. (1) The State Government shall, as soon as may be after the commencement of this Act, constitute a Co-operative Service Commission and shall appoint a person who has been or is a judge of the High Court at Madras or a person who holds or has held a post; not below the rank of a Secretary to the State Government.

(2) The Chairman shall hold office for a term of three years:

Provided that the State Government may extend the term of his office for a period not exceeding one year.

(3) The salaries and allowances of the Chairman shall be such as may be prescribed.

(4) The number of officers and other employees of the Co-operative Service Commission and the Salaries, allowances, terms and conditions of service (including conduct, discipline, and control) of such officers and other employers shall be such as may be prescribed.

(5) The Co-operative Service Commission shall select persons to be appointed in the co-operative societies on such basic monthly salary as may be prescribed.

(6) Every co-operative society shall consult the Co-operative Service Commission on all disciplinary matters affecting a person serving under it including memoranda or petitions relating to such matters as may be specified by the State Government by notification.

(7) The Selection Committee of the Co-operative Service Commission shall consist of :—

(a) the Chairman of the Co-operative Service Commission -

(b) a representative of the State Level Co-operative Society or District level Co-operative Society, as the case may be ; and

(c) a representative of the Co-operative Society for which the selection of the employees is to be made :

Provided that in the case of selection of employees for the State Level Co-operative Society, the Selection Committee shall consist of :—

(a) the Chairman of the State Level Co-operative Service Commission ;

(b) the Chairman of the State Level Co-operative Society ; and

(c) one person conversant with his business to be nominated by the State Government from amongs the employers of the Co operation Directorate of the Government.

(The amendment was duly seconded)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே ரெக்ரூட்மென்ட் பீரோ என்ற அமைப்போடு சேர்ந்து வரும் சில ஷரத்துக்களைப் பற்றித் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. காமன் கேடரைப் பொறுத்தவரையில், கிரியேட் செய்யப்பட்டால், அப்படி உருவாக்கப்படும் பணியாளர்களை நியமனம் செய்ய ரெக்ரூட்மென்ட் பீரோ என்பதற்குப் பதிலாக ஒரு கோவாப்பரேட்டிவ் சர்வீஸ் கமிஷன் ஏற்படுத்த வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

அப்படிப்பட்ட ஒரு சர்வீஸ் கமிஷன் அமைப்பதுதான் தேவை என்று நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்வீஸ் கமிஷன் என்று சொல்லும் நேரத்தில், அவர்களுக்கு இருக்கும் அதிகாரங்களோ, அவர்கள் தேர்வு செய்யக் கிடைக்கும் வாய்ப்புகளோ இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்ற ரெக்ரூட்மென்ட் பீரோவைப் பொறுத்தவரையில் இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, ரெக்ரூட்மென்ட் பீரோ என்பதற்குப் பதிலாக கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் ஒரு சில பணியாளர்களை அல்ல, ஆயிரக்கணக்கான பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டிய தேவை ஏற்படுகிறது. மாநில ரீதியாக இப்படிப் பல ஆயிரக்கணக்கான பணியாளர்களைத் தேர்வு செய்யும் அதிகாரங்களை ஒரு சில ரெக்ரூட்மென்ட் பீரோக்களுக்குப் பங்கு போட்டுக் கொடுப்பது சரியாக இருக்காது. ஒரே ஒரு கேடருக்கோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கேடர்களுக்கோ பொருந்தும் வகையில் கூட்டுறவு சர்வீஸ் கமிஷனை அமைக்க வேண்டும். அவ்வாறு அமைத்து அது பணியாளர்களைத் தேர்வு செய்யும் நேரத்தில் நியாயம் கிடைக்க உதவியாக இருக்கும். ஆகவேதான், கூட்டுறவு சர்வீஸ் கமிஷன் அமைக்க வேண்டுமென்ற திருத்தத்தை நான் பிரேரேபித்துக் கொள்கிறேன்.

இந்த சர்வீஸ் கமிஷனில் உறுப்பினர்களாக இருப்பதற்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்பது குறித்தும், யாராக இருக்க வேண்டும் என்பது குறித்தும் சில விஷயங்களைத் திருத்தத்திலேயே கூறியிருக்கிறேன். ஆகவே, அந்த விஷயங்களை நான் சொல்ல விரும்பவில்லை.

ஆகவே, இப்படிப்பட்ட ஒரு ஸ்டேட் லெவல் கோ-ஆப்பரேட்டிவ் சர்வீஸ் கமிஷன் அமைத்துக்கொள்ள வேண்டுமென்ற என்னுடைய திருத்தத்தை நான் வலியுறுத்துகிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 75-வது பிரிவில் பொதுப் பதவித் தரப் பணி அமைப்பு என்கிற அமைப்பை ஏற்படுத்தவேண்டுமென்ற முறையிலே இந்தச

சட்டத்திலே இந்தப் பிரிவிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. என்னுடைய திருத்தம் அதை அமைக்கலாம் அல்லது ஏற்படுத்தலாம் என்கிற அடிப்படையிலே கூறப்பட்டிருக்கிறது. இது அமைக்கப்படவேண்டும் அல்லது ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கட்டாயமாக்கக்கூடிய முறையிலே வார்த்தைகள் அமைக்கப் படவேண்டும். இம்மாதிரியான முறையிலே அமைக்கப்படக்கூடிய பொதுப் பதவித்தர பணி அமைப்பில் ஊழியர்களை தேர்ந்தெடுப்பதற்கான அமைப்பிலே பல்வேறு அரசு பிரதிநிதிகள் மற்றும் சங்கங்களுடைய பிரதிநிதிகள் இடம் பெறுவார்கள் என்ற முறையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் இம்மாதிரியான குழுவிலே ஊழியர்களுடைய, பணியாளர்களுடைய பிரதிநிதிகள் இடம் பெற வேண்டும் என்ற முறையிலே மாற்றங்கள் செய்யவேண்டுமென்ற முறையிலே என்னுடைய திருத்தத்தைக் கொடுத்து இருக்கிறேன். ஆகவே, அந்த அடிப்படையிலே அவர்களும் இதிலே இடம் பெறக்கூடிய முறையிலே திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இதிலே நான் சொல்லுவது இந்தப் பொதுப்பதவித்தர பணி அமைப்பின் கீழ் வரக்கூடிய ஊழியர்களுடைய நிலைகள் சம்பந்தமாக, அவர்கள் மீது எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் சம்பந்தமாக, அளிக்கக் கூடிய தண்டனைகள் சம்பந்தமாக, இதிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்தப் பிரிவிலே குறிப்பிடப்பட்டிருப்பது பதிவாளர் யாரையும் எந்த இடத்திற்கும் மாற்றலாம் என்ற அடிப்படையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது, அல்லது மாற்றுவதற்கான முறையிலே கட்டளை இடலாம் என்ற முறையிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. வேலை நீக்கம், செய்வது தற்காலிக வேலை நீக்கம் செய்வது போன்றவற்றைச் செய்வதற்கு பதிவாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இது சரியானதாக இருக்கமுடியாது. ஏன் என்றால் அந்த ஊழியர்கள் பணிபுரியக்கூடிய அந்தச் சங்கத்திலே அவர்களை வைத்து வேலை வாங்குவது என்பது, அவர்கள் ஒழுங்காக வேலை செய்கிறார்களா, அவர்களுடைய வேலை முறைகள் எப்படி இருக்கிறது என்பதையெல்லாம் கண்காணித்து அவர்களுக்கு ஊதியத்தை அளிக்கக்கூடிய அந்தச் சங்கத்தினுடைய நிர்வாகக் குழு அல்லது தலைவர் அவர்களுக்கு ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான முறையிலே அதிகாரம் இருக்க வேண்டுமே தவிர, அதற்கு அப்பாற்பட்டு வேறு இடங்களிலே இருக்கக்கூடியவர்கள் இந்த அதிகாரத்தை பெறுவது என்பது நடைமுறையில் இந்தச் சங்கங்கள் சுமுகமான முறையிலே, நல்லமுறையிலே இயங்குவதைத் தடுப்பதோடு, நிர்வாகத்தைச் சீர்குலைப்பதற்கு இது வழிவகைகளைச் செய்யும் என்ற காரணத்திலே, இந்த மாதிரியான அதிகாரங்கள், இந்தச் சட்டத்தின் மூலமாக, இந்தப் பிரிவின் மூலமாக வழங்கப்படுவது தடுக்கப்படவேண்டும். எனவே, இந்த 75-வது பிரிவில் உட்பிரிவு 3, 4 ஆகிய, 2 பிரிவுகளை நீக்கவேண்டுமென்று நான் திருத்தத்தைக் கொடுத்து இருக்கிறேன். ஆகவே வேலையை யார் வாங்குகிறார்களோ அவர்களுக்கு தண்டனை

1983 மார்ச் 4] [திரு. இரா. கருப்பையா]

அளிக்கக்கூடிய உரிமையும் வழங்கப்படுவதுதான் இயற்கை நியதி. அதுதான், சட்டமும்கூட. ஆக அந்த அடிப்படையில் அதிகாரத்தை வழங்குவதுதான் சரியாக இருக்கும். எனவே, இந்த மாதிரியான முறையிலே சட்டங்களை இயற்றுவது நடைமுறையிலே இது பொருந்துமா, பொருந்தாதா என்ற கேள்வியைக்கூட எழுப்புவதற்கு இது இடம் கொடுக்கும். ஏற்கெனவே, உச்ச நீதிமன்றத்திலே இந்த மாதிரியான வழக்குகளிலே, யார் வேலை வாங்குகிறார்களோ, யார் நியமிக்கிறார்களோ அவர்களுக்கு இந்த அதிகாரம் அளிப்பது தான் சரியானதாக இருக்கமுடியும் என்ற முறையிலே தீர்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக இன்றைக்கு ரெக்ரூட்டிங் என்று வரக்கூடிய சமயத்திலே, பேங்கிங் கமிஷன் இருக்கிறது. பல்வேறு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலே பணிபுரியக்கூடிய ஊழியர்களைத் தேர்ந்து எடுக்கிறார்கள். பல்வேறு வங்கிகளிலே அவர்கள் வேலை செய்வதற்குப் பணிக்கப்படுகிறார்கள். அவர்கள் சம்பந்தமாக ஒழுங்கு நடவடிக்கை என்று வருகிற சமயத்தில் அந்த வங்கியில் இருக்கின்ற மேலாளர்கள், அல்லது அந்த வங்கிகளுடைய நிர்வாகிகள் தான் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரத்தைப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தான் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

(நண்பகல் 12-00)

ஆகவே, எல்லாவற்றையும் வைத்துப் பார்க்கிறபோது, பதிவாளருக்கு வழங்கப்பட்டிருக்கிற இந்தக் கட்டளையிடும் அதிகாரம், மாற்றம் செய்கிற அதிகாரம், வேலை நீக்கம் செய்கிற அதிகாரம், தற்காலிக நீக்கம் செய்கிற அதிகாரம் ஆகியவற்றை மாற்றவேண்டும். அதை நீக்கவேண்டும் என்று கேட்டு, என்னுடைய திருத்தத்தை நான் வற்புறுத்துகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்ட அறிவிப்பின்படி சப்-கிளாஸ் 6 வரையில் தான் இந்தப் பிரிவில் இருந்தது. அதனால் சப்-கிளாஸ் 6 வரையில் நாங்கள் திருத்தம் கொடுத்து இருக்கிறோம். ஆனால் நேற்று அமைச்சர் அவர்கள் கொடுத்த திருத்தத்தில் சப்-கிளாஸ் 7 என்று போடப்பட்டு இருக்கிறது. ஆகவே அந்த சப்-கிளாஸ் 7 தனியாக எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு பிரிவின் மீது எத்தனை சப்-கிளாஸ் இருந்தாலும் அவையெல்லாம் சேர்த்துத்தான் எடுத்துக்கொள்ளப்படும். அந்த முறையில் பிரிவு 75-ம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : அப்படியானால், நான் சப்-கிளாஸ் 7-ன் மீது சில கருத்துக்களைப் பேசவேண்டியிருக்கிறது. பிரிவு 75(7)-ல்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1983 மார்ச் 4

"The provisions of section 41 of the Tamil Nadu Shops and Establishments Act, 1947 shall not apply to the employees of common cadre of service constituted under sub-section (1)."
என்று போடப்பட்டு இருக்கிறது.

ஏற்கனவே செக்ஷன் 44-ன்படி அனைத்து கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்கள் குறித்தும் ஒரு ஷரத்து கொண்டு வரப்பட்டது. கூட்டுறவு சங்கங்களைப் பொறுத்த வரையில் ''ஷாப் அன்ட் எஸ்டாபிளிஷ்மென்ட் ஆக்ட்'' செக்ஷன் 41 (1) தவிர மீதி ஷரத்துக்களுக்கு தான் விதிவிலக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது அமைச்சர் அவர்கள் செக்ஷன் 41-க்கே விதிவிலக்கு கொடுக்கக் கூடிய முறையில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து இருக்கிறார் என்பதைப் பார்க்கிற போது தொழிலாளி வர்க்கத்தின் அடிப்படையான ஜனநாயக தொழிற்சங்க உரிமையைப் பறிக்கும் ஒரு திருத்தமாக அது இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொண்டு, இந்தத் திருத்தத்தை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்தது சரியல்ல என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு வேளை காமன்கேடரில், ப்ரமோஷன் போஸ்டில் இருக்கக் கூடியவர்களுக்குமட்டும்தான் இப்படி ஒரு விதிவிலக்கு கொண்டு வந்து இருக்கிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை.

இந்த நேரத்தில் நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வரவிரும்புகிறேன். இந்த அமென்ட்மென்டின் மூலம் தொழிலாளிக்கு இருக்கும் ஒரு உரிமையைத் தடுக்கும் வகையில் செய்வது நியாயமல்ல. இதற்கு ஒரு எடுத்துக் காட்டு சொல்ல விரும்புகிறேன். நாகர்கோயிலில் கன்னியாகுமரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் இருக்கிறது. அங்கே பணியாற்றிக் கொண்டு இருக்கிற ஒருவர் 6 மாத காலம் பெயிட் அப்ரென்டிஸ்ஸாக இருந்தார். (ரெப்ரிஜெரேஷன் ப்ளான்ட் ஆப்பரேட்டர்). அதற்குப் பிறகு இரண்டு வருஷம் ரிலீவிங் ஆப்பரேட்டராக இருந்தார். அந்தப் போஸ்டில் பர்மனென்ட் ஆக ஆக்குகின்ற காலத்தில், அங்கேயுள்ள டெபுடி மில்க் கமிஷனர், அந்த நபருடைய கேஸ் பரிசீலனை செய்யப்படும் என்று உத்தரவாதம் கொடுத்தார். அப்படிக் கொடுத்ததற்குப் பிறகும், அந்த இடத்திற்கு எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சு மூலம் செல்லாமல் வந்த ஒருவரை அங்கேயிருக்கும் நிர்வாகம் நியமனம் செய்தது. அந்த ஊழியர், அதன் பேரில், பல ரெப்ரசென்டேஷன் கொடுத்ததற்குப் பிறகும் அவருக்கு எந்த விதமான நியாயமும் கிடைக்காமல் இருந்த காரணத்தால், அசிஸ்டென்ட் லேபர் கமிஷனர் முன்னால் செக்ஷன் 44-ன் கீழ் அப்பீல் போட்டார்கள். அந்த அப்பீல் எடுக்கும் நேரத்தில் அங்கேயிருக்கக் கூடிய நிர்வாகம் என்ன செய்தார்கள் என்றால் எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சில் லிஸ்ட் கேட்டு, அந்தக் குறிப்பிட்ட போஸ்

டிற்கு எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சு வழியாக ஒருவரைத் தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுத்தார்கள். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இந்தக் கூட்டுறவு மில்க் யூனியனைப் பொறுத்தவரையில் எந்த அப்பாயின்ட்மென்டும் இதுவரையில் எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சின் வழியாக எடுக்கப்படவில்லை. இன்று அந்த மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் ஒரு போர்ட் அமைக்கப்பட்ட பிறகும், அந்த போர்ட் வந்த பிறகு எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சு வழியாக இதுவரையில் எடுக்கப்படாத நிலையில் அப்பீல் என்று லேபர் டிப்பார்ட்மென்ட் முன்னால் இருக்கும் நேரத்தில் அவருடைய லீகல் ரைட்டை, ஓவர்டேக் செய்யும் முறையில் எம்ப்ளாயிமென்ட் எக்ஸ்சேஞ்சு வழியாக ஆளை எடுத்து நியமனம் செய்ய முயற்சிக்கிறார்கள்.

ஆகவே இப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையை நிர்வாகம் மனப் பூர்வமாக ஒரு தொழிலாளியைப் பழிவாங்க வேண்டுமென்ற முறையில் எடுக்கும்போது அவர்களுக்கு இருக்கக் கூடிய ஒரே ஒரு பாதுகாப்பு அப்பீல் செய்வதுதான். அந்த பாதுகாப்பு கூட இன்றைக்கு எடுக்கப்படும் என்றால் அந்தத் தொழிலாளிக்கு எந்த விதமான பாதுகாப்பும் இல்லாமல் போய்விடும்.

சாதாரணமாக பொது நிறுவனங்களில் பணியாற்றக் கூடிய ஊழியர்களை எம்பிளாய்மென்ட் எக்சேஞ்ச் மூலமாகத்தான் எடுக்க வேண்டுமென்று விதிகள் இருக்கும் போது பகிரங்கமாக அதை மீறிவிட்டு, லேபர் டிஸ்பியூட் வரும்போது, அந்தத் தொழிலாளியை பழிவாங்கும் ஒரு நடவடிக்கையாக அவர்கள் ஒரு நடவடிக்கையை எடுக்கும்போது செக்ஷன் 44-ல் இருக்கக் கூடிய அப்பீல் நடவடிக்கையை ஓவர்டேக் பண்ணுவது நியாயமல்ல. இது தொழிலாளர்களுக்கு எந்தவகையிலும் நியாயம் வழங்காது. இப்படிப்பட்ட நிர்வாக நடவடிக்கைகளின் மூலம் பாதிக்கப்படும் தொழிலாளிக்குக் கிடைக்கக் கூடிய பாதுகாப்பு செக்ஷன் 44-ல் உள்ள அப்பீல் ப்ரொவிஷன்தான். கூட்டுறவுச் சங்கங்களில் பணி யாற்றும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பாக இருப்பது இந்த செக்ஷன் 44 அப்பீல் தான். அதை நீக்குவது அந்த தொழிலாளர்களின் ஜனநாயக உரிமையை பறிமுதல் செய்யக் கூடியதாக இருக்கும். அப்படிப்பட்ட ஒரு திருத்தத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டுவர வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''காமன் கேடர் சர்வீஸை''ப் பொறுத்த வரையில் நான் ஏற்கனவே விளக்கமாகச் சொன்னதைப் போல இது கூட்டுறவு இயக்கத்திலே பணியாற்றக் கூடிய பணி யாளர்களுடைய ஒட்டுமொத்த நன்மைக்காக புதிதாக நாம் கொண்டு வந்திருக்கிற ஒரு பிரிவு. நான் ஏற்கனவே கூறியதைப் போல அவர்களுடைய பணி பாதுகாப்பு, சீரான ஊதியம் வழங்கப்

படுவது போன்றவை நல்ல முறையில் இருக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையிலே இந்தப் பிரிவை கொண்டு வந்திருக்கிறோம்.

கூட்டுறவுச் சங்கத்திலே பணியாற்றக் கூடிய பணியாளர்களை அந்தச் சங்கத்தை நிர்வகித்து வருகின்ற ஆதிக்க சக்திகள் அடிமைகளைப் போல நடத்துகிறார்கள்; அந்தந்த மாதம் அவர்களுக்கு ஊதியம் கூட கொடுக்கப்படாத நிலைமை இருந்தும் அவர்கள் எல்லாம் வாய் மூடி மவுனிகளாக இருக்கிறார்கள்; ஆகவே அந்தப் பணியாளர்களுக்கு பாதுகாப்பு இருக்க வேண்டும்; அதற்கு சட்டத்திலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று குழுவின் ஆய்வுக்கு வந்த கருத்தின் அடிப்படையிலேதான், நிரந்தரமாக அவர்களுக்கு பாதுகாப்பு இருக்க வேண்டுமென்றுதான், constitution of common cadre of service என்று நாம் கொண்டு வந்திருக்கிறோம். இதில் எந்த எந்த கேடரைக் கொண்டு வரலாம் என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இன்னும் என்னென்ன கேடரை கொண்டு வரலாம் என்பதற்கு விதிகளிலே இடம் இருக்கிறது.

சில நேரங்களில் கூட்டுறவுச் சங்கத்தில் இருக்கிற பணியாளர்களை அந்தந்த உள்ளூரிலிருந்து எடுத்தால்தான் சங்கத்தின் நிர்வாகம் ஒழுங்காக இருக்கும் என்பதாலும் பணியாளர்களின் சுமை குறையும் என்பதாலும் சில பணியாளர்களை அந்தந்த சங்கமே ரெக்ரூட்மென்ட் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று வைத்திருக்கிறோம். அப்படி ரெக்ரூட்மென்ட் செய்யும் போது உள்ளூரில் உள்ளவர்களுக்கு முக்கியமாக வாய்ப்பு கொடுக்க வேண்டும். Recruitment Bureau at state level and district level for different categories என்ற முறையிலே அவர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

கூட்டுறவில் பல்வேறு வகைப்பட்ட சங்கங்கள் இருக்கின்றன. அதைப் போல பல்வேறு வகைப்பட்ட கேடர் பணியாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே இப்போது சொல்லியிருப்பதைத் தவிர, இன்னும் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது என்னென்ன பிரச்சனைகள் வரும் என்று பின்னாலே தான் தெரிய வரும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் அந்தந்த பகுதியிலே இருக்கிற பணியாளர்களை மிகத் தூரமான பகுதிக்கு மாற்றக்கூடிய நிலைமை கூட ஏற்படும் என்று சொன்னார்கள். அந்த அச்சம் கூட ஏற்படக்கூடாது என்பதற்கும் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. உதாரணமாக கிரடிட் சொசைட்டியாக இருந்தால் அந்த வட்டத்திற்குள், ஒரு ரெவின்யூ டிவிஷன் அளவுக்குள்தான் மாற்ற வேண்டும். மார்க்கெட்டிங் சொசைட்டியாக இருந்தால் அந்த மாவட்டத்திற்குள்ளேதான் மாற்றம் செய்ய வேண்டும். டிஸ்டிரிக்ட் சென்ட்ரல் பாங்க்,

1983 மார்ச் 4] [திரு. சி. பொன்னையன்]

அல்லது சென்ட்ரல் சொசைட்டியாக இருந்தால், இந்த மாநிலத்தில் 16 சென்ட்ரல் பாங்க் இருக்கிறது என்றால் இந்த 16 மாவட்டங்களுக்குள் மாற்றலாம் என்ற வகையிலே விதிகளைக் கொண்டுவர இருக்கிறோம். பல்வேறு வகைப்பட்ட பணியாளர்கள் இருப்பதால் எந்த எந்த வகையிலே அவர்களுக்கு நன்மை செய்ய முடியும், ஆதிக்கச் சக்தியிலிருந்து எப்படி விடுவிக்கலாம் என்று பார்த்து அதற்குரிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[பிற்பகல் 12-10]

அதே நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்களுடைய வளர்ச்சியையும் பேணி பாதுகாக்க வேண்டும் என்ற இரண்டு நோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டுதான் உள்ளூர் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கும் சில பகுதிகளில் முக்கியத்துவம் தரவேண்டும் என்ற நோக்கோடு, ரெக்ரூட்மெண்ட் போர்டு மூலமாகவோ அல்லது அந்த சொசைட்டியே நேரிடையாக தேர்ந்தெடுக்கவோ செய்யலாம் என்ற வகையில் பிரிவுகளை எல்லாம் நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் பேசுகிற போது, இன்னொரு அச்சத்தைக் கூட வெளியிட்டார்கள். சில நேரங்களில் சங்கங்களில் பணிபுரிகிறவர்களின் மீது அந்த சங்கத்தை சேர்ந்த நிர்வாக குழுவிற்கு நடவடிக்கை எடுக்கக் கூடிய அதிகாரமே இல்லை என்றால் எல்லாமே காமன் கேடர் ஆப் சர்வீஸ், காம்பிடென்ட் அத்தாரிட்டிதான் நடவடிக்கை எடுப்பார் என்று வருமேயானால் அந்தச் சங்கத்தினுடைய நிர்வாகம் எப்படி நடக்கும், பணியாளர்கள் எப்படி நிர்வாகிகளுக்கு கட்டுப்பட்டு ஒழுக்கத்தோடு நடப்பார்கள் என்ற கருத்தை அவர்கள் வெளியிட்டார்கள். அது உண்மையான பிரச்னைதான்.

ஆனால் அதையும் மாற்ற வேண்டும் என்ற நோக்கோடு இரண்டு வித நிலையை நாம் ஏற்படுத்துகிறோம். அந்த சங்கத்தில் பணியாற்றக் கூடியவர்கள் சங்கத்தினுடைய நிர்வாக குழுவிற்கு குறைந்தபட்ச ஒழுக்கக் கட்டுப்பாட்டோடு அவர்கள் செயல்பட வேண்டும் என்ற நோக்கோடு புதியதாக ஒரு அரசு சட்டத்திருத்தமாக நாம் கொடுத்திருப்பது, காமன் கேடர் ஆப் எம்பிளாயீஸ் தவிர, மற்றவர்களுக்கு குறைந்த பட்ச தண்டனை என்ற வகையில், மைனர் பனிஷ்மெண்ட் என்று சொல்லப்படுகிற, "Censure or stoppage of increment without cumulative effect for two years" என்கிற தண்டனைகளை மட்டும், அந்த குறைந்த பட்சத் தண்டனைகளை மட்டும், அந்தச் சங்கங்களே வழங்கலாம் என்று வருகிறபோது, சங்கத்தினுடைய ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு அந்த பணியாளர்கள் பணியாற்ற முடியும்,

ஆனால் மேஜர் பனிஷ்மெண்ட் என்று சொல்லக்கூடிய, சஸ் பென்ஷன் அல்லது ரிமூவல் பிரம் சர்வீஸ் என்று சொல்லக்கூடிய தண்டனைகளை எல்லாம் சங்க நிர்வாகக் குழுவே வழங்கலாம் என்று வருமேயானால், அந்தச் சங்கத்தில் பணியாற்றக்கூடிய ஊழியர்கள், அந்தச் சங்கத்தினுடைய நிர்வாக குழுவைச் சேர்ந் தவர்களுக்கு, சில நேரங்களில் அவர்களது முறை மீறிய செய லுக்கு உடந்தையாக இல்லை என்றாலும் கூட, ஏதேனும் கார ணத்தின் அடிப்படையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து விடலாம் என்ற காரணத்தால் தான், "major punishments should be vested only with the competent authority pertaining to the common cadre of service" என்ற முறையில் அதைப் பிரித்து நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் குறிப் பிட்ட செக்ஷன் 41 ஆப் தி ஷாப்ஸ் அண்ட் எஸ்டாபிளிஷ்மெண்ட் ஆக்ட், 1947-ஐப் பொறுத்தவரைக்கும், அனைத்து தொழிலாளர் களுக்கும் அல்ல, இந்தக் காமன் கேடரில் இருக்கும் தொழி லாளர்களுக்கு என்று மட்டும் தான் போடப்பட்டிருக்கிறது. அதி லேயும் நடைமுறையில் என்னென்ன பிரச்னைகள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்து, எதிர்காலத்தில் அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும். எனவே திருத்தத்தை ஏற்கு மாறு அவையை வேண்டுகிறேன்.

திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், இரா. கருப்பையா ஆகி யோரின் திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:—

For clause 75, *substitute* the following clause, namely :—

"75. *Constitution of common cadre of service.*—(1) Notwithstanding anything contained in this Act or the by-laws made thereunder and subject to the rules made by the Government in this behalf, the Government, may, in the interest of the co-operative movement, constitute from time to time, by order in respect of,—

(i) scheduled co-operative societies ; or

(ii) primary societies affiliated to such scheduled co-operative societies ; or

(iii) co-operative sugar mills, co-operative spinning mills and co-operative tea factories and such other registered societies prescribed for the purposes of sub-section (4) of section 33 ; or

(iv) such other class or category of registered societies in which the Government have taken shares or given financial or other assistance as may be notified by the Government, one or more common cadre of service in respect of the posts of secretaries, assistant secretaries, executive officers, assistant executive officers, general managers, assistant general managers, managers, assistant managers, purchase managers, purchase officers, assistant purchase officers, development officers, chief accountants, chief accounts officers, accounts officers and such other class or classes of posts as may be notified by the Government. The common cadre of service under this section may be constituted either seperately in respect of the said posts in any group of registered societies mentioned in item (i) or item (ii) or item (iii) or item (iv), as the case may be, or jointly for the aforesaid posts in one or more of the groups of registered societies mentioned in the said items (i), (ii), (iii) and (iv) or of two or more of the registered societies in any one of the groups mentioned in the said items.

(2) When any such common cadre of service is constituted under sub-section (1) in respect of any post, all the employees, holding such posts on the date of constitution of such common cadre of service, shall be deemed to have been absorbed in the common cadre of service with effect on and from the date of constitution of such common cadre of service :

Provided that the salary (including allowances) of any such employee shall not be varied to his disadvantage :

Provided further that any such employee may, within such period as may be prescribed, by notice in writing to the competent authority constituted under sub-section (3) intimate his option for not becoming a member of such common cadre of service, and in that event, his services in the registered society shall stand determined with effect on and from the date of such notice and he shall be entitled to either,—

(i) all the terminal benefits to which he would have been eligible under the by-laws or contract or award applicable to him immediately before the date of constitution of such common cadre of service as if such employee had retired from service ; or

(ii) compensation which shall be equivalent to fifteen days salary of such employee (including allowances) for every completed year of continuous service or any part thereof in excess of six months, whichever is higher.

Explanation.—For the purposes of this sub-section, "continuous service" shall mean an uninterrupted service including service which may be interrupted on account of sickness or authorised leave or an accident.

(3) The order under sub-section (1) shall provide for the constitution of the competent authority which shall be a committee consisting of both the officers of the Government and non-officials and the total strength of such committee shall not exceed five, from among whom one of the officers of the Government not below the rank of Joint Registrar in the Co-operative Department or not below such rank in other departments of the Government as may be prescribed shall be appointed by the Government as chairman, to exercise the powers of recruitment, appointment, transfer and disciplinary control (including censure, stoppage of increment, withholding of promotion, suspension by way of punishment, reduction to a lower rank in the seniroity list or to a lower post or time scale whether in the same service or in another service or to a lower stage in a time scale, compulsory retirement, removal or dismissal) and such other powers as may be prescribed in respect of holders of posts in such common cadre of service. After the constitution of such competent authority, the registered society concerned shall not, in respect of holders of posts in such common cadre of service, exercise any of the powers which are conferred by or under this Act or the rules made thereunder on the competent authority in respect of such common cadre of service. There shall be a separate competent authority in respect of each commom cadre of service :

Provided that the Government may direct that for such period not exceeding three years from the date of constitution of a common cadre of service, such committee in relation to that common cadre of service, shall consist of only a single officer of the Government not below the rank of Joint Registrar in the Co-operative Depatrment or not below such rank in other departments of the Government as may be prescribed ; and such officer shall be the "competent authority constituted under sub-section (3) of section 75" for the purposes of this Act and any reference to the competent authority in this Act shall for the period mentioned in this proviso, be construed as a reference to the single officer aforesaid:

Provided further that the registered society under which an employee borne on a common cadre of service is for the time being employed shall also have the power to impose on such employee the penalty of censure or stoppage of increment up to two years without cumulative effect.

Explanation.—For the purposes of this sub-section,—

(i) "Officers of the Government" means Governent servants subordinate to the Registrar for the State now below the rank of Deputy Registrar in the Co-operative Department or not below the rank of Assistant Director in other departments of the Government ,

(ii) "non-officials" means president, vice-president or any other member of the board of a registered society of the same class or category in respect of which common cadre of service is constituted.

(4) (*a*) The registered society under which an employee borne on a common cadre of service is employed may request the competent authority to take disciplinary action, on or to transfer, such employee, and if the competent authority fails to take action within a period of thirty days from the date of such request, the registered society may report the matter to the Registrar for taking such action as he may deem necessary.

(*b*) If in the opinion of the Registrar, whether upon a request under clause (*a*) or otherwise, it is necessary or expedient in the interest of any registered society, to take disciplinary action on, or to transfer from any registered society, an employee borne on, common cadre of service, the Registrar may direct the competent authority to take disciplinary action on or to transfer, such employee and where the competent authority fails so to do, the Registrar may himself take disciplinary action on or order the transfer of such employee from the registered society concerned.

(5) (*a*) Any employee of a common cadre of service aggrieved by any order of the competent authority relating to censure, stoppage of increment, withholding of promotion, suspension by way of punishment, reduction to a lower rank in the seniority list or to a lower post or time scale whether in the same service or in another service or to a lower stage in time scale, compulsory retirement, removal or dismissal, may appeal to the Registrar against such order within sixty days from the date of such order and the Registrar shall follow such procedure as may be prescribed for the disposal of the appeal.

(*b*) where the order appealed against is that of the Registrar for the State, the appeal under sub-clause (*a*) shall lie to the Government:

Provided that in disposing of an appeal under this sub-section, the Registrar or the Government, as the case may be, shall give a reasonable opportunity of being heard to the parties concerned :

Provided further that the Registrar or the Government as the case may be, may pass such interlocutory order pending the decision on the appeal as he or they deem fit.

Provided also that the Registrar or the Government, as the case may be, may award costs in any proceedings under this section to be

paid either out of the funds of the competent authority or by such party to the appeal as the Registrar or the Government, as the case may be may deem fit.

(6) (a) Any employee borne on a common cadre of service aggrieved by an order relating to censure or stoppage of increment, passed by a registered society, may appeal to the competent authority.

(b) An appeal under this sub-section shall be made within sixty days from the date of the order appealed against and the competent authority shall follow such procedure as may be prescribed for the disposal of the appeal :

Provided that, in disposing of an appeal under this sub-section, the competent authority shall give a reasonable opportunity of being heard to the parties concerned :

Provided further that the competent authority may pass such interlocutory order pending the decision on the appeal as the competent authority may deem fit :

Provided also that the competent authority may award costs in any proceedings under this sub-section, to be paid either out of the funds of the registered society or by such party to the appeal, as the competent authority may deem fit.

(7) The provisions of section 41 of the Tamil Nadu Shops and Establishments Act, 1947 (Tamil Nadu Act XXXVI of 1947) shall not apply to the employees of common cadre of service constituted under sub-section (1).

(8) The Government may, by general or special order, require the registered society or class or category of registered societies concerned to make contribution of such sum as may be fixed by them towards the full or partial recoupment of the expenditure incurred or likely to be incurred by the competent authority.

(9) The Government may, by rules, specify the rate at which the registered societies shall contribute towards the salary (including allowances), subsistance allowance, leave salary, provident fund and gratuity and such other sums or allowances as may be prescribed of the employees of the common cadre of service.

(10) Any sum to be contributed under sub-section (8) or sub-section (9) may be recovered as if it were an arrear of land revenue and

for the purposes of such recovery, the Registrar shall have the powers of a Collector under Tamil Nadu Revenue Recovery Act, 1864 (Tamil Nadu Act II of 1864).

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

திரு. இரா. கருப்பையா, திரு. ஹேமச்சந்திரன் ஆகியவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றன.

பிரிவு 75 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 76

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி. "பிரிவு 76 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.—

In clause 76—

(i) *for* the expression "common cadre of employees", wherever it occurs, *substitute* the expression "common cadre of service";

(ii) in sub-clause (1), *for* the expression "the appointment committee or the apex or central society as the case may be", *substitute* the expression "the competent authority constituted under sub-section (3) of section 75";

(iii) in sub-clauses (2), (3) and (4), *for* the expression "appointment committee or the apex or central society" wherever it occurs, *substitute* the expression "competent authority".

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

Substitute the following for Clause 76: "However, irrespective of the number of employees employed in any registered co-operative society, the Industrial Employment (Standing Orders) Act, 1946 (Central Act XX of 1946) and Tamil Nadu Rules be applicable to them."

திருத்தம் முறைப்படி வழி மொழியப்பெற்றது.

*திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

[திரு. இரா. கருப்பையா] [1983 மார்ச் 4

பிரிவு 76-க்குப் பதிலாக கீழ்க்கண்டவாறு சேர்க்கவும்:—

'(76) (1) ஒரு பதிவான சங்கத்தில் சம்பளம் வாங்கும் ஓர் அதிகாரி அல்லது பணியாளர் குற்றங்கள் செய்துள்ளார் அல்லது அவ்வாறு செய்வதற்குப் பொறுப்பாளியாக இருந்துள்ளார் என்று பதிவாளர் கருதுவாரேயானால் அது சம்பந்தமாக விசாரணை நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட சங்க இயக்குநர் குழுவிற்குத் தெரிவிக்கலாம்.'

(2) ஒரு பதிவான சங்கத்தில் சம்பளம் வாங்கும் ஓர் அதிகாரி அல்லது பணியாளர் குற்றங்கள் செய்துள்ளார் அல்லது அவ்வாறு செய்வதற்கு பொறுப்பாளியாக இருந்துள்ளார் என்று இயக்குநர் குழு கருதுமேயானால், விசாரணை நடத்தி அதன்மீது சம்பந்தப் பட்ட பணியாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாம்.

(3) புகார் தொடர்பாக விசாரணை முடிவாகாமலிருக்கும் பொழுது, பொது நலனை அல்லது மேற்படி சங்கத்தின் நலனை முன்னிட்டு இயக்குநர் குழு தற்காலிக வேலை நீக்க நடவடிக்கை அவசியமென கருதுமேயானால் தற்காலிக வேலை நீக்க நட வடிக்கை எடுக்கலாம்.

(4) தற்காலிக வேலை நீக்க நடவடிக்கையினை எந்தக் காரணம் கொண்டும் 1 ஆண்டுக்கு மேல் நீடிக்கக்கூடாது.

(திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: ஸ்பீக்கர் சார், 76-வது செக்ஷனிலே வருவதைப் போலவே, 81-வது செக்ஷனிலும் என்குயரி சம்பந்தமாகவும், அதேபோல பெய்ட் ஆபீசர்களுக்கு எதிராகவும், சர்வென்ட்சுக்கு எதிராகவும் கம்ப்ளெயின்ட்ஸ் வந்தால் என்ன என்ன முறையிலே அவைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது சம்பந்தமாக சில விவரங்கள் கொடுக்கப்பட்டி ருக்கின்றன. இதில் நான் என்ன சொல்லிக் கொள்ளவிரும்பு கிறேன் என்றால் இந்த கூட்டுறவுச் சட்டத்தின் கீழ், கூட்டுறவு நூற்பாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் வரு கிறது, அதே போல மற்ற ஆலைகளில் உள்ள தொழிலாளர் களுக்கும் வருகிறது. பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இப்படி இதன் கீழ் வருவதன் காரணமாக அவர்களையெல்லாம் ஒருங்கிணைப்புச் செய்கின்ற முறையில், இன்டஸ்ட்ரியல் எம்பி ளாயின்மென்ட் ஸ்டேண்டிங் ஆர்டர்ஸின் கீழ் ஒரு ஸ்டேண்டிங் ஆர்டர் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில், இந்த செக்ஷன் 81 பிரிவிலே எல்லாம் என்ன பார்க் கிறோம் என்றால், சம்பந்தப்படாதவர்கள் கூட தண்டிக்கப்படக் கூடிய ஒரு ஆபத்து ஏற்படுகிறது.

ஒரு சங்கத்தினுடைய தலைவருக்கு நேரடியாக சம்பந்தம் இல்லாமல் கூட ஒரு சிப்பந்தி செய்யக்கூடிய தவறுக்காக தலை வரும் தண்டிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படுகின்றது. கூட்டுத் தொழிலாளர் தண்டிக்கப்படக்கூடிய ஆபத்து ஏற்படுகின்றது. செக்ஷன்

81 என்கொயரின் கீழ் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படும். உதாரணமாக ஒரு கூட்டுறவுச் சங்கம் நடத்துகின்ற அரிசிக் கடையிலே வெய்மென்ட்டில் தகராறு ஏற்படுகிறபோது சங்கத் தலைவரையும் அலுவலகத்தில் இருக்கும் மேனேஜரையும் கூட தண்டிக்கக் கூடிய நிலைமை ஏற்படுகின்றது. ஆகவே பணியாளர்களின் வேலை நிலைமையினைப் பொறுத்தவரையில் சரியான ஒரு நிலைமை ஏற்படுவதற்காக இன்டஸ்ட்ரியல் எப்ப்ளாயிமென்ட் ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ் ஆக்ட் இந்தப் பணியாளர்களுக்குப் பொருந்தும் என்ற முறையில் ஒரு ஷரத்து உருவாக்க வேண்டும். ஜாயின்ட் ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ் என்று பல கூட்டுறவு நூற்பாலைகளில் உருவாக்கப்பட்டிருப்பதைப் போல ஜாயின்ட ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ் உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 76-வது பிரிவிலே சங்கத்தின் சம்பளம் பெறும் அதிகாரி அல்லது பணியாளரை வேலையிலிருந்து தற்காலிகமாக விலக்கி வைத்தல் என்பது இருக்கின்றது. இதிலே 2(1) பிரிவிலே குறிப்பிட்டிருப்பதை அப்படியே வாசிக்கிறேன். ''பதிவான சங்கத்தின் நியமனக் குழு விதிகளில் அல்லது துணை விதிகளில் அல்லது ஆணையில் இதற்கு முரணாக என்ன விதிமுறை கண்டிருப்பினும் மேற்சொன்ன சம்பளம் பெறும் அதிகாரியை அல்லது பணியாளரை உடனடியாக வேலையிலிருந்து தற்காலிகமாக விலக்கி வைக்க வேண்டும் அல்லது அவ்வாறு செய்விக்க வேண்டும்.'' என்று இருக்கின்றது. பதிவாளருக்கு இந்த அதிகாரம் இருக்கின்றது. சங்கத்தின் பைலா எப்படி இருந்தாலும் கவலையில்லை, அல்லது விதிகள் எப்படி இருந்தாலும் அதை எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை, பதிவாளர் உத்திரவு போட்டுவிட்டால் அந்த உத்தரவைச் சங்கம் அப்படியே நிறைவேற்றவேண்டும். அப்படி நிறைவேற்றவில்லை என்றால் அதற்காக கட்டளையிடக்கூடிய அதிகாரம் பதிவாளருக்கு இருக்கின்றது. இப்படிப்பட்ட அதிகாரம் பதிவாளருக்கு இருக்கின்றது. விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு கட்டளை இருந்தால் கூட அதனை நிறைவேற்ற வேண்டும் என்று இருக்கின்றது. இந்த முறை இருப்பது சரியல்ல. இந்த முறை கூடாது என்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

எனவே பதிவாளர் இம்மாதிரியான முறையிலே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சங்கத்தினுடைய விதிகளுக்கு உட்பட்ட முறையில் பைலாவிற்கு உட்பட்ட முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற முறையிலே கருத்துக்களையும், ஆலோசனைகளையும் சொல்லலாம். அந்த அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு சங்கத்திற்கு இருக்கின்றது என்ற முறையிலே என்னுடைய திருத்தத்தை நான் கொடுத்திருக்கிறேன். எனவே முழுமையாக 76-வது பிரிவை மாற்றம் செய்து அமைக்க வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். எக்காரணத்தைக் கொண்டும் தற்காலிக வேலை நீக்கம் என்பது ஆண்டுக்

கணக்கில் செல்லக்கூடாது. அது ஓராண்டுக்கு மேல் செல்லக் கூடாது. அதற்கான முறையில் ஒரு திருத்தம் கொடுத்து இருக் கிறேன். அதனை அமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 76-வது பிரிவைப் பொறுத்தவரைக்கும் ஒரு கூட்டுறவுச் சங்கம் தவறு புரிகிற ஒரு பணியாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக ஒரு பிரிவு தரப்பட்டிருக்கின்றது. இது ஏன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்கிறேன். பல நேரங்களில் நடைமுறையில் நாம் பார்த்திருக்கிறோம்; ஆய்விலும் நாம் கண்டறிந்த உண்மையாகும். கூட்டுறவுச் சங்கத்தை சேர்ந்த நிர்வாகக் குழுவைச் சேர்ந்தவர்கள் அந்தப் பகுதியிலே செல்வாக்கு மிக்கவர்களாகவும், வசதி படைத்தவர்களாகவும் இருந்தால் அவர்கள் தவறு செய்கின்ற போது பணியாளர்களும் அதற்கு உட்படுத்தப்படுகிறார்கள். எனவே அவர்கள் மீது நட வடிக்கை எடுக்கப்படுகின்றபோது பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லையே என்று ஆய்வுக்குழுவிலே பலர் சொன்னார் கள். அந்த அடிப்படையில் சில நேரங்களில் சில தவறுகள் நடக்கின்றபோது சங்கமும் உடந்தையாக இருந்து நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டு, தவறுகள் தொடர்ந்து நடக்குமேயானால் அப்போது அந்த சங்கத்தை ஒழுக்க முறைக்கு கொண்டுவர வேறு வழிவகையே இல்லாத நிலைமை ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தால் பதிவாளர் குற்றத்தைக் கண்டுபிடித்து குற்றம் நிரூபிக்கப்பட்டதற்குப் பிறகு சங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அறிவுறுத்திய பிறகு அப்போதும் சங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால்தான் இந்தப் பிரிவு பயன்படும். எனவே இந்த காரணத்தால் இந்தப் பிரிவு இருப்பதால் இந்தத் திருத்தத்தை ஏற்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 12—20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி.— In clause 76—

(i) *for* the expression "common cadre of employees", wherever it occurs *substitute* the expression "common cadre of service";

(ii) in sub-clause (1), *for* the expression "the appointment committee or the apex or central society as the case may be", *substitute* the expression "the competent authority constituted under sub-section (3) of section 75";

(iii) in sub-cla ses (2), (3) and (4), *for* the expression "appointment committee or apex or central society" wherever it occurs, ***substitute*** the expression "competent authority".

[1983 மார்ச் 4]

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது. திரு. இரா. கருப்பையா அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 76. திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 77

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி.—

"பிரிவு 77 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.—

In clause 77.—

(i) in sub-clause (1), *for* the words "common cadre of employees, the appointment committee, or the apex or central society as the case may be", *substitute* the words "common cadre of service, the competent authority constituted under sub section (3) of section 75", and *for* the expression "appointment committee or the apex or central society", *substitute* the expression "competent authority";

(ii) in sub-clauses (2) and (3), *for* the expression "appointment committee or the apex or central society", *substitute* the expression "competent authority";

(iii) in sub-clause (4)—

(*a*) *for* the words "from the service of such society", *substitute* the words "from service";

(*b*) *omit* the words "in the service of that society".

Thiru J. HEMACHANDRAN: Sir, I move the following amendment:—

Substitute the following for clause 77:—

"Further, the Government shall formulate in consultation with the Registrar and Representatives of management and employees of the Co-operative Societies, the classifications and scales of pay of the employees including paid officers and servants employed in all types of Co-operative Societies, and that as soon as possible, after it is made

be placed on the table of both the Houses of the Legislature, and if, before the expiry of the session in which it is so placed or the next session both the Houses agree in making any modification in any such rule, or both houses agree the rule should not be made, the rule shall therefore have effect only in such modified form or be of no effect, as the case may be, so however that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule."

The amendment was duly seconded.

*திரு. இரா. கருப்பையா: நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

(1) தற்போதைய பிரிவு 77-க்குப் பதிலாக கீழ்க்கண்டவாறு சேர்க்கவும். "(77)(1) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் சம்பளம் பெறும் அதிகாரி அல்லது பணியாளர் கிரிமினல் குற்றங்களுக்காக ஒரு தகுதி வாய்ந்த நீதி மன்றத்தால் குற்றவாளி என தண்டிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டார் எனத் தெரியவந்தால் பொது நலனை அல்லது மேற்படி சங்கத்தின் நலனை முன்னிட்டு அந்தச் சம்பளம் பெறும் அதிகாரியை அல்லது பணியாளரை பணியிலிருந்து நீக்குவது அவசியமென்று கருதினால் அந்த சம்பளம் பெறும் அதிகாரி அல்லதுபணியாளர் முறையீடு செய்து கொள்ள வாய்ப்பு அளித்த பின்னர் அவரைப் பணியில் நியமித்துள்ள சங்கத்தின் குழு பணியிலிருந்து நீக்கலாம்."

(2) மேற்சொன்ன அதிகாரி அல்லது பணியாளருக்கு இம் மாதிரி வழங்கப்பட்ட தண்டனை மேல்முறையீட்டு நீதி மன்றத்துக்கு மேல்முறையீடு செய்து, அது முடிவடையாது உள்ள காலத்தில் பணியிலிருந்து நீக்கக்கூடாது.

(திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று ஊழியர்களைப் பொறுத்த அளவில் சில தவறுகள் செய்யக்கூடிய நேரத்தில் எப்படி அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற பிரச்சனைகளைப்பற்றி எல்லாம் அமைச்சர் அவர்கள் விளக்கினார்கள். 77-வது சரத்திலே ரிஜிஸ்ட்ரார் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு ரிஜிஸ்ட்டிராருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் அரசு ரிஜிஸ்ட்டிராருக்கு இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற இடத்தில் The Government, in consultation with the Registrar and the representatives of the Management and employees of co-operative societies.

1983 மார்ச் 4) (திரு. ஜே. ஹேமச்சந்திரன்)

இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எப்படி எப்படி எடுக்கப்பட வேண்டும் என்று விதிகளை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த விதிகள் இந்த அவையில் வைக்கப்பட்டு அவையினுடைய ஒப்புதல் வாங்கக்கூடிய முறையில் இந்த இடத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். அப்படியிருந்தால்தான் இந்த கூட்டுறவு சங்கத்தை பொறுத்த அளவில் நல்ல முறையில் செயலாற்றவேண்டும் என்ற நோக்கத்தோடு நிறைவேற்றப்பட்ட இந்த சட்டத்திலே இதை அமுலுக்குக் கொண்டுவரவேண்டிய ஒரு முக்கிய பொறுப்பில் இருக்கும் பணியாளர்களுக்கு தகுந்த பாதுகாப்பான நடவடிக்கை கொடுக்கக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்த இந்த பணியாளர்கள் சம்பந்தமாக பணியாளர்கள் மேல் எடுக்கும் ஒழுங்கு நடவடிக்கைகள் சம்பந்தமான சட்டங்கள் அல்லது பை—லாஸ் அண்டு ரூல்ஸ் இந்த அவையில் கொண்டு வரப்பட்டு அவையின் ஒப்புதல் வாங்கவேண்டும் என்று ஒரு திருத்தத்தைக் கொடுத்து இருக்கிறேன். அதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாளர்கள் நல்ல முறையில் அவர்களுடைய கடமைகளை ஒழுங்காக செய்யவேண்டும் என்பதில் எந்த விதமான மாற்று கருத்தும் இருக்க முடியாது. கூட்டுறவுச் சங்கங்களில் அவர்கள் தங்களுடைய கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றுவதன் மூலம் அதனுடைய வளர்ச்சிக்கு அவர்கள் பாடுபடவேண்டும். தவறு இழைக்கக்கூடியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதிலும் மாற்று கருத்து இருக்க முடியாது. ஆனால் இந்தமாதிரியான நடவடிக்கைகளின் மூலமாக பல்வேறு இடங்களில் நடைபெறக்கூடிய பல சம்பவங்களை, வாய்ப்பு ஏற்படும்போது எல்லாம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டு வந்திருக்கிறேன். அனாவசியமாக எந்தவிதமான ஆதாரமும் அற்ற புகார்கள் மீது ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கபடக்கூடிய நிலை இருக்கிறது. உதாரணமாக ஒரு சிவில் சப்ளைஸ் ரேஷன் கடையில் அரிசி, சர்க்கரை வினியோகிக்கக் கூடிய ஊழியர்கள் தவறு செய்கிறார்கள் என்றால் அதற்கான முறையில் கண்காணித்து நடவடிக்கை எடுப்பதில் எல்லா அதிகாரமும் அதிகாரிகளுக்கு இருக்க வேண்டும். ஆனால் அதே நேரத்தில் சிலயிடங்களில் சில ரவுடிகள் சேர்ந்து கொள்கிறார்கள். அவர்கள் 10 கிலோ சர்க்கரை கொடுக்க வேண்டும் என்றும் $\frac{1}{2}$ மூட்டை சர்க்கரை கொடுக்கவேண்டும் என்றும் 1 மூட்டை அரிசி கொடுக்கவேண்டும் என்றும் நிர்பந்தப் படுத்தி வாங்கிக்கொள்கிறார்கள். அந்த இடங்களில்

ஊழியர்கள் ஒன்று இரண்டு பேர்கள் தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. திடீர் என்று அதிகாரிகள் வருகிறார்கள். என்ன நடந்தது என்பதைப் பற்றி பரிசீலனை செய்து விசாரணை நடத்த அவகாசம் இல்லாத நிலையில் உண்மையில் குறைந்து இருக்கிறதா? எந்த மாதிரி நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆக இந்தமாதிரியான சந்தர்ப்பங்கள் சூழ்நிலைகள் இவை அனைத்திலும் முறையான விசாரணை எடுத்து அவர்கள் மீது நடவடிக்கை—உண்மையி லேயே தவறு செய்து இருக்கிறார்கள் என்றால் அவர்களை பிடிக்க அதற்கான முறையில் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் தவறான புகார்கள் மீது அல்லது சில சந்தர்ப்பங்களில் இம்மாதிரியான நிலைகள் ஏற்படக்கூடிய நேரங்களில் சாதாரண ஊழியர்கள் பழி வாங்குவதற்கான நிலைமைகள் ஏற்படுகிறது, என்பது ஒரு புறத்தில். மேல் இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு முழுமையான தன்மையும் தெரிந்துக்கொள்ளக் கூடிய வாய்ப்பு இருக்காது மற்றொரு புறத்தில். இன்றைய தினம் நாட்டில் இருக்கக்கூடிய எல்லா நிலைமையும் அமைச்சர் அவர் களுக்கும் தெரியும். எல்லோருக்கும் தெரியும். தொழிற் சங்கங்களிலே இருக்கிற நிலைமைகள் காரணமாக எல்லா ஆட்சிகளிலும் இருக்கிற ஒரு முறைதான், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய சங்கங்களை வளர்க்க வேண்டும் மென்று சில நடவடிக்கைகளை ஊக்குவித்து செயல்படுத்துகிற நிலைமை இருக்கிறது. பல இடங்களிலே நடந்து வருகிறது. அந்த மாதிரியான நேரங்களில் மற்ற ஊழியர்களுக்கு எந்த விதமான பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே இருக்கிற அதிகாரங்களைத் தவறாக பயன்படுத்துகிற நிலையில் ஊழியர்களுக்கு போதுமான பாதுகாப்பு இல்லாத நிலையில் இந்தமாதிரியான அதிகாரங்களை பதிவாளர் போன்ற உயர்ந்த பொறுப்பிலே உள்ளவர்களுக்கு கொடுக்கிற போது ஆங்காங்கே இருக்கின்ற நிலைமைகளை அவர்கள் நேரடியாகத் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு இல்லை. பதிவாளர் என்பவர் மாநிலம் முழுவதும் இருக்கிற 25 ஆயிரம் சங்கங்களிலும் உள்ள நிலைமைகளை நேரடியாகத் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு இல்லாத நிலையில் இருக்கிறவர்—எல்லாவற்றையும் எப்படி அவர் கண்காணிக்க முடியும், ஆகவே அதிகமான அதிகாரங்களை மேலும் மேலும் நாம் கொடுப்பது சரியல்ல, சரி, ஒரு குற்றச்சாட்டு வந்திருக்கிறது என்றால் இயற்கை யாகவே அது சம்பந்தமாக இதைச் செய்ய வேண்டுமென்றும் உத்திரவுகளை இடுவது இயற்கையாகவே நடைபெறக் கூடிய காரியங்கள். ஆகவே அந்த அடிப்படையில் இம்மாதிரி யான அதிகாரங்கள் கூடாது என்ற அடிப்படையிலே சம்பந்தப் பட்ட சங்கம் அதை விசாரித்து தேவையான, விசாரணை களை முழுமையாகச் செய்து என்ன தண்டனை வழங்க வேண்டுமோ அப்படி வழங்கவேண்டுமென்ற அடிப்படை யிலே அதிகாரிகள் இருக்கவேண்டுமென்ற முறையிலேதான்

இந்தத் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஊழி யர்களின் நலன் பாதிக்கப்படக்கூடாது என்ற உணர்வோடு கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்தத் திருத்தத்தை அமைச்சர் அவர் கள் ஏற்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: 77-வது பிரிவைப் பொறுத்தவரைக்கும்

Where a paid officer or servant of a registered society has been found guilty of or convicted by a competent court for an offence involving moral turpitude, the Registrar may, if in his opinion direct the concerned society to take appropriate action என்ற நிலை இருக்கிறது. அதிலே வந்து ரிஜிஸ்திராரோ குற்றத்தை ஆராய்ந்து அந்த அடிப்படையில் உத்தரவு தரு வதில்லை. நீதிமன்றத்திற்குச் சென்று காம்பிடென்ட் கோர்ட் டிலே அவருக்கு தண்டனை வழங்கப்படுமேயானால் தண்டனை வழங்கப்பட்டதற்குப் பிறகு குற்றவாளி என்று நிரூபணம் ஆனதற்குப் பிறகுதான் சங்கத்திற்குச் சொல்கிறார், நட வடிக்கை எடுக்கவேண்டுமென்று. அப்போதும் அந்தச் சங்கம் நடவடிக்கை எடுக்காத நேரத்தில் பதிவாளர் வலியுறுத்தக் கூடிய நிலைதான் இருக்கிறது. அது மட்டுமல்லாமல், இன்னும் ஒரு ஷரத்து இருக்கிறது.

appeal to the Registrar or revision to Government என்ற முறையிலே குற்றம் செய்தவர் குற்றவாளியல்ல என்று மேல் நீதிமன்றத்திலே தீர்ப்பாகிவிட்டால் அந்த குறிப்பிட்ட பணியாளரைப் பணியிலே சேர்க்கவேண்டுமென்று சங்கத்திற்கு சொல்லியும் சில நேரங்களிலே சங்கம் மறுக்கிறது. குற்றவாளி யல்ல என்று நீதிமன்றம் சொல்லி விட்டாலும்கூட பணியிலிருந்து நீக்கப்பட்ட பணியாளரை மீண்டும் பணியிலே ஏற்றுக்கொள் வதில்லை.

He is once for all removed from service.

நாலாவது உட்பிரிவிலேயும் சொல்லியிருக்கிறோம்.

Where a paid officer or servant of a registered society removed from service under sub-section (2) or sub--section (3) is acquitted by the competent court, or when the conviction of such officer or servant is set aside on appeal or revision by the appellate court, such officer or servant shall be reinstated to s me post held by him prior to such removal. என்று குறிப்பிட்டிருக்கிறோம். ஆகவே இதற்கும் ஊர் தான் உத்தரவிட வேண்டியிருக்கிறது. எனவே இது ஒரு விசத்தில் பணியாளர்களுக்கு நன்மையாகவும் இருக்கிறது. தவறு செய்தவர்கள்மீது நிர்வாகக் குழு ஒரு வேளை நடவடிக்கை எடுக்கத் தவறுகிறபோது நிர்வாகத்தின் தூய்மைக்கான சேவையான பிரிவாக இது இருக்கிற காரணத்தால இதை ஏற்றுக் கொள்ளு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

In clause 77,—

(i) In sub-clause (1). *for* the words "common cadre of employees, the appointment committee," or the apex or central society as the case may be ", *substitute* the words "common cadre of service, the competent authority constituted under sub-section (3) of section 75", and *for* the expression "appointment committee or the apex or central society" *substitute* the expression "competent authority";

(ii) in sub-clauses (2) and (3), *for* the expression "appointment committee or the apex or central society", *substitute* the expression "competent authority";

(iii) in sub-clause (4),—

(a) *for* the words "from the service of such society", *substitute* the words "from service";

(b) *Omit* the words "in the service of that society".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், இரா. கருப்பையா ஆகியோருடைய திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றன.

பிரிவு 77, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(பிற்பகல் 12-30)

பிரிவு 78

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:— "பிரிவு 78 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

THIRU J. HEMACHANDRAN : Sir, I move the following amendment :—

In clause 78

1983 மார்ச் 4] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

Substitute the following for clause 78 (1)

"78(1) *BONUS* : Every employee of every registered Co-operative Society shall, irrespective of loss or profit, be paid ten (10) per cent of his total annual wages for the respective year as minimum bonus. He shall get more bonus as provided in the Rules to be framed, if there will be net profit."

Re-number the existing sub-clauses (1) and (2) as sub-clauses (2) and (3) and in sub-clause (2) as so re-numbered, *add* the following words at the end:

"and at such rates which shall be equal to those provided in the Employees Provident Funds and Miscellaneous Provisions Act, 1952 (Central Act XIX of 1952)".

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

''பிரிவு 78-ல் உட்பிரிவு (1)-ல் 6-வது வரியில் 'ஏற்படுத்தலாம்' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'ஏற்படுத்தும்' என்ற வார்த்தையைச் சேர்க்கவும்.''

''பிரிவு 78-ல் உட்பிரிவு (1)-ல் 6வது வரியில் 'சங்கத்தின் துணை விதிகளை' என்ற வார்த்தைகளை நீக்கவும்''.

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்குப் போனஸ், பிராவிடண்ட் பண்ட் கொடுக்கப்பட வேண்டும் என்பது சம்பந்தமான என்னுடைய திருத்தத்தை நான் பிரேரித்து ஒருசில கருத்துக்களை சொல்லவிரும்புகிறேன். நான் ஏற்கெனவே இன்னொரு ஷரத்து சம்பந்தமாக பேசுகிறபோது, தொழிலாளிகளுக்குக் குறைந்தபட்ச போனஸ் என்பது இன்றைக்கு மத்திய, மாநில அரசுகளால் ஏற்றுக்கொண்டுள்ள கொள்கை என்பதை எடுத்துக்காட்டினேன். இந்தச் சட்டத்திலேகூட போனஸ் ஆக்ட்டினுடைய பர்வியூவிலே வரக்கூடிய தொழிலாளிகளுக்குப் போனஸ் கிடைப்பதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. போனஸ் சட்டத்தின் கீழ் வராத தொழிலாளிகளுக்கும் போனஸ் கிடைப்பதற்கு உத்தரவாதம் செய்யக்கூடிய முறையிலே அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இன்றைக்குக் கூட்டுறவு நூற்பாலைகள், சர்க்கரை ஆலைகளில் பத்து தொழிலாளர்களுக்கு மேற்பட்டு இருக்கிற இடங்களில் போனஸ் கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆனால் பத்து தொழிலாளர்களுக்குக் கீழே

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1983 மார்ச் 4

வேலை செய்கிற ஸ்தாபனங்கள்தான் இன்றைக்கு கூட்டுறவில் பெருவாரியான அமைப்புக்களாக இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். அந்த முறையில் அந்தத் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்சம் போனஸ் கிடைப்பதற்கு உத்தரவாதம் கொடுக்கப்படவேண்டும். ஒத்தி வைக்கப்பட்ட ஊதியம் என்கிற கொள்கை இந்த மாநில அரசும் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்ற காரணத்தால் அவர்களுக்கு 10 சத வீதம் போனஸ் கிடைப்பதற்கு இந்த சட்டத்தில் வழி செய்யும் வகையில் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொளகிறேன்.

அதுமட்டுமல்ல. பிராவிடண்ட் பண்ட் பொறுத்தவரையில் கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டத்தில் என்ன சொல்லியிருக்கிறது என்றால், 'பிராவிடண்ட் பண்ட் இன் அக்கார்டன்ஸ் வித் பை-லா'', பிராவிடண்ட் பண்ட் என்பது பிராவிடண்ட் பண்ட் ஆக்ட்டின் கீழே வந்திருக்கிற ஒரு சலுகை தொழிலாளர்களை பொறுத்தவரையில்; பிராவிடண்ட் பண்ட் ஆக்ட்டிலே எத்தனை சதவீதம் தொழிலாளிகள் கன்ட்ரிபியூட் பண்ண வேண்டும்; அதைப் போல நிர்வாகம் எவ்வளவு சதவீதம் கன்ட்ரிபியூட் பண்ண வேண்டும்; என்று தெளிவாக எடுத்துச் சொல்லியிருப்பதால், அவை இங்கு சேர்க்கப்பட வேண்டும். அப்படி இல்லையென்றால், 'இன் அக்கார்டன்ஸ் வித் தி பை-லா, என்று குறிப்பிட்டால் ஒவ்வொரு சொசைட்டியும், பல்வேறு முறையில் பெர்சென்டேஜ் நிர்ணயிக்கும் ஆபத்து, அபாயம் இருக்கிறது. அனைத்து தொழிலாளர்களுக்கும் ஒரே முறையில் பிராவிடண்ட் பண்ட் கிடைப்பதற்கு வழி செய்யும் வகையில் 'இன் அக்கார்டன்ஸ் வித் தி பை-லா' என்பதற்குப் பதிலாக,

"and at such rates which shall be equal to those provided in the Employees Provident Funds and Miscellaneous Provisions Act, 1952 (Central Act XIX of 1952)"

என்ற என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. இரா. கருப்பையா: 78 ஆவது பிரிவில் வருங்கால வைப்பு நிதி என்ற பெயரில் என்னுடைய பெயரால் இரண்டு திருத்தங்கள் கொடுத்து இருக்கிறேன். அரசாங்கம், இந்த வருங்கால வைப்பு நிதி எல்லா ஊழியர்களுக்கும் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இதைக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் இதிலே இருக்கிற வாசகங்களைப் பார்க்கிறபோது, நடைமுறையில் இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படும் என்கிற முறையில்தான் இருக்கிறது. ஆகவேதான் அந்த இடையூறுகளை நீக்கக்கூடிய முறையில் தெளிவாக வாசகங்களை அமைக்க வேண்டுமென்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். 'ஏற்படுத்தலாம்' என்பதற்குப் பதிலாக 'ஏற்படுத்தும்' என்ற வகையில் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னதைப் போல 'சங்கத்தினுடைய துணை விதிகளை ஒட்டி' என்று வாசகம் அமைக்கப்பட்டிருக்கிறது. வருங்கால வைப்பு நிதி எந்த அடிப்படையில் கொடுக்க வேண்டும், ஊழியர்கள் எவ்வளவு கொடுக்க வேண்டும்; எம்ப்ளாயர்ஸ் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்ற முறையில் சட்டத்தில் வரையறுக்கப்பட்டிருக்கிற நிலை; அதற்கு மேலே 'சங்கத்தினுடைய துணை விதிகளுக்கேற்ப' என்று குறிப்பிடுவது, அது பொருந்தாத நிலையில் இருக்கிறது.

இப்படிக் கொடுத்தால் ஒவ்வொரு சங்கமும் 2 சதவீதத்திலிருந்துகூட ஆரம்பிக்கலாம். ஆகவே, அது சரியான ஒரு முறையிலே இருக்காது. ஆகவேதான், "சங்கத்தின் துணை விதிகளுக்கு ஏற்ப" என்று இருக்கும் அந்த வாசகத்தை நீக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேன். அரசாங்கம் என்ன நோக்கத்தோடு இதைக் கொண்டு வந்திருக்கிறதோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான முறையிலே, சந்தேகத்திற்கு இடமில்லாத முறையிலே, அதை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் திருத்தத்தை முன் மொழிந்திருக்கிறோம். ஆகவே, இதை ஏற்று நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்டச் சட்டப் பிரிவைப் பொறுத்தவரைக்கும், his p ovid s f r constitution of a provident Fund b/ a socicty not covered by Employees Provident Fund Act. என்ற முறையில்தான் இதை நாம் கொண்டு வந்திருக்கிறோம். சில தொழிற்சாலைகளில் குறிப்பிட்ட அளவுக்கு மேல் பணியாளர்கள் இருக்கிற பொழுது குறிப்பிட்ட அளவிற்கு மேல் அவர்கள் ஊதியத்தைப் பெறுகின்ற பொழுது அவர்களுக்கு Emplo e s Provident Fund A t appli bl ஆக இருக்கிறது. பல இடங்களில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் சொன்னதைப் போலவும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா சொன்னதைப் போலவும், குறைந்த அளவிலே எண்ணிக்கை உள்ள பணியாளர்கள் இருப்பதுதான் கூட்டுறவுச் சங்கத்திலே 90 சதவீத நிலையாக இருக்கிற காரணத்தால் அவர்களுக்கும் பிராவிடண்ட் பண்ட் பலன் கிட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் இந்தப் பிரிவினை நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

அதிலே மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா **அவர்கள் பேசும் பொழுது குறிப்பிட்டது,**

The Establishmnet of the funds shall be in accordance with the provisions of the bye-laws. என்று இருப்பது சங்கத்துக்குச் சங்கம் மாறுபட்ட நிலையையும் பணியாளர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்காது ; நல்ல பலன் கிட்டாது என்ற நிலையையும் ஏற்படுத்தும் என்று சொல்லி யிருக்கிறார்கள்.

The bye laws also can be only in accordance with the rule and the major Substantive provisions of law. என்ற முறையிலே, நான் ஏற்கனவே பலமுறை சொல்லியிருப் பதைப்போல, இந்த விதிகளை நாம் இயற்றுகிற பொழுது, விரைவிலே மாண்புமிகு உறுப்பினர்களுடைய அரிய ஆலோ சனைகளைக் கேட்டு, அந்த அடிப்படையிலே, நாம் ஒட்டு மொத்த மாக நலிந்த பிரிவினருக்கு நன்மை தரக் கூடிய ஒரு விதியாகவும் சட்டத்தை ஒட்டிய விதியாகவும் இது அமைய வேண்டியிருக்கிற காரணத்தால் அதுபோன்ற பாதுகாப்புகளை எல்லாம் விதியிலே தர அரசு நடவடிக்கை எடுக்கும். எனவே, இதை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

திருவாளர்கள் இரா. கருப்பையா, ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோருடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும் பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—"பிரிவு 78 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்". தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று பிரிவு 78 நிறை வேற்றப் பெற்றது.

பிரிவு 79.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "பிரிவு 79 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

Thiru J. HEMACHANDRAN : Sir, I move the following amendment.—

In sub clanse (1) of clau e 79, *add* the following words after th words 'at such rates' and before the words 'on such conditions' which shall be equal to these provided in the payment of Gratuity Act. 197.. (Central Act 39 of 1972)

The amendment was duly seconded.

*திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

1983 மார்ச் 4] [திரு. இரா. கருப்பையா]

பிரிவு 79 இல் உட்பிரிவு (1) இல் வரும் கீழ்க்கண்ட வார்த்தைகளை நீக்கவும்.

'' துணை விதிகளில் குறிப்பிடக்கூடிய வீதங்களிலும் குறிப்பிடக்கூடிய நிபந்தனைகளின் பேரிலும் '', மேலும் 'ஏற்படுத்தலாம்' மற்றும் 'செய்யலாம்' என்ற சொற்களுக்குப் பதிலாக முறையே 'ஏற்படுத்தி' மற்றும் 'செய்யும்' என்ற சொற்களைச் சேர்க்கவும் ''.

திருத்தம் முறைப்படி வழி மொழியப் பெற்றது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே போனஸ் சம்பந்தமாகவும் பிராவிடண்ட் பண்ட் சம்பந்தமாகவும் சொல்லப்பட்ட அதே பிரச்சினைகள், இந்த 'பேமன்ட் ஆப் கிராச்சுவிட்டி' சம்பந்தமான பிரச்சினைகளிலும் இருக்கிறது என்ற காரணத்தால்தான் இந்தத் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Gratuity funds at such rate and on such conditions என்று போட்டப்பட்டிருக்கிறது. கிராச்சுவிட்டி சம்பந்தமாக, '' பேமண்ட் ஆப் கிராச்சுவிட்டி ஆக்ட் '' என்ற ஒரு சட்டத்தை 1972-லே மத்திய அரசு கொண்டு வந்து, 10-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றக்கூடிய ஸ்தாபனங்களுக்கு அந்தச் சட்டத்தை இன்றைக்கு நடைமுறைப்படுத்தி வருகிறது. ஆகவே, இன்று ஒரு தொழிலாளி 58 வயது அல்லது 60 வயது பணியாற்றியதற்குப் பிறகு ஓய்வுப் பெற்றுச் செல்லும் நேரத்தில் ஓய்வுக்கால ஊதியம் என்ற முறையில்தான் இந்த கிராச்சுவிட்டி நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, கிராச்சுவிட்டி பொறுத்தவரைக்கும் இன்று 15 நாள் ஊதியம் ஒரு வருஷத்திற்கு என்ற முறையிலே தொழிலாளர்களுக்குக் கிடைத்து வருகிறது. ஆகவே, at such rate என்ற முறையிலே இப்படிப்பட்ட பல சங்கங்கள் பல முறைகளிலே 'ரேட்டு'கள் நிர்ணயிப்பதற்குத் தடை இருக்க வேண்டும் என்ற வகையில், கிராச்சுவிட்டி ஆக்டிலே குறிப்பிடப்பட்டிருப்பதை 15 நாள் ஊதியம் ஒரு வருஷத்திற்கு என்று கிராச்சுவிட்டி கொடுக்கக் கூடிய முறையில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்ற முறையில்தான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, இந்தத் திருத்தத்தினை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணிக் கொடை நிதி சம்பந்தமாகவும், ஏற்கெனவே வருங்கால வைப்பு நிதி சம்பந்தமாக நான் சொல்லிய கருத்துக்களையே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. இரா. கருப்பையா] [1983 மார்ச் 4

(பிற்பகல் 12–40)

சர்க்காருடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான வகையிலே, தெளிவாக, எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமில்லாத முறையிலே சங்கத்தினுடைய விதிகள், நடைமுறைகள் என்பதெல்லாம் குறிப்பிடாமல் போடுவது, அந்தப் பயன் அந்த ஊழியர்களுக்குக் கிடைப்பதற்கு உதவியாக இருக்குமா ? ஆகவே அந்த முறையிலேதான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறோம். அமைச்சரவர்கள் இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 78 ஆவது பிரிவுக்கு நான் சொன்ன விளக்கத்தைப் போலத்தான் 79 ஆவது பிரிவைப் பொறுத்த வரைக்கும், 'The establishment of gratuity funds is meant only for such of those societies not covered by the payment of Gratuity Act.' என்ற முறையிலேதான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். அந்த கிராச்சுவிட்டி ஆக்ட்டுக்கு உட்பட்டு வரும் தகுதியிலே உள்ள சங்கத்திலேயெல்லாம் ஆட்டோமேட்டிக்காக வந்து விடுகிறது. மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் கூட என்னிடத்திலே சொன்ன பொழுது, இதை அனைத்துச் சங்கங்களுக்கும், கிட்டத்தட்ட ஒரே சீரான அளவில் இருக்கக் கொண்டு வருவதுதான் பணியாளர்களிடையே அதிருப்தியின்மையில்லாத நிலையை உருவாக்கும் என்று சொன்னேன். இதை நாம் நடைமுறைப் படுத்தும்பொழுது இதை விதியிலே எந்த அளவிற்கு கிராச்சுவிட்டி இருக்க வேண்டியிருக்கிறது. what are the categories or classes of societies and what is the quantum. என்பதையெல்லாம் நாம் நிர்ணயிக்க வேண்டியிருப்பதை, நான் ஏற்கனவே உறுதியாகச் சொல்லியிருப்பதைப் போல பேசி, சட்டமன்ற உறுப்பினர்களினுடைய ஆலோசனைகளின் அடிப்படையிலே இதை நான் நடைமுறைக்குக் கொண்டு வர ஏற்பாடு செய்கிறேன்.

திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், இரா. கருப்பையா ஆகியோரின் திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—'' பிரிவு 79 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, பிரிவு 79 நிறைவேற்றப் பெற்றது.

1983 மார்ச் 4]

பிரிவு 80.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :—" பிரிவு 80 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

*திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

" பிரிவு 80 இல் உட்பிரிவு (1) (b) (ii)-இல் 'ஆறு திங்களுக்குள்' என்ற சொற்களுக்குப் பதிலாக 'மூன்று திங் களுக்குள்' என்ற சொற்களைச் சேர்க்கவும்."

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திரு. இரா. கருப்பையா: தலைவரவர்களே, ஒரு குறிப் பிட்ட காலத்திற்குள் தணிக்கை முடிக்கப்பட வேண்டுமென்பதிலே இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. அதிலே பிரிவு 1 (பி) 2 ஆவது பிரிவிலே,

" சம்பந்தப்பட்ட பதிவு பெற்ற சங்கத்தின் கூட்டுறவு ஆண்டு முடிவடைந்ததிலிருந்து ஆறு திங்களுக்குள் அல்லது பதி வாளர் மேற்கொண்டு அனுமதிக்கக்கூடிய காலம் அல்லது கால அளவுகளுக்குள் தணிக்கை செய்து முடிக்கப்பட வேண்டும்; அவ் வாறு பதிவாளர் மேற்கொண்டுஅவகாசம் அளிப்பதற்கான கார ணங்களை எழுதி வைக்கவேண்டும். ஆனால், பதிவாளர் அனு மதிக்கக்கூடிய மொத்த கால அளவுகள் ஆறு மாதத்திற்கு மேற் படாமல் இருக்க வேண்டும்."

என்று இருக்கிறது.

